
# கிராம நலம்

தமிழக அரசு-மாத இதழ்




ஆகஸ்டு-செப்டம்பர், 1967



சென்னை கோட்டையில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில்,
சட்டமன்ற கட்சித்தலைவர்கள், சமுதாய வளர்ச்சி சீரமைப்புப் பற்றி ஆலோசித்தனர்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"


# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 12 ஆகஸ்ட்—செப்டம்பர் 1967 நெல் 11, 12


# விடுதலை நன்னாளில்....

## பொற்காலம் கண்டிட..

"ஆகஸ்டு பதினைந்து எனும் விடுதலைத் திருநாள் மகிழ்ச்சி, எழுச்சி, வீரஉணர்ச்சி ஆகியவைகளைத் துவக்கத்தில் தந்திட உதவிற்று. ஆண்டு இருபதைக் கடந்துவந்து விட்டோம். இன்றைய ஆகஸ்டு பதினைந்து, நமக்குப் பொறுப்புணர்ச்சிகளைத் தந்திடும் நாளாகிறது.

இந்நாள், நாட்டின் நிலையை நாம் அறிந்திட வேண்டும். சுதந்திரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திட வேண்டும். அப்போது தான், எதற்காக சுதந்திரம் பெற்றளித்தனரோ பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும், சுதந்திரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

நாடு வாழ நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் எழவேண்டும்.

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்காக எந்த அளவு தருகின்றோமோ, அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயரமுடியும்.

உமது ஒப்பற்ற ஆற்றலின் துணை கொண்டு நாடு எத்தகைய ஏற்றம் பெறப்போகிறது என்பது பற்றி எண்ணுகிறேன். ஒரு புன்னகைப் பூந்தோட்டம் என் எதிரே காணுகின்றேன். எழில் மிக்கதோர் எதிர்காலம் கண்டிட, வழி அமைத்திடும் நன்னாளே இத் திருநாள்!"

—மாண்புமிகு முதலமைச்சர்.

(வானொலிப் பேச்சு முழு விவரம், அடுத்தப் பக்கங்களில்).

## மதிய உணவுப்பணி சிறக்க தலைமைச் சமையற் கூடம்

"மதிய உணவு அளிப்பதை, இரண்டு வகைகளில் செய்யலாம். ஒன்று, பணம் கொடுத்துப் போடச் செய்வது. ஆனால் பணம் ஆகிவிட்டால், இத்திட்டம் "இல்லை" யாகிவிடும். இரண்டாவதாக, இது நிரந்தரமாக நடைபெற வழிவகை செய்வது இதற்குத்தான் இந்தப் புதிய திட்டம் வழி கோலுகிறது.

தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்துவோம் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தன்மானம் தரணியிலே வளரவும், நம் எதிர்காலச் சமுதாயம் சிறந்து விளங்கவும், பெரிய பயணத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். நமது சிறுவர்களும், சிறுமியரும் நல்ல குழந்தைகளாக, நல்ல குடிமக்களாக வளரட்டும்!"

—மாண்பு மிகு முதலமைச்சர் (பூவிருந்தவல்லி வட்டார 'தலைமைச் சமையற் கூடம்—உழவுப் பண்ணை' துவக்க விழாவில்).

'கோயில்களில் நந்தா விளக்கு ஏற்றுவது போல, இன்று சுதந்திர நன்னாளில், நான் ஏற்றி வைக்கும் ஒளிவிளக்கு, சமுதாயத்தின் அறியாமை, பிணி, இல்லாமை போன்ற இருள் நீக்க உதவும் என்று நம்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப் பேற்றுள்ள தலைமை ஊழியன் என்ற வகையில், என் வேண்டுகோள் இதுதான்:

எல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களும் இத்துறையில் ஒத்துழைத்து மதிய உணவு திட்டத்தை வெற்றிபெறச் செய்வார்களாக!"

—விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர்.

(நிகழ்ச்சி விவரம் 38-ம் பக்கம்).

## நகர்ப்புறங்களில் 'படி அரிசி'

"தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குவது இந்தப் 'படிஅரிசி திட்டம்'.

விலை ஏற்றத்தால் மக்கள் படுகிற அவதியை அரசு உணராமலில்லை. இந்த ஒரு (படிஅரிசி திட்டம்) காரியத்தால் மட்டும் விலைவாசிகள் எல்லாம் குறைந்து விடாது.

விலைவாசிகள் குறைக்கப்பட்டு, மக்களது அவதி குறைக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்குள்ள நல்லெண்ணத்தின் அறிகுறியாகவே இந்தப் படிஅரிசி திட்டம் விளங்குகிறது.

எங்களது இந்த நல்லெண்ணத்தை உணர்ந்து, மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க முன்வரவேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்."

—மாண்பு மிகு முதலமைச்சர் 'வில்லிவாக்கம் பகுதியில் படிஅரிசி திட்டத் துவக்க விழாவில்.

"இன்றைய தினம், இந்தச் சுதந்திர தினத்தில், சென்னை நகரை அடுத்துள்ள 47 கிராமங்களில் (திருவொற்றியூர், ஆவடி, தாம்பரம், திருவான்மியூர் ஊர்கள் வரை) 6 லட்சம் மக்களுக்கு ரூபாய்க்குப் படி அரிசி போடப்படுகிறது. இது, படி அரிசி திட்டத்தின் இரண்டாவது கட்டமாகும். செங்கல்பட்டு மாவட்டத்தின் கால் பகுதி இதன் கீழ் வருகிறது.

மாநிலம் முழுவதற்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி, குடும்பக்கார்டுமுறை அமுலிலுள்ள எல்லா இடங்களிலும், இவ்வாண்டு டிசம்பர் 31-ம் தேதிக்குள்ளாக, ரூபாய்க்குப் படி அரிசி போடுவோம்."

—மாண்பு மிகு உணவு அமைச்சர், தமது தலைமையுரையில்.

(கட்டுரை அடுத்த இதழில்).

## மக்கள் கருத்தறிந்து மாற்றம் செய்ய..

"சமுதாய நலத் திட்டத்தைத் தக்க முறையில் சீர்திருத்தும் பணியை, ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும், மக்கள் அனைவரின் மன நிலையைத் தக்கவாறு உணர்ந்தும், செயல்படுத்த விரும்புகிறோம். இதற்காகவே, நமது மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சிறப்பு ஆலோசகர் திரு முருகேச முதலியார் அவர்கள், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு, மத்திய பிரதேச மாநிலத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கு நடைபெறும் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி ஆராய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் விளைவாக, அவர் உருவாக்கிய அறிக்கை ஒன்று 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியில் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தலைமையில், சட்டப்பேரவையில் உள்ள சர்வ கட்சித் தலைவர்களுடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அன்றைய தினம், அந்த அறிக்கையைப் பற்றிய பொதுவான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன."



ஆகஸ்ட் 15, சுதந்திர நாளன்று, சென்னை கோட்டையில் கொடியேற்று விழா-

# "பொற்காலம் கண்டிட புன்னகையோடு உழைத்திட வாரீர்!"



## வானொலியில் முதலமைச்சர் சிறப்புரை




நாட்டினரே! நண்பர்களே!

இன்று விடுதலைத் திருநாள் கொண்டாடுகிறோம். இதுபோது உங்களுடன் சேர்ந்து இந்தத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியிலும் எழுச்சியிலும் பங்குகொள்ள விரும்புகிறேன்.

இன்று நாம் நடத்திடும் திருநாள்—சுதந்திர விழா—இங்குள்ள நம்மால் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள பல்வேறு நாட்டினராலும் போற்றப்படும் பொன்னாளாகும்.

இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்—ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்திரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னாள்—தன்னரசு பெற்ற நாள்—உரிமைப் போரிலே வெற்றி கண்ட நாள்—என்று பாராட்டுவர்: ; பாராட்டுகின்றனர்.

வரலாற்று ஏடுகளிலே, இந்நாள் தனிச் சிறப்பை யளிக்கும் நாளாக பொறிக்கப்பட்டிருக்கின்றது.



ஆனல் வீரக்கனல் கொழுந்துவிட்டு எரிந்தது! உரிமைக் கிளர்ச்சி புயலாக வடிவமெடுத்தது! கூனிக்கிடந்தோன் நிமிர்ந்து நின்ருன்! விழி பழுதாகிக் கிடந்தவனுக்கும் கண்களிலே ஓர் புத்தொளி கிளம்பிற்று. அச்சம் அழிந்தது. ஆணவபுரியினர், ஓர் புதிய நாடு எழுந்து நிற்பதனைக் கண்டனர்.

**இதுவா இந்தியா ?**

''எதற்கும் அஞ்சப் போவதில்லை, எதிர்த்துத் தாக்கப்போவதில்லை, எம்மை வாட்டி வதைத்திடினும் தாங்கிக்கொள்வோம், எமது நாடு எமக்கே, எமது அரசு எமக்காதல் வேண்டும் என்ற முழக்கம், எம்மை அடக்க வரும் பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிடும்'' என்று வீரர் கூறினர்—'இதுவா இந்தியா?' என்று ஆங்கிலர் கேட்டனர்.

ஆம். இது விழிப்புற்ற இந்தியா, வீறு கொண்டு எழுந்துவிட்ட இந்தியா, விடுதலையைப் பெற்றிட எந்த விலையையும் தந்திடத் துணிந்து நிற்கும் தூய்மை நிறைந்த நாடு என்று உலக உத்தமர் காந்தியார் உரைத்தார். இந்நாள், அவர் அந்நாளில் காட்டிய அற நெறியால் கிடைத்த திருநாளாகும்.

**' நாடு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல, அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு'**

கவிஞர்கள் எழுச்சிமிக்க கவிதை கொண்டு இந்நாளை வரவேற்கின்றனர்.

இந்நாள் திருநாள்—ஐயமில்லை; இந்நாள் பொன்னுள்—மறுப்பார் இல்லை ; இந்நாள் நமது உரிமையை உலகு ஒப்புக்கொண்டு விட்டது என்பதனை அறிவிக்கும் நாள்—அறிகிறோம்; அகமகிழ்ச்சி பெறுகிறோம்.

**புதிய நாடு எழுந்து நின்றது.**

அடிமைத்தளைகளை அகற்றி, அன்னிய அரசு அகற்றி, ஆதிக்கத்தினை அகற்றி, நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமை பெற்றிட, எவரெவர் என்னென்ன முறையில் தொண்டாற்றினர். எத்தகைய இன்னல்களையும் இழப்புகளையும் ஏற்றனர், இன்னுயிர் ஈந்தனர் என்பது பற்றிய நினைவு நெஞ்சத்தில் நிரம்பி, அம்மாவீரர்கட்கு வீரவணக்கம் செலுத்திட வேண்டும் என்ற உனர்ச்சியைத் தருவதுடன், அத்தகைய வீரர்கள் வழி வழி வந்தோர் நாம் என்ற எழுச்சிமிக்க உணர்வைக் கொடுத்திடும் நாள்—இந்த ஆகஸ்டு பதினைந்து.

இழந்த அரசையாவது, இவர்கள் மீட்பதாவது—இவர்களுக்கு ஏது அதற்கான ஆற்றல்-இவர்களாவது ஒன்றுபட்டு நம்மை எதிர்ப்பதாவது என்று ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிட்டனர். வேட்டு கேட்டதும் விடுதலை வீரர்கள் மிரண்டோடுவர், சிறை என்றதும் சிந்தை குழம்புவர் என்று எண்ணினர்.





இந்நாள், நமக்கெல்லாம் அந்நாள் நிகழ்ச்சிகளை நினைவிலே கொண்டு வந்து பாடம் கற்பித்திடும் நாளாகும். இந்நாள் வந்திடின், நாடு என்னென்ன வண்ணம் பெற்றிடும், ஏற்றம் பெற்றிடும் என்றெல்லாம் விடுதலை வீரர்கள் அன்று எண்ணினர் என்பதனை இன்று எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

**வந்தது சுதந்திரம் ; ஆனால் வாழ்கின்றோமா?**

வந்தது சுதந்திரம். வாழ்கின்றோம்— நம்மை நாமே ஆள்கின்றோம் என்ற உரிமையுடன். ஆனால், 'வாழ்கின்றோமா'? நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது. வாழ்கின்றோமா ?

வாழ்கின்றோம் என்பதற்கும், இருக்கின்றோம் என்பதற்கும், பொருள் வேறுபாடு மிகுதி.... நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று, 'ஏதோ இருக்கின்றோம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்: 'வாழ்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ளும் நிலையில் அல்ல.

பட்டொளி வீசிப் பறந்திடும் சுதந்திரக் கொடியினைக் காணுகின்றோம், இன்னிசை கேட்கின்றோம். அணிவகுப்புகள் நடாத்துகின்றோம், அவனிக்கு அறிவிக்கின்றோம்— இது எமது சுதந்திரநாள் என்று. ஆனால் வாழ்கின்றோமா....? வாழ்வு நல்வாழ்வாக, புது வாழ்வாக, முழுவாழ்வாக மலர்ந்திருக்கிறதா?

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே, வாழ்கின்றோம் என்று கூறிட நாம் உரிமை பெறும் நாளாகும்,

இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே, நாம் வாழ்வு பெற்றிடும் புதுநாளாகும்.

பேதமும் பிளவும் நீங்கி எல்லோரும் ஒன்று என்ற நிலை பிறந்திடும் நாளே, வாழ்விலோர் திருநாள். பிறரைத் தாழ்த்தாமல், பிறர் தாள் விழாமல், சுரண்டாமல், சுரண்டப் படாமல், உழைத்து உழைப்பின் பயனைப் பெற்று, புன்னகை பூத்திடும் முகத்தினராகிடும் நாளே, நாம் வாழ்கின்றோம் என்று கூறிடும் நிலையினை நமக்கு அளித்திட முடியும்.

இந்நிலையை நாம் அடையும் வரையில், 'இருக்கின்றோம்' என்று மட்டுமே கூறிக் கொள்ள முடியும்; 'வாழ்கின்றோம்: என்று கூறிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை.

விடுதலை பெற்ற நாடுகள், வாழ்வது மட்டுமல்ல, பிற நாடுகளை வாழவைக்கவும்

## நோக்கத்தில் கவனம்

நாம் கனவு காணும் எதிர்கால இந்தியா எனும் மாளிகையை எழுப்பும் பணியில், நாம் ஒவ்வொருவரும் பங்குகொள்ள வேண்டியிருப்பதால், அதை எழுப்பும் பணியில் நாம் ஒரே ஒரு செங்கல்லை அடுக்குபவராக இருந்தாலும் அதையும் நன்றாகவும் உண்மையோடும் செய்வோம்.

நீதி என்றால் அரசியல் நீதி என்று மட்டிலும் நாம் பொருள் கொள்ளவில்லை. எல்லோருக்கும் சம வாய்ப்பளிக்கக்கூடிய சமுதாய–பொருளாதார நீதியும் அதில் சேர்ந்ததுதான்.

பின்தங்கிய சாதியினர், பின்தங்கிய வகுப்பினர் என்று அழைக்கப்படுவோருக்கு நாம் தனிப்பட்ட கவனம் செலுத்தி, குறிப்பாக கல்வியிலும், வேலை வாய்ப்புக்களிலும் வசதிகள் செய்துள்ளோம்.

ஒவ்வொரு அரசாங்கமும் அதன் மாநில மக்களது நன்மையையே நாடுவதாக இருப்பதால், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் சரி, அல்லது மாநில அரசுகளுக்குள்ளேயும் சரி, சச்சரவுகள் ஏற்படவேண்டிய அவசியமில்லை. கருத்து வேறுபாடுகள் ஏதும் ஏற்பட்டால், நல்லெண்ணமும் பொதுப்பணிக்கு உழைக்கும் ஆர்வமும் இருக்கும்போது, அவற்றில் ஒத்துப்போக முடியும். நமது வளர்ச்சித் திட்டங்களின் திருப்பு முனையில் இருக்கும் நமக்கு, இப்போது ஸ்திரத் தன்மை மிகவும் அவசியம். நமது நோக்கத்திலிருந்து நம்முடைய கவனம் கலைந்துபோகும்படி நாம் விட்டுவிட முடியாது.

— சுதந்திர நாளில், குடியரசுத் தலைவர்.

வல்லமையும் வசதியும் பெற்றுள்ளன. காணு கின்றோம் நாம்! வாழ்வின் இலக்கணத்தை நாடி நடைபோடுகின்றோம்.

**உலகம் பரிவு காட்டியது அன்று; இன்று....?**

சுதந்திரம் பெருத நாட்களில், நாம் ஏழ்மை யிலும் அறியாமையிலும் சிக்கிக் கிடந்தோம்—எனினும் உலகின் பண்பாளர், நம்மைக் கேவலமாகக் கருதவில்லை. பரிவு காட்டினர் பாவம்! வளம் நிறைந்த நாடுதான்! பொன் விளையும் பூமிதான்! என்றாலும் என்ன செய்ய இயலும்? ஆங்கில ஆதிக்கம் அந்நாட்டு மக்களை அவதிக்குத் தள்ளிவிட்டது!' என்று பேசினர். விடுதலை பெறவேண்டும் என வாழ்த்தினர். நல்லெண்ணத்தை வழங்கினர்.

ஆனால் விடுதலை பெற்ற பிறகும், ஏழ்மை யும் அறியாமையும், பேதமும் பிளவும், நீடித்து இருந்திடக் காணும்போது, என்ன எண்ணுவர், என்ன கூறுவர், யாரைக் காரண மாகக் காட்டுவர், இந்நிலைமைக்கு? நம்மை நாமே அல்லவா ஆண்டுக் கொண்டிருக்கி ரோம்! நம்முடைய வாழ்வுக்கும் தாழ்வுக்கும் நாமே அல்லவா பொறுப்பாளிகளாகி விட் டோம்!

ஆகஸ்டு பதினைந்து என்னும் விடுதலைத் திருநாள் மகிழ்ச்சி, எழுச்சி, வீர உணர்ச்சி ஆகியவைகளைத் துவக்கத்தில் தந்திட உத விற்று. ஆண்டு இருபதைக் கடந்துவிட்டோம். இன்றைய ஆகஸ்டு பதினைந்து, நமக்கு பொறுப் புணர்ச்சிகளைத் தந்திடும் நாளாகிறது. 'சுய ராஜ்யம் பெற்றிடுவோம், சுயராஜ்யம் அமைத் திடுவோம்' என்று சூள் உரைத்தோமே, அதற் கான முயற்சியிலே முனைந்து நிற்கிறோமா, யாது செய்திடின் அந்த இலட்சியத்தை அடைய முடியும் என்பது பற்றி எண்ணிச் செய லாற்றிடும் பொறுப்புணர்ச்சியைத் தந்திடும் நாள், இன்றைய ஆகஸ்டு பதினைந்து.

**வள்ளுவர் தந்த நாடு, எங்கே?**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத் துரைத்தார் வள்ளுவப் பெருந்தகை, ''உறு பசியும், ஓவாப் பிணியும் செறுபகையும் அற்றது நாடு'' என்று! இருபதாண்டுகள் உருண்டோடி விட்டன. ஆண்டுக்காண்டு விழா நடத்துகின்றோம். விருத்தம் பாடுகின்றோம்; வள்ளுவர் தந்த நாடு காண்பதில் வெற்றி பெற்றோமா? இது இன்றுள்ள கேள்வி.

விழா மகிழ்ச்சியைக் கெடுத்துவிடுமோ என்று அஞ்சி, இந்தக் கேள்வியினை எழுப்பாமல் விட்டு விடுவது மிகமிகத் தவறு.

ஆயாசப்படவோ, சலிப்படையவோ, மனம் உடையவோ அல்ல, இந்தக் கேள்வியை எழுப்பவேண்டும் என்று, நான் கூறுவது. மேலும் செம்மையாகச் செயலாற்றும் உணர்வு பெற, இந்தக் கேள்வி தேவை!

இந்தக் கேள்வி, அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. இது நாட்டு மக்கள் இதயத்தி லிருந்து எழுந்திடும் கேள்வியாகும்.

இயற்கை கொஞ்சுகிறது. இல்லாமை கொட்டுகிறது—மறுப்பதற்கில்லை.

வளம் பெருகுகிறது, சிறு சிறு வளைக்குள்ளே புகுந்துகொண்டு விடுகிறது—மறைப்பதற் கில்லை.

மக்கள் தொகை பெருகுகிறது. நலிவு நெளி கிறது—ஒப்புக்கொண்டாக வேண்டும்.

**கொடி பறக்கிறது—கூடவே கொடுமைகள்!**

பற்றாக்குறை மிரட்டுகிறது, அசு விலை அலைக்கழிக்கிறது. கள்ள வாணிபம், கொள்ளை லாபம், குறுக்கு வழிகள், கலப்படம் இவை

**விடிவு நேரம், அருகிலே....**

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு உலகில் இருள் சூழ்ந்திருந்தது. உலகம், இரண் டாம் உலக யுத்தத்தின் இடையில் இருந்தது. அப்போது அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு காந்திஜி 'செய் அல்லது செத்து மடி' என்னும் செய்தியை நமக்களித்தார். அப்போது இந்தியா விடுதலை பெறும் என்ற நம்பிக்கை துளிக்கூட இருக்கவில்லை. ஆனால் ஐந்தாண்டு காலத்திற்குள்ளேயே நமது கனவு நனவாகியது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது, சிரமம் நிறைந்த இருள் நிரந் தரமானது அல்ல என்பதுதான் இப்போதுள்ள இருளும் விரைவிலேயே முடிந்துவிடும். விடிவு நேரம் அருகிலேயே இருக்கிறது; நமது சிரமங் களை நாம் விரைவில் சமாளித்து விடுவோம். அதற்குத் துணிவும் உறுதியும்தான் நமக்குத் தேவை. மெத்தனமாக இருப்பதற்கு இடமில்லை.

இந்தியாவில் ஒரு புதிய தலைமுறை தோன்றி யிருக்கிறது. இந்தியா ஒரு காலத்தில் அடிமை வாழ்வு வாழ்ந்தது என்பது பற்றி இந்த தலை முறைக்குத் தெரியாது. நமது விடுதலைப் போராட் டத்தைப் பற்றியும் அதற்குத் தெரியாது. இந்தி யாவில் வறிய, 'பட்டினி மக்கள் மாபெரும் போராட்டம் நடத்தி விடுதலை பெற்றார்கள் என்பதையும் இந்தத் தலைமுறையினர் அறியார்.

எல்லா மாநிலங்களுக்கும் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசாங் கத்தின் நிலையான முயற்சி, உணவையும் இதர வசதிகளையும் சமமாகப் பங்கிட்டுத் தரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் விருப்பம்."

—பிரதமர் திருமதி இந்திரா காந்தி.

போன்ற கேடுகள், நாட்டைப் பாழ்படுத்து கின்றன. கொடி பறக்கிறது, கோலாகலமாக! கூடவே இக்கொடுமைகள் நெளிகின்றன— அடக்குவார் யார் என்று கேட்டபடி!

இந்நாள், நாட்டின் நிலையை நாம்அறிந்திடல் வேண்டும். சுதந்திரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திட வேண்டும். அப்போதுதான், எதற்காக சுதந் திரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்திரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

**'பாலைவனம் சோலைவனம்..'—வெறும் கவிதையல்ல**

பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும், அங்கு பசுங்கிளிகள் பாடிடவும் வேண்டும்— இது வெறும் கவிதையாகவே என்றென்றும் இருந்திடக் கூறப்பட்டது அல்ல, செயல் படுத்திக் காட்ட முடியும் என்ற உறுதியை நாம் அனைவரும் பெற்றிட, தரப்பட்டதே இதுபோன்ற கவிதைகள்.

இந்நாள், அந்த உறுதியினைப் பெற்றிட வேண்டும்.

'சுதந்திரம் பெற்றோம், அதைக் காத்திடும் வல்லமையும் பெற்றோம்' என்று கூறிக் களித்திடு வதுடன் நில்லாது, 'சுதந்திரம் பெற்றோம், சுகவாழ்வு பெற்றோம்' என்று கூறிப் பெருமிதம் கொண்டிடத்தக்க இலட்சியத்தை நோக்கி நடந்திட வேண்டும், உறுதியுடன், உற்சாகத் துடன், நம்பிக்கையுடன.

மிகப்பெரிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலி ருந்து விடுதலை பெற்றிட முடிந்தது, அதற்கான ஆற்றல் நம்மிடம் இருந்திருக்கிறது. அதே ஆற்றல், இந்நாட்டிலுள்ள ஏழ்மையையும் அறியாமையையும், பேதத்தையும் பிளவையும் போக்கிடப் பயன்பட வேண்டும் என்ற உணர்ச்சியையும் பெறவேண்டும்,



**சுதந்திரக் காவலர்கள் யார், யார்?**

கொடி ஏற்றுபவர், கோலாகல விழா நடத்துபவர், விடுதலை வீரர்களைக் கொண்டாடுபவர்—இவர்கள் மட்டும் போதுமா, அந்த இலட்சியம் நிறைவேற?

உச்சிப்போது வந்தது கண்டும் சளைக்காமல் உழுது கொண் டிருக்கிறானே உழவன், அவனும்...

பல தொழில்களிலே ஈடுபட்டுப் பொருளை உற்பத்தி செய்கிறானே பாட்டாளி, அவனும்...

சிறார்க்கும் சிறுமியர்க்கும் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திடும் ஆசிரியர்கள் உள்ளனரே, அவர்களும்...

நலிவு நீக்கிடத் தொண்டாற்றுகின்றனரே மருத்துவத் துறையினர் அவர்களும்...

காட்டுவெள்ளத்தை அடக்கி, நீர்வளம் கொண்டு நில வளம் பெருக்கி, ஊர் அமைத்து, சீர் அமைத்துத் தருகின் றனரே, பொறியியல் துறையினர், அவர்களும்...

நாட்டு நிர்வாகத்திற்கான பல்வேறு துறைகளிலே பணி யாற்றுகின்றனரே அலுவலர், அவர்களும்...

இவர்களின் திறமையிலும் செயலார்வத்திலும், வெற்றியிலும் இருக்கிறது, சுதந்திரத்தின் சோபிதம்—விடுதலையின் விளைவு!

அவர்கள் சுதந்திரத்தின் காவலர். அவர்களுக்கு என் வணக்கம்.

**நாடு உயர நம் பங்கு என்ன?**

நாட்டை மீட்டிட்ட நல்லோர், அதனை இன்று எவரும் பறித்திடா வண்ணம் பாதுகாத்து நின்றிடும் போர்வீரர் ஆகியோருடன், நாட்டு நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் செயல்வீரர், ஆகியவர்களுக்கு வணக்கம் கூறிட, வாழ்த்தி வழங்கிட, போற்றிப் பாராட்டிட ஏற்ற நாள், இத்திருநாள்!

ஏறுநடை, ஒளிவிடும் கண்கள், புன்னகை பூத்தமுகம், எனும் காட்சி கண்டிடத்தக்க திருநாள்.

இவற்றைவிட, நமது கடமையை உணர்ந்து, நாட்டை வாழவைத்திடும் செயலில் ஈடுபடும் உறுதியைப் பெற்றிடும் நன்னாளாகும்.

தனித்தனியே நமக்கு உள்ள விருப்பு வெறுப்பு, உரிமை, சலுகை எனும் எல்லாம், நாடு வாழ வேண்டும் என்ற பொதுக் கடமைக்குத் துணை செய்வதாக அமையவேண்டும். நமது முறைகள் அவ்விதம் இருந்திட வேண்டும்.

நாடு வாழ, நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் எழவேண்டும்.

இவனால் என்ன ஆகும், இவனோ இதற்கு ஏற்றவன், இவனுக்கு ஏது அந்த ஆற்றல்—என்று, மறந்தும், எவரைப் பற்றியும் எண்ணிடலாகாது. அந்த எண்ணம் நாட்டு வாழ்வுக்கே ஊறு செய்திடும்.

நாம் எல்லோரும் எப்படி இருக்கிறோமோ, அப்படித்தான் நாடும் இருக்கும். இது எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. நாடு என்பது வெறும் பூகோளப்படம் அல்ல, அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு.

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்காக எந்த அளவு தருகின்றோமோ, அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயர முடியும்.

விடுதலை பெற்றதால் நாடு நல்வாழ்வு பெற்றிருக்கிறது என்று அவனி பாராட்டும் நிலையைக் காண நாம் என்ன செய்திட வேண்டும், நாம் தந்திடும் காணிக்கை யாது என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியநாள்.

**கணக்குப் பார்க்கும் நாள்**

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே! இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தரவேண்டும், எவ்வளவு தரவேண்டும்?' என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்கு தீர்த்த நாள்—ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள், புதுக் கணக்கு போட்ட நாள்.

## ஏழையின் துன்பம் தீர

**சுதந்திரம் நாட்டுக்கு வந்தது, சுதந்திரப் போரால். ஆனால் ஏழையின் துன்பம் தீரவில்லை; விலை குறையவில்லை. ஆகவே சுதந்திரப் போர் முடியவில்லை ; தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது.**

**போராட்டத்தின் முறை மாறியதே தவிர—முனை மாறியதே தவிர—போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது.**

**மக்களின் வறுமையும் அறியாமையும் நீங்கும் வரை, இந்தப் போராட்டம் நடந்தே தீரும்.**

—திரு ம. பொ. சிவஞானம், எம். எல். ஏ.
(சென்னை கோடம்பாக்கத்தில்
நடைபெற்ற விடுதலை விழா கூட்டத்தில்).

இருபதாண்டுகளுக்குப் பிறகு, இன்றைய ஆகஸ்டு பதினைந்து, கணக்குப் பார்க்கும் நாள்—சுதந்திரம் பெற்றபிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில், எந்த அளவுக்கு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது என்ற கணக்குப் பார்க்கும் நாள்.

இந்நாளில் உங்களோடு சேர்ந்து, மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றேன்.

உமது அறிவாற்றலின் துணையுடன், பெற்ற சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்படும் என்ற உறுதி பெறுகின்றேன்.

**புன்னகைப் பூந்தோட்டம் கண்டிட....**

சுதந்திரத்தின் பலனை நல்ல அளவுக்கு நாட்டவர் அனைவரும் பெற்றிட, உழைத்திட வாரீர் என்று அழைக்கின்றேன். மனக்கண்ணால் காணுகிறேன், உறுதிபடைத்த உம்மை வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன். உமது ஒப்பற்ற ஆற்றலின் துணைகொண்டு, நாடு எத்தகைய ஏற்றம் பெறப்போகிறது என்பது பற்றி எண்ணுகின்றேன், ஒரு புன்னகைப் பூந்தோட்டம் என் எதிரே காணுகின்றேன். எழில் மிக்கதோர் எதிர்காலம் காண்கின்றேன். அந்தபொற்காலம் கண்டிட, வழி அமைத்திடும் நன்னாளே, இத் திருநாள்.

வாழிய நீவிர்! வாழிய நம் நாடு!



# தீ விபத்தால் துயருற்றோருக்கு உறவினர் போல் உதவுவோம்!

“அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு வேதனைத் துயரில் மூழ்கியிருக்கும் ஏழை எளியவர்கள் சார்பில், தமிழக மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நெஞ்சுருக்கும் நிகழ்ச்சிகள் நல்லோர் உள்ளத்தை உலுக்கியிருக்கின்றன. ஒரு தீங்கும் அறியாத பாமர மக்களுக்கு அநீதியும் அக்கிரமமும் இழைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கொடுமையை நினைத்துப் பார்த்தால் கல்லும் கசிந்துருகும்.

உழைப்பையே பிழைப்பாகக் கொண்ட ஏழை மக்கள், அன்றாட வயிற்றுப் பாட்டுக்கே அயராது உழைத்து, வெயிலென்றும் மழையென்றும் பாராது நாளெல்லாம் கடுமையாகப் பாடுபட்டு, இரவில் ஒதுங்கவும் ஒண்டியிருக்கவும் தங்கள் குடில் நோக்கிவரும் பாட்டாளிகள் —அவர்களது குடிசைகளுக்குத்தான் தீய சக்திகள் தீயிட்டிருக்கின்றன.

**மாண்புமிகு அரிஜன நல அமைச்சர்**
**திருமதி சத்தியவாணி முத்து**

### தீய சக்திகள் ஒடுக்கப்படும்

தென் சென்னையில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்து அனைவரையும் திடுக்கிட வைத்திருக்கிறது. திடீர் திடீர் என்று ஓலைக் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன. அரசும் போலீசும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டதன் பேரில் இப்பொழுது நிலைமை சீர்திருந்தியுள்ளது. பற்றியெரிந்த தீயை அடக்குவதில் தீயணைப்புப் படையினரும் போலீசாரும் தங்கள் உயிரைத் துரும்பாக மதித்துப் பாடுபட்டிருக்கிறார்கள். இந்த நாசத்திற்குக் காரணமான தீயசக்திகளைக் கண்டுபிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவந்து நிறுத்த விநாடியும் அயராது போலீஸ் அதிகாரிகள் முழு மூச்சுடன் பணியாற்றி வருகிறார்கள். அவர்களது அருமுயற்சியால் தீய சக்திகள் ஒடுக்கப்பட்டு, அநீதி இழைத்தோர் அதற்கான தண்டனையைப் பெறுவர் என்பது உறுதி.

இந்தத் தருணத்தில் நமது கடமையினையும் பொறுப்பினையும் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு வலியுறுத்தியுள்ளார்கள். அதைக் கருத்திற்கொண்டு, மக்கள் அரசுடன் ஒத்துழைக்க நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தீயினால் பாதிக்கப்பட்ட மக்கள், தங்கள் சொத்தையும் நலனையும் இழந்து, குழந்தைக் குட்டிகளுடன் நடுத்தெருவில் நின்று, நம்முடைய ஆறுதல் கரத்திற்காக, அன்பான அரவணைப்புக்காக அவர்கள் ஏங்கித் தவிக்கின்றனர். அவர்தம் துயர் துடைத்திட மக்கள் ஒருமனப்பட்டு முன் வரவேண்டும். இது இன்றைய நமது உடனடி உதவி, காலத்தால் செய்யும் நன்றி என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

### பங்கைச் செலுத்த எழுச்சி பொங்கட்டும்!

கண்ணீர் விட்டு நிற்கும் மக்களுக்கு உதவுவதை அரசு, தன் முழு முதற் கடமையாகக் கொண்டுள்ளது; உதவித் தொகை அவர்களுக்கு எளிதில் கிடைக்க விரைந்து செயலாற்றுகிறது. வீட்டையும், தாங்கள் போற்றிப் பாதுகாத்து வந்த உடைமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு உதவித் தொகையை இப்பொழுது அரசு 80 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இதைத் தவிர, மாநகராட்சி அவர்களுக்குக் குடிசை ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்குகிறது. இந்த உதவிகள் மட்டும் போதாது. ஒரு கை தட்டி ஓசை எழும்பாதது போல், அரசின் முயற்சியும் மாநகராட்சியின் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டும் போதாது. பொதுத் தொண்டில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள சேவை நிறுவனங்களும், அருளுள்ளம் கொண்ட மக்களும் முன்வந்து இன்னல் படும் ஏழை மக்களின் அல்லலைப் போக்கவேண்டும். தீ விபத்துத் துயர்துடைப்புச் சீரமைப்புக் குழு என்று, அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பொன்று முதலமைச்சரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், கல்வி நிலையங்கள், அற மன்றங்கள், சமுதாயத் தொண்டர்கள் ஆகிய அனைத்துப் பகுதியினரும் நிதிக்கு வாரி வழங்கி வருகின்றனர். இதில் நம்முடைய பங்கும் சேரவேண்டும் என்ற எழுச்சி அனைவர் நெஞ்சிலும், குறிப்பாக மாதரிடம் பொங்கியெழ வேண்டும் என்று விழைகிறேன்.

சமுதாய உணர்வும், பிறர் துன்பத்தைத் தனது துன்பமாக எண்ணி உதவி செய்யும் பக்குவமும் இல்லாவிட்டால் நம்முடைய முன்னேற்றம், பண்பாட்டு உயர்வு, நாகரிகச் சிறப்பு எல்லாம் வெறும் ஏட்டில் மணக்கும்

எழுத்துக்களாக இருக்குமே தவிர, வாழ்க்கையில் உதவும் அறநெறிகளாகவோ, மக்களை உயர்த்தி நிறுத்தும் உன்னதக் குறிக்கோள்களாகவோ இருக்க மாட்டா. பற்றியெரிந்த குடிசைகள் எங்கோ ஒரு பக்கத்தில் இருந்திருக்கலாம். ஆனால் அது நம்முடைய பக்கத்து வீட்டுக் குடிசை, இன்னும் சொல்லப்போனால் நம்முடைய குடிசை என்ற அருளுணர்வு நமக்கு வரவேண்டும் என்று தமிழக மக்கள் அனைவரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கொள்ளி குடிசையில் வைக்கப்படவில்லை, ஏழைப் பாட்டாளி மக்களின் அடிவயிற்றில்தான், வைக்கப் பட்டுள்ளது.

### ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டத் திட்டம்

இப்படிப்பட்ட இன்னல்—எதிர்பாராத விபத்து—நம்முடைய ஆற்றலை, பக்குவத்தை, பண்பாட்டைச் சோதனை செய்து பார்க்கும் அறைகூவலாகும். இந்த அறைகூவலை நாம் எப்படி வெற்றி கொள்வது? நம்முடைய உதவியைத் தாராளமாகவும் மனமுவந்தும் அளிப்பதன் மூலம்தான். நம்முடைய உதவி இருவகைப்பட்டது. ஒன்று உடனடி உதவி; இன்னொன்று நெடுநாளைய அடிப்படையிலான உதவி. நடுத்தெருவில் நிற்கும் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் உணவும் உடையும் ஆதரவான இடமும் அளிப்பது இப்பொழுது செய்தாக வேண்டிய பணி. எதிர்காலத்தில் இத்தகைய இன்னல்களிலிருந்து அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க நாம் மேற்கொள்ளும் பணி இரண்டாவது கட்டமாகும்.

தீப்பிடிக்க ஏதுவாகக் குடிசைகள் இருப்பதால்தானே தீயசக்திகள் அவற்றைப் பொசுக்கித் தங்கள் திருவிளையாட்டைக் காட்டுகின்றன! செந்தணல் அணுகாச் செம்மை மிகு குடில்களைக் கட்டிக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. சென்னை மாநகரிலுள்ள எல்லாக் குடிசைகளையும் இப்படி மாற்றியமைக்க, முதற்படியாக ஒரு கோடி ரூபாய் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இது நிரந்தர நடவடிக்கை.

இப்பொழுது பாதிக்கப்பட்டு வேதனையுறும் மக்களுக்கு உதவ—தீப்பற்றாத வீடுகளைக் கட்ட—அரசு 11 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. மொத்தம் 1,500 கொட்டகைகள் கட்டப்படும். ஒரு கொட்டகைக்கு 750 ரூபாய் செலவு பிடிக்கும். இந்தக் கொட்டகைகள் விரைவாக அமைக்கப்பட்டு வருவது, பாதிக்கப்பட்ட மக்கள் வயிற்றில் பால் வார்க்கும் செய்தியாகும்.

### உடன் பிறந்தோருக்குச் செய்யும் உதவி

மேடு பள்ளங்கள் நிரவப்பட்டு, எழிலான இரும்புச் சட்டக் குடிசைகள் எழுப்பப்படுகின்றன. நிலத்தைச் சமப்படுத்தி, இரும்புக் கம்பங்கள் நட்டு, இரும்புச் சட்டம் போட்டு அதன்மீது கல்நார் தகடு வேய்கிறார்கள். ஏழைகள் இனி வேதனைப் பெருமூச்சு விட வேண்டி வராது என்பதற்கு இவை கம்பீரமாக நிமிர்ந்து நின்று சான்று சொல்கின்றன.

மக்கள் வாழ்வில் மாறுதலை, மாபெரும் புரட்சியைத் தோற்றுவிக்கும் இந்த உன்னதப் பணியில் கலந்து கொண்டு, உடன் பிறந்த மக்களுக்கு உதவ வாருங்கள் என்று உங்கள் அனைவரையும் உள்ளன்போடு கரம் குவித்து அழைக்கிறேன். குடிசைகள் தீப்பிடித்துக் கருகியதால் உண்டான கவலைக் கோடுகளுடன், கண்ணீர் ததும்ப வீதியைத் தங்கள் வீடாக்கிக் கொண்டுள்ள மக்களை எண்ணிப் பாருங்கள். அவர் துயர் துடைக்க நம்மால் ஆனதைச் செய்யவேண்டும் என்ற அருளுணர்வோடு உங்கள் கையில் கிடைப்பதை அள்ளி அள்ளித் தாருங்கள்.

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். இன்னல் வரும்போதுதான்—கேடு சூழும் போதுதான்—நம்முடைய உண்மையான உறவினர்களை நாம் இனம் கண்டுகொள்ள முடியும்.

நம்மைச் சோதித்துப் பார்க்கும் தருணம் இது. நலிந்த மக்களுக்கு—தீயினால் புண்பட்டு மனமிடிந்து உட்கார்ந்திருக்கும் மக்களுக்கு—நாம் அனைவரும் உண்மையான உறவினர்கள், உற்ற நண்பர்கள் என்பதைக் காட்டுவோம். அவர்களது துயரில் பங்கு கொண்டு அவர்களது வாட்டத்தைப் போக்குவோம். 'உடுக்கை இழந்தவன் கைபோல' அவர்கள் இடுக்கண் களைவோம் வாருங்கள் என்று உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். வணக்கம்."

(சென்னை வானொலியில் ஜூலை 14-ந் தேதி நிகழ்த்திய உரையின் சுருக்கம்).

---

தீவிபத்துத் துயர்துடைப்புச் சீரமைப்பு நிதிக்கு 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதிவரை மக்கள் அளித்துள்ள தொகை ரூ. 22,35,638.

---

# உள்ளாட்சி நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள்

### உரிய தமிழ்ப் பெயர்கள் பற்றி அரசு ஆணை

எல்லா உள்ளாட்சி நிறுவனங்களும் தங்கள் அலுவலகங்களிலும், தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கல்வி, கலை, தொழில் கூடங்கள் முதலியவற்றிலும் பெயர்ப் பலகைகள் வைப்பதில் ஒருமித்த முறையை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்குக் கீழே குறித்துள்ளபடி உரிய தமிழ்ப் பெயர்களைப் பயன் படுத்தும்படியும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது:

| | | |
|---|---|---|
| Municipality (முனிசிபாலிட்டி) | .. | நகராட்சி. |
| Municipal Council (முனிசிபல் கவுன்சில்) | .. | நகராட்சி மன்றம். |
| Panchayat Union (பஞ்சாயத்து யூனியன்) | .. | ஊராட்சி ஒன்றியம். |
| Panchayat Union Council (பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்) | .. | ஊராட்சி ஒன்றியக் குழு. |
| Panchayat Town (பஞ்சாயத்து டவுன்) | .. | பேரூராட்சி. |
| Town Panchayat (டவுன் பஞ்சாயத்து) | .. | பேரூராட்சி மன்றம். |
| Panchayat Village (பஞ்சாயத்து கிராமம்) | .. | ஊராட்சி. |
| Village Panchayat (கிராம பஞ்சாயத்து) | .. | ஊராட்சி மன்றம். |
| Township (டவுன்ஷிப்) | .. | நகரியம். |
| Township Committee (டவுன்ஷிப் கமிட்டி) | .. | நகரியக் குழு. |

# கோட்டையில் தமிழ் முழக்கம்-

## வள்ளுவர் படத் திறப்பு விழா



# சிலப்பதிகாரக் காட்சிகள் உயிர் பெற்று வரும்

**''பசியும் பிணியும் பகையும் நீங்கி,**
**வசியும்* வளனும் சுரக்க என வாழ்த்தி''—**

(சிலம்பு—1—5—71 & 72)

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது முன்னோர் முழங்கிய வாழ்த்தின் இலக்கியச் சான்று இது. நாட்டிலே நலிவுகள் அனைத்தும் நீங்கி, வனப்பும் வான்மழை வளமும் வற்றாமல் வளர்ந்தோங்க, மக்கள் குரல் ஒன்று சேர்ந்து அன்றைய நாளில் ஒலித்தது. ஒன்றுபட்ட பொதுப்பணியில், அனைவரையும் ஈடுபடுத்துவதே, சிறப்பு விழாக்களின் குறிக்கோள். சமுதாயத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த எல்லோருடைய கண்ணையும் கருத்தையும் கவர்ந்து உயர்பெரும் தொண்டில் நாட்டம் செலுத்தத் தூண்டுவதில், நமது நாட்டுப் பெருவிழாக்கள், பயனுள்ள பணிபுரியும் ஆற்றல் வாய்ந்தவையாகும்.

அடுத்த சில மாதங்களில், உலகத் தமிழ்ப் பெரு விழாவும், தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கும் தமிழ் நாட்டில் நடைபெற இருப்பது, அனைவரும் அறிந்ததே. இதை எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதைப் பற்றிய சில குறிப்புகளை—தமது இதய அலைகளை—நமது மாண்புமிகு **முதலமைச்சர் அவர்கள்,** கோடிட்டுக் காட்டினார், கோட்டையில் நடைபெற்ற வள்ளுவர் படத் திறப்புவிழாவிலே. எதிர்காலப் பெரு விழாவின் ஏற்றத்துக்கு அடிகோலிய அந்தச் சிறப்பு விழாவின்— குறள் விழாவின்—எழில் ஓவியக் கட்டுரையை இங்கே காணலாம்.

அண்மையில் **''பூம்புகார் போற்றுதும்''** என்ற அழகிய பெயரில் தமிழக அரசின் புதைபொருள், ஆராய்ச்சித் துறையினர், சென்னை மாநகரில், கலைக்கண்காட்சி, ஒன்றை நல்லவகையில் நடத்தினர். மேலும், உலகத் தமிழ்ப் பெருவிழாவின்போது விழுமிய முறையில் ஒரு சிறப்பு மலர் வெளியிடும் பெரும் பணியை, மாண்புமிகு **அமைச்சர் திரு. மா. முத்துசாமி** அவர்கள் தலைமையில் அமைந்துள்ள குழுவினர், ஏற்று, சீரிய முறையில் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர் என்பதை, மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**—ஆசிரியர்.**

'வசி*' என்ற பழஞ்சொல்லுக்கு, 'வசீகரம்' என்ற பொருள் விளக்கம் தருகிறார், **அரும்பத உரையாசிரியர்.** அத்துடன், மழை என்ற பொருளும் உண்டு என்பதை, எடுத்துக்காட்டுகிறார், **அடியார்க்கு நல்லார்.**

சிறப்புக் கட்டுரை :

" பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந் தொழுகலான்."

என்ற சிலப்பதிகார வரிகள் செந்தமிழர் சிந்தை குளிர்விப்பன. அன்றைய பூம்புகார், சிலப்பதிகாரத்தில் சித்திரிக்கப்பட்ட வகையில் இன்று நம் கண்ணெதிரில் தோன்றினால் நெஞ்சம் எப்படி களிகொள்ளும்! இந்தக் கற்பனையை ஒரு கூட்டத்தில் படரவிட்டு, சிலப்பதிகார 'வரி வடிவம்' அப்படியே நம் கண்முன்னால் சென்னைக் கடற்கரையில் 'உயிர் வடிவமாக விரிய வேண்டும்' என்ற தம் உள்ளக் கிடக்கையைத் தமிழக மக்கள் முன்வைத்தார், மாண்பு மிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை. மக்கள், அரசை எதிர்பார்க்காமல் ஆர்வத்துடன் முன் வந்து, இந்தக் கலை, பண்பாட்டு வளர்ச்சிப் பணிக்குத் தாராளமாக உதவவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த ஆண்டு சென்னை திருநகரில் உலகத் தமிழர் மாநாடு நடைபெற இருக்கிறது. அண்மையில் கோலாலம்பூரில் முதல் மாநாடு நடைபெற்றதும், தமிழகத்திலிருந்து தகைசால் தமிழ் அறிஞர் பலர் அதில் பங்கு கொண்டதும் தமிழகம் அறிந்ததே. இந்த இரண்டாவது மாநாடு தமிழ் மொழியின் தாயகத்தில் நடைபெறுவது தமிழ் மக்கள் அனைவரும் பெருமைப்படத்தக்கதாகும் இதில் அகிலமெங்குமிருந்து தமிழ்ப் புலவரும், தமிழாயும் அறிஞர் பெருமக்களுக்கும், தமிழின் பால் நீங்காக் காதல் கொண்டுள்ள நிர்வாகத் தலைவர்களும் பங்கு கொண்டு சிறப்பிக்க இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த பூம்புகார்க் காட்சி எத்தகைய புதுமை விருந்தாக அமையும்!

**பண்டைய தமிழகத்தைக் காட்ட......**

மாநாட்டுப் பெருமக்கள் தமிழகத்தின் தலைநகரில் தங்கியிருக்கும்போது, எங்கே பார்த்தாலும் திருக்குறளும் தமிழ் இலக்கியங்களும் ஓவியமாக, வரி வடிவமாக, பேச்சாக, பாட்டாக, கூத்தாக எல்லாவகையிலேயும், பழந் தமிழகத்தின் பெருமைகளை உணர்த்திடும் நிலையில் சித்திரிக்கப்பட வேண்டும் என்றும், அந்தச் சீர்சால் பணியில் அவரவர் தத்தம் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற அளவில் அதில் பங்கு கொள்ளவேண்டும் என்றும் அவர் அவாவினர்.

தமிழக அரசின் தலைமைச் செயலகக் கூட்டுறவு வங்கியில் சென்ற ஜூன் 9-ம் தேதி திருவள்ளுவர் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து முதலமைச்சர் உரை நிகழ்த்தினர். வள்ளுவர் புகழ், அறையில் அடங்கி விடுவது அன்று; அது உலகம் அளாவியது என்பதை உணர்த்துவது போன்று விழா ஓர் அறையில் அல்லது மண்டபத்தில் நடைபெறவில்லை; தலைமைச் செயலகத்தின், படைவீரர் அணிவகுக்கும் பரந்த வெளித்திடலில் நடைபெற்றது. செயலகத்தின் தலைமைச் செயலாளர் ஏனைய செயலாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் மட்டுமின்றி, அமைச்சர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும், கலைஞர்களும், பிறதுறைப் பெருமக்களும் ஏராளமாகக் கலந்து கொண்டனர்.

அரசுத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் தமிழிடம் கொண்டுள்ள ஆர்வத்தை முதலமைச்சர் மிகவும் பாராட்டினர். " தமிழ் வகுப்புக்களிலே பயின்று கொண்டிருப்பவர்கள் வள்ளுவத்தைப் பாராட்டினால் வியப்படைவதற்கில்லை, தமிழ்ப் புலவர்கள் வள்ளுவர்ப்பாடத்தை போற்றினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் சர்க்கார் துறையிலே பணியாற்றுகிறவர்கள் வள்ளுவரைப் போற்றுகிறார்கள் என்றால், உள்ளபடி நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும் " என்றார்.

தமிழ், தமிழர் குருதியோடு ஒன்றிக் கலந்துவிட்ட மொழியென்பதை, அவர் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினர். "தமிழ், ரத்தத்தோடு கலந்திருக்கிறது. நாம்தான் அதை மறந்து கொண்டிருக்கிறோமே தவிர, தமிழ் நம்மை மறக்கவில்லை. நாம் அதைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு முன்னாலே, அது நம்மைத் தேடித் தேடித் திரிந்து கொண்டிருக்கிறது. ஆகையால் தமிழைத் தக்க முறையிலே பயன்படுத்துவதற்கு அரசுத்துறையிலே உள்ளவர்களும் இன்றையத் தினம் மும்முரமாக ஈடுபட்டிருப்பது, தமிழுக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது

## 'புகாரில் ஒரு நாள்'

### உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி கவிதைப் போட்டி

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியீட்டுக் குழுத் தலைவர், மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், அறிவித்துள்ளதாவது :—

இரண்டாவது உலகத் தமிழ்மாநாடு சென்னையில் 1968ம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடக்க இருப்பதை ஒட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விருப்பத்திற்கிணங்க, இளங் கவிஞர்களுக்கான கவிதைப் போட்டித் திட்டம் ஒன்றை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். ' புகாரில் ஒரு நாள் ' என்ற தலைப்பில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பூம்புகார் பற்றி 100 வரிகளுக்கு மேற்படாமல் கவிதைகள் புனைந்து இளங் கவிஞர்களால் அனுப்பப்படவேண்டும். வரப்பெற்ற கவிதைகளில் சிறந்தாகத் தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் முதற் பரிசு வழங்கப்படும்.

பூம்புகாரின் சிறப்பு அம்சங்கள் பற்றி கவிதைகள் புனையப்பட வேண்டும்.

இக் கவிதைகள் எல்லாம் 'தனி அலுவலர், உலகத் தமிழ் மாநாட்டு அலுவலகம், சவுத்ரி காலனி, சென்னை-34, என்ற முகவரிக்கு, 1967 செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் நல்ல முறையில் எழுதப் பட்டு, கவி புனைந்தவரின் தெளிவான முகவரியுடன் அனுப்பப்பட வேண்டும்.

பரிசு பெற்ற கவிதை, மாநாட்டுச் சிறப்பு மலரில் வெளியிடப்படும்.

என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்றார், பெருமிதம் பொங்க.

பழம் பெருமை பேசுவதோடு நின்று விடாமல், புதிய வலிவும் பொலிவும் சேர்க்கவேண்டிய பொறுப்பினை அவர் வலியுறுத்தியது, பசுமரத்தாணிபோல் கூட்டத்தினர் உள்ளத்தில் பதிந்தது. தமிழகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே மிகப்பெரிய பண்பாட்டோடு வாழ்ந்தது என்பதில் நமக்கு மகிழ்ச்சி இருக்கிறது; அதிலே வலிவும் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் நமக்கு அந்த வலி விலே, ஒரு வலிவற்ற தன்மைதான் இருக்கிறது. எந்தப் பழம் பொருளுக்கும் வலிவும் உண்டு, வலிவற்ற தன்மையும் உண்டு. நம்முடைய நாட்டிற்கோ வலிவே வலிவற்ற தன்மையாகி விட்டது.

### புதிய வலிவும் வேண்டும்

" நெடு நாட்களுக்கு முன்னாலே பெரும் சிறப்பு நமக்கு இருந்தது என்ற பழம் பெருமை இருப்பதாலே, இப் பொழுது நமக்கென்று ஓர் இடத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் நாம் சரியான அளவுக்கு ஈடு பட முடியாமல், பழம் பெருமையைப் பற்றியே இன்ன மும் நாம் எண்ணிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக் கிறது. ஆகையினாலே பழம் பெருமையை எண்ணுகிற பொழுது நமக்கு வலிவு அளிக்கும். ஆனால் செயலிலே ஈடுபடுகின்ற நேரத்தில், புதிய உலகத்தின் நடவடிக்கை கள் நமக்குத் துணையாக இருந்தால்தான், அந்த வலி வற்ற தன்மை மாற்றப்பட்டுப் புதிய வலிவு நமக்குக் கிடைக்கும்." என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

விழாவிற்கு, மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் தலைமை தாங்கிப் பேசும் பொழுது தமிழின் இனிமையினையும் தொன்மைச் சிறப்பையும், தக்க மேற்கோள்களுடன எடுத்து விளக்கி னார். "நம்முடைய மொழி உலகத்திலேயே தொன்மை யான மொழி என்பதைக் கவிஞர்கள் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.." என்று அவர் கன்னித் தமிழ்ப் பாடல்களைக் கம்பீரக் குரலில் முழங்கியபோது, தமிழின் ஒலி இனிமையையும் பொருள் நயத்தையும் உணர முடிந்தது.

வள்ளுவப் பெருமை பற்றி அவர் விளக்கும் போது, "உலகத்திலே இருக்கிற அத்தனை இலக்கியங்களையும் ஒன்றாகத் திரட்டி ஒரு தட்டிலே அவைகளையும், மறு தட்டிலே நம்முடைய திருக்குறளையும் வைத்து எடை போட்டுப் பார்த்தால், திருக்குறள் இருக்கின்ற தட்டு அதிகமாகத் தாழ்ந்து நிற்கிற காட்சியைக் காண்போம். அந்த அளவிற்கு வலிவு மிக்க இலக்கியக் கருவூலத்தைப் பெற்றிருப்பவர்கள் நாம். அத்தகைய இலக்கியத்தை நமக்குப் படைத்துத் தந்துவிட்டுப் போயிருக்கிறவர் வள்ளு வர்" என்றார்.

"இன்றைக்கு நாம் வள்ளுவருடைய திருவுருவப்படத் தைத் திறந்து வைக்கிறோம். அவரது கருத்துகளையெல்லாம் நாட்டிலே நடமாட விடவேண்டும். திருவள்ளுவருடைய கருத்துக்களை இந்த நாட்டிலே பரப்பவேண்டு மென்று சொன்னால், நாம் அத்தனைபேரும் தமிழறிந்த தமிழர் களாக வாழவேண்டும்" என்று அவர் உணர்ச்சியோடு, குழுமியிருந்தோரைக் கேட்டுக்கொண்டார்.

மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் பேசும் பொழுது சொன்னார்: "இன்றையத் தினம் கூட்டுறவு வங்கியில் செந்நாப் போதார் திருவள்ளுவருடைய திருவுருவப்படத்தைத் திறந்து வைப்ப தன் வாயிலாக அந்த வங்கியைச் சார்ந்துள்ள பொறுப் பாளர்கள் தங்களுடைய தமிழ் உள்ளத்தை யெல்லாம் தமிழகத்திற்கு திறந்து காட்டியிருக்கின்றார்கள்" என்று பாராட்டினார். அவர் தொடர்ந்து பேசுகையில் "சிறிய இடத்தில் இந்தப் பெரிய படத்தை வைப்பதன் மூலம் 1,330 அரும் குறட்பாக்களால் அவனியை அளந்து காட்டியிருக்கின்ற பேரறிஞருடைய அறவழியில், தமிழகத் தினுடைய புதிய அரசு நடைபோடும் என்கின்ற தெளி வான விளக்கத்தை நீங்கள் நம்பிக்கையோடு இன்றையத் தினம் கொண்டிருக்கின்றீர்கள்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்று கூறிய வள்ளுவருடைய குறளை முற்றிலும் உணர்ந்து, இந்த அரசு நடைபெறும் என்ற நம்பிக் கையை இந்த நேரத்தில் நாம் அனைவரும் கொள்வோ மாக. திருவள்ளுவர் வகுத்த பல வழிமுறைகளை மைய மாக வைத்துத்தான், அண்ணா அவர்களுடைய தலைமை யிலே இன்றைய தமிழக அரசு நடைபெற்று வருகிறது என்பதனைத் தமிழ்ப் பெருமக்களும், தமிழறிந்த சான் றோரும், தமிழகத்திலே உள்ள நல்லோரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இது மிகையல்ல; உண்மையாகும். முற்றிலும் உண்மையாகும் என்று உணர்ச்சியோடு குறிப்பிட்டார்.

தமிழக அரசின் பேருந்து வண்டிகள் யாவற்றிலும் திருவள்ளுவர் திருவுருவப்படம் வைக்கவும், திருக்குறள் எழுதவும் அரசு தீர்மானித்திருக்கிற செய்தியையும், போக்கு வரத்துத் துறை அமைச்சர் வெளியிட்டார்.

### 'உண்மை'யும் 'வாய்மை'யும்

சமூகத்தில் எல்லாப் பிரிவினரும் ஒன்று சேர்ந்து, விடுமுறை நாளை வள்ளுவருக்கென்றே மகிழ்ச்சி கரைபுரளக் கொண்டாடக்கூடிய வகையில் திருவள்ளுவருக்கு விடப் படுகின்ற விடுமுறை நாள் அமைய வேண்டும் என்ற கருத்தை, சுவையோடும் செறிவோடும் எடுத்துச்சொன்னார் மாண்பு மிகு கல்வி, தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று, பரவசத்தோடு பாரதியார் பாடியதைச் சுட்டிக்காட்டி விளக்குகையில், ஒரு காலத் திற்கு, ஒரு மொழிக்கு, ஒரு நாட்டுக்கு, ஒரு சமயத்திற்கு என்றில்லாமல் மன்பதை முழுவதற்கும் உரியவராக வள்ளுவப் பெருந்தகை விளங்குவதை எழில்பட எடுத்துச் சொன்னார்.

"வாய்மை யெனப்படுவது யாதெனில், யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

என்ற குறளை விளக்கி அவர் பேசுகையில், "உண்மை என்பதற்கும் வாய்மை என்பதற்கும் வேறுபாடு உண்டு

உண்மை என்ருல், இருக்கின்ற உண்மையை, இருக்கின்ற வாறே எடுத்துச் சொல்வது. இருப்பதை அப்படியே சொல் வதால் முழுவதும் நன்மையே வந்துவிடாது. உலகத்தில், அண்டத்தில் இருக்கிற உண்மைகள், உள்ளத்தில் இருப் பவை உண்மை. ஆனால் வாய்மை என்பது 'தீமை இலாத சொலல்..' ஆகவேதான், சத்தியம் என்பதற்கு வாய்மை என்ற சொல்தான் பொருந்தி வருகின்ற ஒன்று" என்று தெளிவுபட எடுத்துக் கூறினர்.

**தலைமைச் செயலகத்தில் தமிழ்**

வங்கியின் தலைவர் திரு. கோ. முத்துப்பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசியது இனியதோர் உரை யாகவே அமைந்துவிட்டது. "வள்ளுவப் பெருந்தகை, நம் எல்லோரையும் இங்கு ஒன்று திரட்டியுள்ளார். படை யினர் அணிவகுப்பு வெளியிலே இன்று வள்ளுவர் படை திரண்டு நிற்கிறது" என்று தொடங்கிய அவர், "புதிய அரசு வந்த பிறகு, தமிழ் வளர்ச்சிப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற்று வருகின்றன" எனச் சுட்டி, "தலைமைச் செயலகத்திலே எல்லாம் தமிழாக மாறவேண் டும். இப்பொழுது படிப்படியாக மாற்றிவருகின்றோம். குறிப்புகளையும், வரைவுகளையும் நாம் தமிழிலே எழுதும் நிலை வரவேண்டும். நம்முடைய பணிகள் யாவும் தமிழி லேயே நடைபெறுகின்ற பொற்காலம் வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதுவே அரசு ஊழியர்கள் அனைவரின் இதய ஆவல் என்பது கூடி இருந்தோர் முகங்களில் தெளிவாகத் தெரிந்தது.

—திரு. மு. முத்துக்காளத்தி

## "உலகத்தின் கேள்வி"

(முதலமைச்சர்)

"என்னுடைய பத்தாவது வய தில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினை வுக்கு வருகிறது. என்னுடைய உறவினர் வீடு. அவர் வீட் டிலே ஒரு நாள் அந்தக் குடும் பத்திலே ஒரு பெண்மணி புகைப் படம் எடுத்துக் கொள்ளப் போகி றார்கள் என்று கேள்விப்பட்டு, அந்தத் தெருவே திரண்டு போயிற்று.

"அந்த வீட்டுக்கரசி தன்னு டைய வீட்டிலே இருந்த எல்லா விதமான நகைகளையும் போட்டுக் கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். இவ்வளவு நகைகளைப் போட்டுக் கொண் டார்களே தவிர, அவர்களுடைய முகத்திலேஉண்மையான மகிழ்ச்சி இல்லை. அதை என்னலே அப் பொழுது உணர்ந்து கொள்ள முடியவில்லை. இப்பொழுது எண்ணுகிறபொழுது தான் அத னுடைய முழுக் கருத்தும் எனக் குத் தெரிகிறது. அவர்கள் மகிழ்ச்சி இல்லாமல் நிரம்ப அணிகலன்களைப்போட்டுக்கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார் கள். நான் அதைப் பார்த்து விட்டு வீட்டிற்குச் சென்றேன்.

"பிறகு வீட்டிலே உள்ளவர் கள், 'எங்கே சென்ருய்?' என்றார்கள். 'இன்ன இடம் சென்றிருந்தேன், இன்னது நடந் தது' என்று சொன்னேன். 'ஐயோ பாவம்!' என்றார் கள். எனக்கு இன்னமும் ஐயப்பாடாகிவிட்டது. அவர்கள் போட்டுக் கொண்டிருந்ததோ அருமையான ஆபரணங்கள். எடுத்துக் கொண்டதோ புகைப் படம். வீட்டிற்கு வந்து கேட் டால் 'ஐயோ பாவம்' என் கிறார்கள். 'என்ன? என்ன?' என்று நச்சரித்தேன். உடனே மெல்லச் சொன்னார்கள். "யாருக் கும் சொல்லிவிடாதே. அந்த வீட் டிற்கு நிரம்பக் கடன் வந்து விட்டது. கடன்காரர்கள் தொல்லை தாங்க மாட்டாமல் நகைகளையெல்லாம் விற்றுவிடப் போகிறார்கள். விற்பதற்கு முன்னாலே ஒரு தடவை ஆசை தீரப் போட்டுக் கொள்ளலாம். எங்களிடத்திலே இன்ன நகை கள் இருந்தன என்பதைப் பதிவு செய்வதற்காகப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்" என்று சொன்னார்கள்.

"இது ஒரு வீட்டுக்கு நேரிட்ட போது எவ்வளவு வேதனையோ, அதைவிட ஆயிரக்கணக்கான வேதனை—நாம் போட்டுக் கொண் டிருந்த அணிகலன்களை யெல் லாம் ஒரு முறை புகைப்படமாக ஆக்கி, திருக்குறளாக ஆக்கி இருக்கிறோம். ஆனால், அத் தனை அணிகலன்களும் உலகச் சந்தையிலே ஏலத்திற்குப் போய் விட்டன. புகைப்படத்தைப் பார்த்து—இதோ பாருங்கள் அட்டிகை, அதோ கையில் உள் ளதே அது வைரக்கல் வங்கி என்று அந்த வீட்டுக்கார அம் மையார், வறிய நிலையிலே பிறகு கேட்கிற நேரத்திலே காட்டுகிற பொழுது—'இதெல்லாம் இருந் ததா? நீங்களா போட்டுக் கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்பார்களே அதே போலத் தான் உலகம் நம்மைப் பார்த்துக் கேட்கிறது. 'வள்ளுவரா உங் களுடைய நாட்டில் இருந் தார்? திருக்குறளா உங்க ளுடைய நூல்?" என்று.

(தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கூட்டுறவு வங்கியில் திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்பு மிகு முதலமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி.)

### தமிழக அரசு பொதுக்கடன்

தமிழக அரசு பொதுக் கடனுக்கு (ரூ. 17 கோடி) தாராள முதலீடு செய்யு மாறு, மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் சென்னை ராஜாஜி மண்ட பத்தில் 18-8-67 அன்று நடைபெற்ற வங்கி தொழில் அதிபர்கள் கூட் டத்தில் வேண்டுகோள் விடுத்தார். எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இதில் ஊக்கம் காட்டினர்.

கடன் தொகை முழுவ தும், அதற்கு மேலாகவும் செலுத்தப்பட்டு விட்டது என்பதை, தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

"நெற்பயிரிடும் முறையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை மேற்கொண்டும், இருக்கும் நிலம், கிடைக்கும் நீர் ஆகியவற்றை மேலும் பயன்தரும் வகையில் ஈடு படுத்தியும், நவீன முறைகளை விவசாயத்தில் கையாண்டும், அரசிடமுள்ள எல்லா வசதிகளையும் ஒருங்கிணைத்தும், அரசு நிர்வாகப் பணிகளை இத்துறையில் மேலும் ஆர்வம் காட்ட ஆவன செய்வதன் வாயிலாக உணவு உற்பத்தியில் தற்போது ஓரளவு பற்றாக்குறையாக உள்ள நமது மாநிலம், கூடிய விரைவிலேயே பெருமளவு உபரி மாநிலமாகி விடும் என்பதில் எனக்குப் பெரும் நம்பிக்கையிருக்கிறது.

**14 லட்சம் டன் கூடுதல் உற்பத்திக்கு வழி**

உணவு உற்பத்திக் கமிஷனர் (திரு. ஈ. பி. ராயப்பா) ஓர் ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். நடப்பு ஆண்டில் கூடுதலாக 14 லட்சம் டன்கள் அரிசியை உற்பத்தி செய்வதற்கு, செயலளவில் சாத்தியமாகக்கூடிய, சீக்கிரமே பயன்தரக்கூடிய ஒரு திட்டத்தை அவர், தமது ஆய்வு அறிக்கையில் கூறியுள்ளார். இத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் மேலும் 25 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டால் அவை உணவு உற்பத்தித் துறையில் ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்தும்.

உள்ள நாற்றங்கால்களைக் கொண்டு, நடவு வேலைகள் மும்முரமாக துவங்கிவிட்டன. இந்த மாபெரும் திட்டம் ஒரு முறை வெற்றி பெற்றுவிட்டால் போதும்; பிறகு அதுவே ஒரு தூண்டுதலாக அமைந்து, காவிரி டெல்டா பகுதிகளில், பயிரிடும் முறையில் ஒரு பெரும் மாற்றத்தை உண்டாக்குவதற்கு வழி கோலுவது திண்ணம். இத் திட்டத்தினால் 6·60 லட்சம் டன் நெல் கூடுதலாக உற்பத்தியாகும்.

இதையொத்த மற்றொரு விரைவுத் திட்டம், சிறிய அளவில், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சாத்தனூர் நீர்த்தேக்கப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நீர்த்தேக்கத்தில் போதிய அளவிற்கு நீர் மட்டம் உயர்ந்திருப்பதைச் சாதகமாகக் கொண்டு, 10,000 ஏக்கர்களில் மேலும் ஒரு போக சாகுபடியைக் கூடுதலாகச் செய்வதற்கு, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ல் திறந்துவிடப்பட வேண்டிய நீர், இவ்வாண்டு ஜூன் 16-லேயே விடப்பட்டுள்ளது. தங்களது நிலங்களில் நெற் பயிரிடுவதற் கேற்றவாறு, அவற்றைப் பண்படுத்திக் கொள்வதற்கெனவும், விதைகள், உரங்கள் பெறுவதற்கெனவும், விவசாயிகளுக்கு கடன் உதவிகள் அளிக்கத்

# உணவு உற்பத்தியில் தேவைக்கும் மிஞ்சும் நிலை தமிழகம் எய்த இயலும்



**(மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்.)**

தமிழகத்தின் நெற் களஞ்சியம் தஞ்சை மாவட்டம். இங்குள்ள 12 லட்சம் ஏக்கர் நிலங்களிலே, 9 லட்சம் ஏக்கர் நிலங்களில் வழக்கமாக சம்பா மட்டுமே ஒரு போகமாக பயிர் செய்யப்பட்டு வருகிறது. இந்த 9 லட்சம் ஏக்கர் ஒரு போக சம்பா நிலங்களில், 6 லட்சம் ஏக்கர் நிலங்களை இரு போகமாக மாற்றும் திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கி, நெற் பயிரிடும் முறையிலே ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மிகு விளைச்சல் தரும் நெல் ரகமான ADT 27 முதற் போகத்தில் பயிரிடப்படுவதைத் தொடர்ந்து ASD 5 மற்றும் CO 32 ஆகியவை இரண்டாம் போகத்தில் பயிரிடப்படும். இத் திட்டத்தில் பங்கு பெறும் விவசாயிகளுக்கு ADT 27 நெல் ரக விதைகளை வழங்குவதற்காக, அவ்விதைகளை வாங்குவதற்கு அரசு ரூ. 65 லட்சத்திற்கு அனுமதியளித் துள்ளது. தேவையான உரங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்கு மாவட்ட அளவில், களப்பணியிலுள்ள எல்லா அரசுத் துறைகளும் 'முடுக்கி' விடப்பட்டுள்ளன. மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து ஜூலைத் திங்கள் 3-ம் நாள் தண்ணீர் விடப்பட்டுள்ளது. ஏற்கனவேயே தயாராக

தேவையான நிதி, கலெக்டர்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மொத்தமுள்ள 12,000 ஏக்கர் ஆயக்கட்டி லும் ADT 27-ஐக் கொண்டு சாகுபடி செய்வதே நோக்கமாகும்.

இதே போன்ற இன்னொரு விரைவுத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பகுதிகளிலுள்ள 12,000 ஏக்கர்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**மகிழ்ச்சிக்குரிய மகசூல்**

இந்தப் பயிர்களெல்லாம், 1967-ம் ஆண்டு செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும் என்பதும், அம்மாதங்கள்தான் நெல் உற்பத்தியில் மிகவும் குறைவான மாதங்கள் என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது. இந்த மகசூல் பெருமகிழ்ச்சிக்குரிய ஒன்றாக இருக்கும்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதில், அந்தந்தப் பகுதி களில் பயிர் செய்யப்பட்டுவரும் உள்ளூர் ரக விதைகளை விட, தேர்ந்தெடுக்கப்பட்ட விதை ரகங்கள், மிகு விளைச்சல் தரும் தன்மையையும், பூச்சிகள், நோய்கள் தாக்குவதை தாங்கும் வலிமையையும் பெற்றுள்ளதோடு, அறு

வடைக்குத் தயாராகும் பருவம் அல்லது காலத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு அமைந்து, அவை மிகவும் உயர்வானதாகவே காணப்படுகின்றன.

நடப்பாண்டில் 18 லட்சம் ஏக்கர் நிலங்களில் நெல்லும், 82,000 ஏக்கர்களில் தானியங்களும் பயிரிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மிகு விளைச்சல் தரும் தானியங்களைச் சாகுபடி செய்யும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் வாயிலாக, 6 லட்சம் டன் அரிசியும் 41,000 டன் தானியங்களும் அதிகமாக உற்பத்தியாகும்.

**இப்போதைய முதற் காரியம்.**

ஏரிகளில் வண்டல்கள் தங்கிவிடுவதனால், அவற்றின் நீர்த்தேக்க அளவு மிகவும் குறைந்து விடுகிறது. இவ்வாறு குறைவடைந்துபோன நீர்த்தேக்க அளவினை, பழைய முழு அளவு நீர்த்தேக்க மட்டத்திற்கு ஏரிகளை செப்பனிடுவதாலும் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். இவற்றைத் துரிதமாக நிறைவேற்றுவதே, இப்போது செய்யவேண்டிய முதற்காரியம். இவ்வித ஏரிகளை சரிசெய்வதற்கென அனேக துறைகள் உள்ளன. நீர்ப்பாசன ஆதாரங்கள் அனைத்தையும் கவனிப்பதற்கென, அவற்றை ஒரே துறையின்கீழ் கொண்டுவர உத்தேசிக்கப் பட்டுள்ளது.

பெரியாறு, புதிய கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய், அமராவதித் திட்டப் பகுதிகளைச் சார்ந்த ஆயக்கட்டுகள், மற்றும் பல சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களைச் சார்ந்த பகுதிகளில் கிணறுகள் தோண்டப்பட்டால் மேலும் ஒரு போகம் பயிர் அந்தப் பகுதிகளில் செய்ய முடியும். எனவே இவ்விடங்களில் 2,00,000 கிணறுகளைத் தோண்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

போதிய நிதிவசதி இருந்தால் நீரிறைப்பதற்கென 18,000 ஆயில் என்ஜின்களையும், 1,16,000 மின்சார மோட்டார்களையும் ரயத்துகளுக்குக் கொடுக்க முடியும். அவற்றால் மேலும் 2·5 லட்சம் டன் அரிசி கிடைக்கும்.

குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் நல்ல வாய்ப்பிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 2,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்கும் விரைவுத்திட்டம் ஒன்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைக்கும் மற்றொரு திட்டமும் முன்னேறி வருகின்றன. உலக பாங்கின் உதவியுடன் தஞ்சை மாவட்டத்தில் 10,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டும் சிறப்பு வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் சேர்த்து, 15,400 வடிமுனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்டும் திட்டம் ஒன்றிற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது.

சிறிய நீர்ப்பாசனத்தில் உள்ள வேலைத் திட்டங்கள் அனைத்திற்கும் ரூ. 786·00 லட்சத்திற்குமேல் நிதியை ஒதுக்குவதற்கு இயலவில்லை. கமிஷனரின் ஆய்வு அறிக்கையிலுள்ள எல்லாத் திட்டங்களையும் மேற்கொள்ள அரசு பெரிதும் விரும்பினாலும், அத் திட்டங்கள் அனைத்திற்கும் நிதிகளைத் திரட்டுவதற்கு மாநில அரசிற்கு நிதி ஆதாரங்கள் இல்லை. நிதி பற்றாக்குறைக்காகவே இத் திட்டங்களை கைவிடக்கூடாது என்பது அரசின் திண்ணமான எண்ணமாகும்.

எனவே இவற்றிற்காக, திட்டத்தில் சேராதவாறு கூடுதலாக 20 கோடி ரூபாயை மத்திய அரசு, மாநில அரசிற்கு அளிக்கவேண்டி மாநில அரசு நன்கு வலியுறுத்தியுள்ளது.

மத்திய அரசு நமக்குப் பணத்தைத் தந்தால், திரு ராயப்பா அவர்களின் ஆய்வு அறிக்கையிலுள்ள திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக செயல்படுத்த இயலும்.

நம் மாநிலத்திலுள்ள ஒவ்வொருவரின் தேவையையும் பூர்த்தி செய்வது மட்டுமின்றி, அண்டை மாநிலங்களுக்கு 5 லட்சம் டன்கள் அரிசியைக் கொடுக்கவும், அந்தந்த மாநிலங்களில் மிகு விளைச்சல் தரும் நெல் ரகங்களை பயிரிடும் திட்டங்களுக்காக, நாம் அந்த ரக விதைகளை அவர்களுக்கு வழங்கவும் இயலும்.''

---

# நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்

## 1968-ம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெறும்

தமிழகத்திலுள்ள நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை 1968-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடத்துவதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஆகஸ்ட் 31-ம் நாளன்று சென்னை கோட்டையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திற்குப் பிறகு, இத் தகவலை மாண்புமிகு முதலமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

'வார்டு'களைத் திருத்தியமைத்தல், வாக்காளர் திருத்தப்பட்டியல்களைத் தயாரித்தல் ஆகிய வேலைகள் அதற்குள் முடிவடைந்துவிடும் என்று அவர் கூறினார்.

தமிழகத்தில் 84 நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன.

### சென்னை மாநகராட்சித் தேர்தல்

சென்னை மாநகராட்சித் தேர்தல் பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றாலும், அத்தேர்தலும் அநேகமாக வரும் பிப்ரவரித் திங்களிலேயே நடக்கக்கூடும் என்று மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கூட்டு முயற்சியால் சமுதாய வளர்ச்சி

பலமனேரு என்ற பஞ்சாயத்துச் சமிதி ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கிறது. இச் சமிதியிலுள்ள கிராம வானொலி மன்றங்களில் சில, குறிப்பிடத்தக்க வகையில் சிறந்த பணியாற்றியுள்ளன. தொட்டாகுளம், கொடமானசப்பள்ளி ஆகிய இரு கிராமங்களிலுள்ள கிராம வானொலி மன்றங்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளுக்கு உதவியதை விளக்கிக் கூறினர், திரு பி. ராமையா கௌடு என்ற பஞ்சாயத்துத் தலைவர். அம்மன்றங்கள், உறுப்பினர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன என்றும், அவற்றிற்குப் போதிய ஊக்கம் அளிக்கப்படுமென்றும் அவர் கூறுகிறார்.

## உடலுழைப்பால் உயர்வு

சமிதியிலிருந்தோ, கிராமப் பஞ்சாயத்திலிருந்தோ நிதி உதவி எதுவும் பெறாது, உடலுழைப்பினை மட்டுமே கொண்டு, 15 பள்ளிக்கூடங்கள் கட்டபெற்றன என்று சமிதித் தலைவர் பெரு மகிழ்ச்சியுடன் கூறுகிறார். இவை தவிர, இடிந்த நிலையிலுள்ள 10 பள்ளிகள் உடலுழைப்பின் மூலம் சீர்திருத்தப்பட்டன. மேலும், ரூ. 1,500-ஐ, உதவி நிதியாக ஒவ்வொரு பள்ளிக்கும் பெற்று, பல பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பள்ளிக்கும் மக்கள் நன்கொடையாக அளித்த ரூ. 250-ஐக் கொண்டு ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நாற்காலி, ஒரு மேசை, ஆவணங்கள் வைக்கும் பெட்டி ஒன்று, அமரும் பலகைகள் ஆகியவையுடன் தோட்ட வேலைக் கருவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமங்களிலுள்ள 2,985 குழந்தைகளுக்கு, உணவூட்டுவதற்காக 53 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மதிய உணவிற்காக ஏற்படும் செலவுகளைச் சமாளிக்க, பள்ளி மாணவன் ஒருவனுக்கு 2 ரூபாய் வீதம் ஆண்டுக்கொருமுறை பொதுமக்களிடமிருந்து நிதி வசூலிக்கப்படுகிறது. பொன்னமாகுளப் பள்ளியிலுள்ள ஆரம்பப் பள்ளியே அழகிய காய்கறித் தோட்டத்தினை உருவாக்குவதில் முதன்மையாக இருந்தது. சமிதியின் நிர்வாகத்திலுள்ள 135 பள்ளிக் கூடங்களில், 9,914 மாணவர்கள் பயில்கின்றனர்.

## தீவிரப் பிரச்சாரங்கள்

பலமனேருப் பகுதி, கடல் மட்டத்திலிருந்து 2,247 அடி உயரத்திலிருக்கிறது. அதன் பரப்பளவு 342·76 சதுர மைல். அதன் மக்கள் தொகை 95,132. சமிதி, 83 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட 48 பஞ்சாயத்துக்களை உடையது. விவசாய உற்பத்தியைப் பெருக்க, 74 செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. தொழு உரமும் தழை உரமும் தயாரிப்பதற்கு ஊக்கமூட்டும் வகையில் தீவிரப் பிரசாரங்கள் செய்யப்பட்டன. இதனால் 750 உரக் குழிகள் வெட்டப்பட்டன. தழை உரங்கள் விஞ்ஞான முறையில் பயிரிடப்பட்டன. வீட்டுத் தோட்டங்களுக்காகக் காய்கறி விதைகள் இலவசமாகவே வழங்கப்பட்டன. ஜப்பானிய முறைப்படி நெல் சாகுபடி செய்வது பிரபலப்படுத்தப்பட்டு, பொறுக்கு விதைகள், நாற்றுக்கள், கிருமி நாசினிகள், நவீன விவசாயக் கருவிகள் அடங்கிய பொருட்காட்சி ஒன்றும் பலமனேருவில் திறந்து வைக்கப்பட்டது.

அங்குள்ள சீதோஷ்ண நிலை, திராட்சை வளர்வதற்கு ஏற்றதாக இருக்கிறது. திராட்சைப் பயிரில் முன்னேறிய விவசாயிகளுக்கு உதவித் தொகையாகவும், கடனாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

பலமனேரு, வி. கோடாவில் கால்நடை மருந்தகங்கள் இரண்டும், நெல்லிப்பட்லா, கொங்கதம், பைபகாரிபள்ளி ஆகிய கிராமங்களில் மூன்று கால்நடை முதலுதவி நிலையங்களும் இருக்கின்றன. கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காகப் பலமனேருவில் அரசுக் கால்நடைப் பண்ணை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

ப. கோடாவிலுள்ள ஆதார சுகாதார நிலையமும், அதன் துணை நிலையங்களும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி செய்வதோடு, பிளேக்கு, காலரா, அம்மை போன்ற தொற்று நோய்களையும் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்கிறது. சுத்தமான குடிநீர் வசதியும் சமிதியின் கண்காணிப்பில் இருக்கிறது.

## கூட்டுறவு முயற்சியே நாட்டு வளம்

சமுதாய வேலைகளிலும், தனக்குத் தானே உதவிக்கொள்ளும் உணர்வை பலமனேரு சமிதி ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், சங்கம் நாடகங்கள் நடத்தி, அதில் வரும் நிதியைக் கிராம வளர்ச்சிக்காகப் பயன்படுத்துகிறது.

23 சாலை வேலைகளை சமிதி மேற்பார்வையிடுகிறது. 38 கடன் கூட்டுறவுச் சங்கங்களும், 11 சிறப்புச் சங்கங்களும், 83 கிராமங்களில், 67 கிராமங்களுக்கு உதவி செய்கின்றன. 25 மகளிர் சங்கங்கள் நிறுவப்பட்டு, அவற்றில் 44 பெண்களுக்கு தையற் கலையில், பயிற்சி அளிக்கப்படுகின்றது.

பலமனேரு கிராமம் சுய முயற்சியால் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு, இக் கிராமம் நல்லதொரு எடுத்துக்காட்டு. கூட்டு முயற்சியே நாட்டு வளத்தைப் பெருக்க முடியும்.

# மேனாட்டுக் காய்கறிகள்

ஆந்திராவின், மேற்கு கோதாவரி மாவட்டத்தி லுள்ள கோவூருக்கு, 12 மைல் தொலைவிலுள்ள ராவூருப்பாடு என்ற கிராமம், கடந்த 30 ஆண்டுகளாக மேனாட்டுக் காய்கறிகளைப் பெருமளவு பயிர் செய்து வந்துள்ளது.

நவம்பர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரை, ஒவ்வோராண்டும், முட்டைக்கோஸ், பீட்ரூட், காலிப்ளவர், தக்காளி போன்ற பயிர்களால், நிரம்பியுள்ள அப்பசிய வயல்கள், காண்பவர் கண்களுக்கு விருந்தளிப்பவனவாக இருக்கின்றன. அங்குள்ள விவசாயிகள் சிறிது நிலத்தையும் கூட வீணே விடாது, ஓராண்டில், மூன்று போகப் பயிர்களைப் பயிரிடுகின்றனர். மேனாட்டுக் காய்கறிகளை அடுத்து, ஒவ்வோராண்டும் எப்ரல் முதல் ஜூலை மாதம் வரை எள்ளைப் பயிரிடுகின்றனர். அக் கிராமத்தில், 400 ஏக்கர் நிலமும் காய்கறி பயிரிடுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. 200 ஏக்கர் நிலத்தில் காலிப்ளவரும், 100 ஏக்கர் நிலத்தில் முட்டைக் கோஸும், 50 ஏக்கரில் பீட்ரூட்டும், 50 ஏக்கரில் தக்காளியும் பயிர் செய்யப்படுகின்றன. அங்குள்ள முட்டைக் கோஸுகள் 2 கிலோ முதல் 5 கிலோ வரை இருக்கும். வடிமுனைக் குழாய்கள் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. நீர்ப்பாசனத்திற்குத் தடையே ஏற்பட்டது இல்லை.

### பெரிய அளவில் காய்கறிகள் விற்கப்படுகின்றன

இந்நிலங்களைப் பல விவசாயிகள் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, பல ஆண்டு காலமாக பயிரிட்டு வருகின்றனர். அங்கு பயிரிடுவதற்குச் செலவாகும் தொகை ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ. 1,100 ஆகும். ஆனால், 400 ஏக்கரிலிருந்தும் கிடைக்கும் நிகரலாபம் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 4 லட்சமாகும். அங்குள்ள விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை ராஜமுந்திரி, விசாகப் பட்டினம், விஜயவாடா ஆகிய நகரங்களுக்கு அனுப்புவதற்குரிய போக்குவரத்து வசதிகளை அவர்களே ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

சிற்றுண்டிச் சாலைகள், மருத்துவ நிலையங்கள், ஜார்ஜ் அரசர் மருத்துவ மனை, படை வீரர்கள் உணவு விடுதிகள் போன்ற பெரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு காய்கறிகளைப் பெருமளவில் விற்று, அதிக பயனடைய அதற்குரிய வழி வகைகளை மாவட்ட அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். விவசாயிகளுக்குக் கூடுதலான ரசாயன உரங்கள் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளையும் அவர்கள் செய்து வருகின்றனர்.

ராவூருப்பாடு கிராம விவசாயிகள், அவ்வாறு மேனாட்டுக் காய்கறிகளைப் பெருமளவில் அக் கிராமத்திலேயே பயிரிடுவதன் நோக்கம் என்ன என்று ஆராய்ந்ததில், அங்குள்ள விவசாயிகள் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளத் தீர்மானித்ததே அதற்குக் காரணம் என்று தெளிவாயிற்று. மேனாட்டுக் காய்கறிகள் அவர்களுக்கு எதிர்பார்த்த லாபத்தை அளிப்பதால், அவர்கள் தங்கள் தொழிலிலே மிகவும் மகிழ்ச்சியடைகின்றனர்.

### தானிய உணவு, காய்கறி உணவு

நமது நாடு, உணவுத் துறையில் மிகவும் பின் தங்கியுள்ளதால், காய்கறி உணவுப் பொருட்களைச் சார்ந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகிவிட்டது. நம்மில் பெரும்பான்மையோர், தானிய உணவு வகைகளுக்கே முக்கியத்துவம் அளித்து, சத்துள்ள உணவாகிய பால், பால் பொருட்கள், பழங்கள், காய்கறிகள் கிழங்குகள், முட்டைகள், மீன், இறைச்சி ஆகியவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதில்லை. பெருகிவரும் நம் மக்கள் தொகைக்கு உணவளிக்க இத்தகைய உணவு பொருட்கள் இன்றியமையாதன. சர்க்கரை வள்ளிக் கிழங்கு, வாழைப் பழங்கள், காய்கறிகள் போன்றவை சிறு நிலங்களிலும் கூட பயிர் செய்ய ஏற்றவை.

விரிந்து கிடக்கும் இக்கிராமப்புறத்தில், ராவூருப்பாடு விவசாயிகள், உண்மையாகவும், உறுதியுடனும் உணவு உற்பத்தியைப் பெருக்கியுள்ளனர். உணவுப் பொருட்களுக்காக நம் நாடு வெளிநாடுகளை நம்பியிருக்கும் இப்போதைய நிலையிலிருந்து நாம் மீள்வதற்கு ஏனைய விவசாயிகளும், இவ்விவசாயிகளைப் போன்றே திண்மையாக உழைப்பார்களாக.

# வானொலி மன்றங்களுக்கு சிறப்புச் செய்தி

''உணவைப் பெருக்கும் முயற்சியிலும், ஊராட்சி பற்றிய திட்டங்களிலும் மக்கள் கவனத்தை ஈர்க்க வானொலி மன்றங்கள், மேலும் செம்மையாகப் பணிபுரியலாம்.''

தமிழகத்தின் பல்வேறு மூலை முடுக்குகளில் உள்ள கிராம மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, அவர்களது நியாய மான ஐயப்பாடுகளைத் தீர்க்கவும் புதிய செய்திகளை உணர்த்தவும் இத் திட்டத்தால் வழி பிறக்கிறது.

* * *

—உத்திரமேரூர் கல்வெட்டுக்களிலும், தமிழ் இலக்கியச் சான்றுகளிலும் பொதிந்துள்ள செய்திகளை அறியும் போது, அயல்நாட்டார் பெரிதும் வியந்து மகிழ்கின்றனர்.

நாம் பழம்பெருமை பேசுவதோடு நின்று விடாமல், புதிய சாதனைகளை உருவாக்க வேண்டும்.

''நாட்டில், சமுதாயத்தில், காணப்படும் இல்லாமை, கல்லாமை போன்றவைகளைப் போக்கி 'எல்லார்க்கும் எல்லாம்' என்கின்ற நிலைபெற்ற இன்பம் தத்தித் தவழும் புதியதோர் சமுதாயம் காணப்புறப்படுவோம் வாரீர்!''

(மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி)

''செல்வத்துட் செல்வம்
செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை''

என்பது வள்ளுவர் வாக்காகும். இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாக இன்று நம் தமிழ் நாட்டிலே, கிராம வானொலி மன்றங்கள் சிறந்த முறையில் பணியாற்றுவதைக் கண்டு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''சுழன்றும் ஏர்ப்பின்னது
உலகம் எனவே
உழன்றும் உழவே தலை''

என்பது உலகம் ஏற்றுக்கொண்டுள்ள உண்மையாகும். இதனையுணர்ந்து, இத்துறையில், திருச்சி வானொலி நிலையத்தார் செய்யும் பணி, பாராட்டுக்குரியது. குறிப்பாக, கடந்த ஓராண்டு காலமாக நடந்து வரும் 'வானொலிப் பண்ணைத் திட்டம்', ஊராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன், மேலும் செம்மையாக நடைபெற, இணைந்து செயல்படுவோமாக! இது பற்றி, தஞ்சை மாவட்டம், செம்பனார் கோயில் ஊராட்சியிலே, சில வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற சிறப்பு விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு எ. கோவிந்தசாமி அவர்களும், மற்ற சான்றோர்களும் வெளியிட்ட கருத்துக்களைச் செயல்படுத்த, தமிழக அரசு முயலும்.

## கூட்டு முயற்சி

'செய்வன திருந்தச் செய்' என்னும் முதுமொழிக்கேற்ப, கிராம வானொலி மன்றங்கள், மக்களுக்கு மேலும் பயனுள்ள முறையில் பணியாற்றுவதற்கு, கிராம வளர்ச்சித் துறையினரும், வேளாண்மைத் துறையினரும், வானொலி நிலையத்தினரும், கூட்டுமுயற்சி மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக, கிராம வளர்ச்சித் துறையினர், தமிழகமெங்கும் ஊராட்சிகளில் அமைந்துள்ள சுமார் 15,000 வானொலிப் பெட்டிகள் திறமையுடன் இயங்கத்தக்க நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். வானொலிப் பெட்டிகளை உடனுக்குடன் பழுது பார்க்கவும், வானொலி மன்ற நடவடிக்கைகளை ஊக்கமுடன் மேற்பார்வையிடவும், ஏற்கெனவே கிராம வளர்ச்சித் துறை, நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் புதிதாக, வானொலி மன்றங்களை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டும். எடுத்துக்காட்டாக மாவட்டத்திலுள்ள கோட்டாட்சியாளர் ஒவ்வொருவரும், குறைந்தது இருபது புதிய வானொலி மன்றங்களை அமைக்க முயன்றால் ஒவ்வோர் ஆண்டும், சுமார் ஓராயிரம் கிராம வானொலி மன்றங்கள் புதிதாகச் செயல்பட முடியும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இதில் தமது கவனத்தைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

## பண்ணைத் திட்டப் பலன்

வானொலி மன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, ஒரு வார காலத்திற்குள் அந்தந்தத் துறையினரிடமிருந்து, தக்க பதில்கள் கிடைக்கவும், அந்தப் பதில்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில், ஒரு வாரத்திற்குள் ஒலிபரப்பவும், இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. அதாவது, தமிழகத்தின் பல்வேறு மூலை முடுக்குகளில் உள்ள கிராம மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, அவர்களின் நியாயமான ஐயப்பாடுகளைத் தீர்க்கவும், புதிய செய்திகளை உணர்த்தவும், இதனால் வழி பிறக்கிறது. சிறப்பாக, உணவைப் பெருக்கும் முயற்சியிலும், ஊராட்சி பற்றிய திட்டங்களிலும் மக்களின் கவனத்தை ஈர்க்க வானொலி மன்றங்கள், செம்மையாகப் பணிபுரியலாம்.

**இதயம் கவர இனிய தமிழ்**

தமிழ் மொழி, நமது மக்கள் வாழ்வில் ஒன்றிவிட்ட உயிர் மூச்சு. எனவே, தமிழ் மொழியின் வளம், பல்வேறு துறைகளிலிருந்தும் ஒன்று திரண்டு, உரம் பெற்று வளர வேண்டும். இலக்கிய நயத்திலும் இலக்கண மாட்சியிலும், பல்லாயிரம் ஆண்டுகளாகப் பண்பட்டு விளங்கும் நமது தமிழ் மொழி, செல்வமும் செல்வாக்கும் பெற்றுச் சிறப்புற வேண்டும். அதற்கேற்ற வாய்ப்பும் வசதிகளும் எங்கும் பெருக வேண்டும்.

''கேட்டார்ப் பிணிக்கும்
தகையவாய், கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்''

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, எளிய, இனிய தமிழால் கருத்துக்களை எடுத்துரைத்து மக்களின் இதயம் கவர, இவ்வானொலி மன்றங்கள் பாடுபடவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

**மக்கள் கருத்தறிந்து மாற்றம் செய்ய..**

சமுதாய நலத் திட்டத்தைத் தக்க முறையில் சீர்திருத்தும் பணியை, ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும், மக்கள் அனைவரின் மன நிலையைத் தக்கவாறு உணர்ந்தும், செயல்படுத்த விரும்புகிறோம். இதற்காகவே, நமது மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சிறப்பு ஆலோசகர் திரு முருகேச முதலியார் அவர்கள், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு, மத்திய பிரதேச மாநிலத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கு நடைபெறும் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி ஆராய ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் விளைவாக, அவர் உருவாக்கிய அறிக்கை ஒன்று 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியில், தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் தலைமையில், சட்டப் பேரவையில் உள்ள சர்வ கட்சித் தலைவர்களுடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அன்றைய தினம், அந்த அறிக்கையைப் பற்றிய பொதுவான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இதைப் பற்றி அனைவரும் சிந்தனை செய்ய, மேலும் அவகாசம் தேவை என்ற குறிப்பை உணர்ந்தறிந்த நமது முதலமைச்சர் அவர்கள், இதற்கென ஒரு மாத கால அவகாசம் அளித்ததோடு, சர்வகட்சித் தலைவர்கள், தம் தம் கட்சியினருடனும், இத்துறையில் ஈடுபாடுள்ள சான்றோருடனும் கலந்து ஆராய்ந்து, 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதிக்குள், அவர்களின் கருத்துக்களை அறிக்கையாகத் தயாரித்துத் தமக்கு அளிக்குமாறு அறிவித்தார். இதை, 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற அவசரத்தில் அள்ளித் தெளிக்காமலும், கட்சிப் பிரச்சினையாக்காமலும், மக்களாட்சி முறையில், ஒரு மனதாகச் செயல்பட, தமிழக அரசு முயல்வது, இதனால் நன்கு விளங்கும்.

மொத்தத்தில், ஊராட்சி நிறுவனங்கள் வலிவுள்ள அமைப்புகளாகப் பணியாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். இதற்கு அனைவரின் உளமார்ந்த ஒத்துழைப்பையும் பெற்று, சிறந்த முடிவு காண முயன்று வருகிறோம்.

**எதிர்காலம் சிறக்க வள்ளுவர் வழி**

தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும், பட்டி தொட்டிகளிலும் பரந்து கிடக்கும் பல்லாயிரக் கணக்கான பாமர மக்களின் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள இத்துறையின் எதிர்காலம், சிறந்து விளங்க வேண்டுமென்பது எனது ஆவல், இதற்கான 'வினைத்திட்பமும்' 'வினை செயல்வகையும்' 'வினைத் தூய்மையும்', வள்ளுவர் வழி நின்று, நாம் வளர்த்துக்கொள்வோமாக!

முப்பால் வகுத்த திருவள்ளுவர், செயல் திறனைக் குறித்து, மூன்று அதிகாரங்களை இயற்றியுள்ளார். அவற்றை, ''அமைச்சி''யலிலே 'சொல்வன்மை' என்ற அதிகாரத்தை அடுத்து, மிகப் பொருத்தமாக அமைத்துள்ளார். நாநலம் மட்டும் போதாது, செயல் திறமையும் வேண்டும் என்று வற்புறுத்துகிறார். சமுதாய நலப் பணிகளில் ஈடுபட்டுள்ளவருக்கு, இவை சிறந்த பயனளிக்கவல்லன.

இவற்றில், 'வினைத் தூய்மை' பற்றி யாருக்கும் ஐயம் தோன்றாது. ஏனெனில், மக்கள் நலனுக்கான பொதுப் பணிகளில் ஈடுபடுவோர் செய்யும் செயல்கள் அனைத்தும், தூய்மையாகத்தான் இருக்கவேண்டும். இந்தக் கொள்கையில் யாருக்கும் ஐயப்பாடு ஏற்படாது.

**'வினைத் திட்பம்—வினை செயல்வகை'**

ஆனால், அதற்கு அடுத்ததாக உள்ள ''வினைத் திட்பம்'', ''வினை செயல்வகை'' ஆகியவற்றில், அவரவர் ஏற்றுள்ள பொறுப்புக்கு ஏற்ற படி மாறுபாடுகள் உண்டு. கிராம நல ஊழியர் முதலாக உள்ள அலுவலர்கள், ஊராட்சித் தலைவர்கள் முதலிய அனைவரும், தமது பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்ற வேண்டும்.

''கலங்காது, கண்ட வினைக்கண் துளங்காது,
தூக்கம் கடிந்து செயல்''

என்பது, ''வினைத் திட்பம்'' பெறுவதற்கு, வள்ளுவர் கூறும் வழி. அதிகாரிகள், சிக்கல்களைத் துணிவோடு தீர்க்கவும், சோர்வடையாமல் உற்சாகமாகப் பணியாற்றவும் உறுதிகொள்ள வேண்டும். மக்களிடம் பரிவு காட்டி, காலதாமதமின்றி, செயல்பட வேண்டும்.

''பொருள், கருவி, காலம்,
வினை, இடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்''

என்பது 'வினை செயல்வகை' குறிக்கும் ஒரு குறள். ஊராட்சி நிறுவனங்களுக்குத் தேவையாகும் வரிகளை, மக்கள் மனமுவந்து, தாமே முன் வந்து அளிக்க வேண்டும். இத்தகைய நற்குணம் படைத்தவர்களை, நான் என் அனுபவத்தில் (நாமக்கல்லில்) பார்த்திருக்கிறேன். இந்த நல்ல பழக்கம், மக்களிடையே பரவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**பழம் பெருமையோடு புதிய சாதனை**

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வரும் அறிஞர்கள் பலருடன், பேசும் வாய்ப்பு ஏற்படும் போதெல்

லாம், தமிழ் நாட்டின் பண்பாட்டுச் சிறப்பை விளக்க நான் மறப்பதில்லை. அண்மையில் சோவியத் நாட்டு அன்பர்களுடனும், பிரஞ்சு நாட்டு நண்பர்களுடனும் நான் அளவளாவியபோது, நமது பழம்பெரும் வரலாற்றை எடுத்துரைத்தேன். உத்திரமேரூர் கல்வெட்டுக்களிலும், தமிழ் இலக்கியச் சான்றுகளிலும் பொதிந்துள்ள செய்திகளை விளக்கியபோது, அவர்கள் பெரிதும் வியந்து மகிழ்ந்தனர். ஆயினும், நாம், பழம் பெருமை பேசுவதோடு நின்றுவிடாமல், புதிய சாதனைகளை உருவாக்க வேண்டும். இதற்கு வழிகாட்டுவதே, குறள் நெறி.

குறள் நெறி, அனைவரும் போற்றற்குரியது. அந்த நெறி, இன்பம் தத்தித் தவழும் சிறந்த உலகைப் படைக்கவல்லது என்ற உறுதி எனக்குண்டு. எனவே, நான் அதை உளமாரப் பின்பற்றுகிறேன். ஊராட்சி, நகராட்சி நிறுவனங்கள், கிராம வானொலி மன்றங்கள், மற்ற பல்வேறு பொதுப்பணி நிலையங்கள் ஆகிய அனைத்துக்கும், குறள் நெறி, சிறந்த தூண்டுகோலாகவும், வலிவூட்டும் ஊன்றுகோலாகவும், திகழ்வது திண்ணம்.

**'எல்லார்க்கும் எல்லாம்'**

குறள் வழி நின்று, தமிழகத்தைக் காக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பேரறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்களின் திறமையான நிர்வாகத்தின் துணை கொண்டு, நாட்டில், சமுதாயத்தில் காணப்படும் இல்லாமை, கல்லாமை, போன்றவைகளைப் போக்கி 'எல்லார்க்கும் எல்லாம்' என்கின்ற நிலைபெற்ற, இன்பம் தத்தித் தவழும் புதியதோர் சமுதாயம் காணப் புறப்படுவோம், வாரீர்!

வாழ்க வள்ளுவம்!

வளர்க தமிழ்க் குடி!

[1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி அன்று, வானொலியில் கிராம நிகழ்ச்சியிலே (சென்னை, திருச்சி, கோவை, திருநெல்வேலி நிலையங்களிலிருந்து) ஒலிபரப்பான சிறப்புரையின் சுருக்கம்.]

## கும்மிடிபூண்டியில் ஊராட்சிக் கருத்தரங்கு

——: x :——

### கிராமத் தலைவர்கள் கருத்தறிய முதல் முயற்சி

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், கிராமப்பகுதிகளில் உள்ள மக்களின் குறைபாடுகளை அகற்றுவதற்கும், தற்போது உள்ளாட்சி நிர்வாக நிறுவனங்கள் ஏற்க வேண்டிய புதிய பொறுப்பை விளக்க, 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதி செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடி பூண்டியில் ஊராட்சிக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

அதில் சிறப்புரையாற்றிய உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு முத்துசாமி அவர்கள், பொது நலனுக்காக மக்களே முன் வந்து தாமாகவே வரியைச் செலுத்துமாறு கேட்டுக்கொண்டதோடு, ஊராட்சி ஒன்றியங்களில் சீரான பயனுள்ள நிர்வாகம் நடைபெற அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார்.

கும்மிடிபூண்டி தொகுதியைச் சேர்ந்த 109 ஊராட்சிகளை ஒருங்கிணைத்து இக்கருத்தரங்கை திரு கே. வேழவேந்தன், எம்.எல்.ஏ., தலைமை வகித்து நடத்தினார். அவர் இந்த தொகுதியைச் சேர்ந்த பல்வேறு ஊராட்சிகளில் பிரச்சனைகளும் தேவைகளும் கருத்தரங்கில் விரிவாக ஆராயபட்டதன் சுருக்கத்தை அமைச்சரிடம் அளித்தார். அதில் பூவலை, பாகல்மேடு, பாளவாக்கம், எல்லாபுரம், புதுவாயல், தாராட்சி, செம்பேடு, ஏடூர், கும்முடி பூண்டி முதலியவற்றின் தலைவர்கள், பஞ்சாயத்து வரிவசூல், பள்ளிக் கூட கட்டடத்தைப் பழுது பார்த்தல், மதிய உணவுத் திட்டம், வானொலி பராமரிப்பு, ஆழமான குழாய்க் கிணறு அமைத்தல், ரசாயன உர விநியோகம், நீர்ப்பாசன வசதி, கடன் வழங்கல் முதலியவை பற்றி கூறிய ஆலோசனைகள் விளக்கப்பட்டிருந்தன.

கருத்தரங்கில் பங்கு கொண்ட செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.லட்சுமிகாந்தன் பாரதி ஐ.ஏ.எஸ்., ஊராட்சிகளின் வருவாயைப் பெருக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் ஊராட்சி நிதியைச் செலவழிப்பதில் தக்க கவனமும் பொது நலனில் முக்கிய நோக்கமும் கொண்டு பணியாற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

(படங்கள்—எதிர்ப் பக்கம்)

## காவல் துறைக்கான தமிழ் ஆக்கங்கள்

காவல் துறை சம்பந்தமான ஆங்கில வாசகங்களுக்குக் கீழ்க் கண்ட தமிழாக்கங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

| | |
|---|---|
| Police (போலீஸ்) | .. காவல். |
| Police constable (போலீஸ் கான்ஸ்டபிள்) | .. காவலர். |
| Police Line (போலீஸ் லைன்) | .. காவலர் இல்லம். |
| Police Station (போலீஸ் ஸ்டேஷன்) | .. காவல் நிலையம். |


காவல் நிலையங்கள், காவலர் இல்லங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றும்படி ஆணையிட்டுள்ள அரசு, அப்பலகைகளில் தமிழ்ப் பெயர்களுக்குக் கீழ் ஆங்கிலப் பெயர்களும் இருக்கலாம் என்று கூறியிருக்கிறது.


* * *

## 'நெறியாளர்' என்பதற்குப் பதிலாக 'இயக்குநர்'

துறைத் தலைவர்களின் பதவிப் பெயர்களை 'நெறியாளர்' (Director) என்று தமிழில் குறிப்பிடுவதற்குப் பதிலாக, இனி 'இயக்குநர்' என்ற சொல்லையே கடிதப் போக்குவரத்து முதலிய வற்றிலும், பெயர்ப் பலகைகளிலும் பயன்படுத்துமாறு, தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

# ஊராட்சிக் கருத்தரங்கு – கும்மிடிபூண்டி









உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும். முக்கியமாக கிராமப் பகுதிகளில் மக்களது குறைபாடுகளை அகற்றுவதற்கும், ஊராட்சி நிறுவனங்கள் ஏற்கவேண்டிய புதிய பொறுப்பை விளக்க, ஊராட்சிக் கருத்தரங்கு ஒன்று செங்கர்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கும்மிடிபூண்டியில் 20–7–1967 அன்று நடைபெற்றது.

**படம்—1.** கருத்தரங்கில், மாண்பு மிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி சிறப்புரை யாற்றுகிறார்.


**படம்—2.** ஊராட்சித் துறைத் தலைவர் ஒருவர், தம் கருத்துக்களை வழங்குகிறார்.


**படம்—3.** கருத்தரங்கை யொட்டி நடைபெற்ற கண்காட்சியில் மாண்பு மிகு உள்ளாட்சி அமைச்சர் அருகில் இருப்பவர், கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த திரு வேழவேந்தன், எம்.எல்.ஏ.














## தூத்துக்குடி ஆழ்கடல்துறைமுகம் ~ சேலம் உருக்காலை

## “வெண்முத்தும் ... கரும் பொன்னும்”

– விளக்கம் : சிறப்புக் கட்டுரையில் காண்க,



**மேல் வரிசை:**

**படம் 1.** மத்திய உணவு அமைச்சர் மாண்புமிகு திரு ஜகஜீவன்ராம் 28–6–1967-ல புதுடில்லியிலிருந்து பெங்களூர் செல்லும் வழியில் சென்னை விமான நிலையம் வந்திறங்கியபோது, அவரை உணவு அமைச்சர் மாண்புமிகு திரு மதியழகன், விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு கோவிந்தசாமி ஆகியோர் சந்தித்தனர்.

**படம் 2.** மாண்புமிகு துணைப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் சென்னை வந்தபோது (29–7–1967) விமான நிலையத்தில் அவரை கவர்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் முதலியோர் வரவேற்றனர்.

**படம் 3.** தமிழக மேலவை எதிர்கட்சித் தலைவர் திரு ஆர். வெங்கடராமன், திட்டக் குழு உறுப்பினராக நியமனமானதையொட்டி 19–7–1967 அன்று சென்னை கோட்டையில் பாராட்டுவிழா நடைபெற்றது. முதலமைச்சர் மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை, திரு வெங்கடராமனுக்கு மாலை அணிவிக்கிறார்.

**கீழ் வரிசை :**

**(இடதுபுறம்)** மாண்புமிகு திரு பி. எஸ். மூர்த்தி, மத்திய அரசின் சுகாதார, குடும்பக் கட்டுப்பாடு துணை அமைச்சர் 29–7–1967ல் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்களைச் சந்தித்து, நகராட்சி ஊழியர்களின பணித்துறை நிலைகள் குறித்து விவாதித்தார்.

**(வலதுபுறம்)** துணைப் பிரதமருக்கு முதலமைச்சர் வழங்கிய தேநீர் விருந்தில் (30–7–1967) இருவரும் அளவளாவுகின்றனர்.







திருச்சியில் நடைபெற்ற தமிழக மாவட்ட ஆட்சியாளர்—காவல் துறை அதிகாரிகள் மாநாடு





## மாவட்ட ஆட்சித் தலைவர்கள்—
## காவல் துறை அதிகாரிகள் மாநாடு

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்—காவல்துறை அதிகாரிகள். மாநாடு, திருச்சியில் ஆகஸ்ட் 7—10 தேதிகளில் நடைபெற்றது, இதில், மாண்புமிகு அமைச்சர்களும், அரசாங்கச் செயலாளர்களும், பல்வேறு துறைத் தலைவர்களும் கலந்து கொண்டனர். கவர்னர் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார். நான்கு நாள் நிகழ்ச்சிகளின் முடிவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்தினார். மாநாட்டின் ஆரம்பத்தில், அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. ராமகிருஷ்ணன், அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாநாட்டிற்கான ஏற்பாடுகளை, தலைமைச் செயலாளரின் சார்பில், பொதுத்துறைத் துணைச் செயலாளர் திரு டி. வி. வாசுதேவன் செய்திருந்தார்.

### கவர்னர் துவக்கவுரை

மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசிய கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங், மாநிலத்தில் உணவு உற்பத்தி பெருக வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் வலியுறுத்தினார். சாகுபடிக்குத் தகுதியான தரிசு நிலங்களில் வேளாண்மை நடைபெறச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட மற்றவர்களுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.




கிராம மக்களின் நலன்களைப் பெருக்கும் நோக்கத்தோடு, மாவட்ட அளவில் சில மாற்றங்களைச் செய்ய சிந்திக்கப்பட்டு வருவதை, கவர்னர் வரவேற்றார். கிராம வளர்ச்சிப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டால், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மேலும் அதிக அக்கறையோடு பணியாற்றினால் நலமாக இருக்கும் என அவர் கருத்து தெரிவித்தார். வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கிராம நல வளர்ச்சி அலுவலர் ஆகியோரின் பணிகள் அதிகபட்ச பலன் அளிக்கத்தக்கதாய் அமைய வழிவகைகளை ஆராய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

### ரசாயன உரங்கள் உரிய காலத்தில் கிடைக்க....

விவசாயிகளுக்கு, ரசாயன உரங்கள் 'காலத்தில்' கிடைக்கும்படிச் செய்வதில், வட்டார வளர்ச்சி அதிகாரியைப் பொறுப்புள்ளவராக்க தக்கதொரு நிர்வாக ஏற்பாட்டை வகுக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் கவர்னர் யோசனை கூறினார்.

விலைவாசி பற்றி குறிப்பிட்ட சர்தார் உஜ்ஜல் சிங், "கரும்பு, பருத்தி ஆகியவற்றின் விலைகள் உயர்ந்தால் நெல் சாகுபடி செய்பவர்களும் அதிக விலை கேட்பார்கள். எனவே, நெல் உற்பத்தியாளர்களுக்கு தக்க ஊக்கம் தருவது அவசியம்" என்றார்.

காவல் துறை பற்றி குறிப்பிடுகையில் "1966-ல் குற்றங்களின் எண்ணிக்கை, அதற்கு முந்திய ஆண்டைவிட, ஓரளவு அதிகமாகி இருக்கிறது. தக்க கண்காணிப்பு, புலன் விசாரணை மூலம் குற்றங்களின் அளவைக் குறைக்கலாம்" என்று கவர்னர் அறிவுரை வழங்கினார்.

### நான்கு நாள் நிகழ்ச்சிகள்

மாநாட்டின் நான்கு நாள் நிகழ்ச்சிகளில், பல்வேறு பிரச்னைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. அதிகாரிகள் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர். முதல் நாள், கவர்னரின் துவக்க உரைக்குப் பிறகு, மதுவிலக்கு அமுல் சம்பந்தமான நடைமுறை விவரங்கள் பற்றி விவாதம் நடந்தது.

### லஞ்ச—ஊழல் ஒழிப்பு

மறு நாள், லஞ்ச—ஊழல் ஒழிப்பு பற்றி பொது விவாதம் நடைபெற்றது. தமிழ் நாட்டில் உயர் அதிகாரிகள் மட்டத்தில் மிகுந்த நேர்மை, நாணயம் இருந்து வருவதாகவும், இதனால் இங்கு நிர்வாகத் திறமை சிறந்து விளங்குவதாகவும், லஞ்ச—ஊழல் ஒழிப்புத்துறை இயக்குநர் திரு மகாதேவன் தெரிவித்தார். கீழ் மட்டத்தில் ஓரளவு லஞ்ச ஊழல் தீங்கு இருப்பதாகவும், அதுவும் படிப்படியாக ஒடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார். லஞ்ச—ஊழல் ஒழிப்புத் துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அலுவலாற்ற வேண்டியதன் அவசியம் பொதுவாக வலியுறுத்தப்பட்டது.

### நெல் கொள்முதல்—விநியோகம்

அடுத்து நெல் கொள்முதல், விநியோகம் பற்றி விவாதிக்கப்பட்டது. கொள்முதலில் ஆரம்பித்து சில்லறை விற்பனை வரையுள்ள பல்வேறு கட்டங்களில் அனுமதிக்கப்பட வேண்டிய லாப விகிதம் பற்றியும், மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நெல் நடமாட்டம் பற்றியும், சர்க்கரை விநியோகம் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

- மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு, இதுவரை உதகையிலோ அல்லது சென்னையிலோ நடைபெறுவது வழக்கமாக இருந்தது. இதற்கு மாறாக—நல்லதொரு திருப்பமாக—இம்முறை, மாநாடு ஒருமாவட்டத் தலைநகரிலே—திருச்சியிலே—நடைபெற்றது.
- திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டம் நடைபெறும் மண்டபம். அதன் நடுவே, தமிழ் மறை தந்த திருவள்ளுவரின் திருவுருவப் படம். அதன் ஒருபுறம், அண்ணல் காந்தியடிகளின் படம். இன்னொரு புறம், புத்தரின் உருவம் பதித்தத் திரைச்சீலை. ஆங்காங்கு, பொய்யாமொழியின் அருள் வாக்குகள் பொறிக்கப் பட்ட அட்டைகள்.
- இவ்வாறு அணி செய்யப்பட்ட மணி மண்டபம் தமிழ் மணத்தையும், அறிவுப் பொலிவையும், அன்புத் தொண்டையும் கலைச் சுவையோடு நினைவூட்டி நின்றது—உள்ளே நுழைபவர்களின் உள்ளங்களிலே அமைதியையும், அருள் சார்ந்த நெறியையும், செய்யப் புகும் பணியில் ஓர் ஆர்வத்தையும் புகுத்தியது.
- தமிழகத்திலுள்ள நான்கு கோடி மக்களின் எதிர்கால நல்வாழ்வை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மாண்புமிகு அமைச்சர்களும், அரசாங்கச் செயலாளர்களும், பல்வேறு துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும், காவல்துறை அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசிக்க, இம் மாநாடு துணை புரிந்தது.
- மாநாடு, மாவட்டத் தலைநகர் ஒன்றில் நடைபெறுவதால், தமிழக ஆட்சி முறையிலே,புதிய பயனுள்ளதொரு பாதையைத் தோற்றுவிக்கிறது. மாநாடு நடைபெறும் அந்த மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளையும், அவை சமாளிக்கப் படும் விதத்தையும் நேரில் காணவும், விவாதித்துப் பயன்பெறவும் வாய்ப்பளிக்கிறது.

### ஊராட்சி நிர்வாக அமைப்பில் மாறுதல்

இப்போதைய ஊராட்சி நிர்வாகம் பற்றிய ஆய்வும், இனி இந்த நிர்வாக அமைப்பு முறையைத் திருத்தியமைப்பது பற்றிய விவாதமும், மூன்றும் நாள் அன்று நடைபெற்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சம்பந்தப் பட்ட மற்ற அதிகாரிகளும் பல்வேறு கருத்துக்களை வழங்கினர். அரசாங்கம், இவ் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருமுன், முதலமைச்சரின் சிறப்பு ஆலோசகர் தந்துள்ள அறிக்கையோடு சேர்த்து மேற்படி கருத்துக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### வேளாண்மை—உணவு உற்பத்தி

அடுத்து, வேளாண்மை உணவு உற்பத்தி பற்றிய பிரச்சினைகள் விவாதத்திற்கு வந்தன. ரசாயன உரங்கள் விநியோகம் சம்பந்தமான தங்கள் அனுபவங்களை வேளாண்மைத் துறை இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் எடுத்துரைத்தனர். ரசாயன உரங்களின் சில்லறை விற்பனைக்கு, துவக்கநிலை கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்களைப் பயன்படுத்தலாமா என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### கிராம அதிகாரிகள்—ஜமாபந்தி

இறுதியாக நான்காவது நாளில், பொது நிர்வாகம், கல்வி, சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு, ஆட்சி மொழி முதலியவை பற்றி விவாதிக்கப்பட்டது. பொது நிர்வாகம் குறித்த விவாதத்தின் போது, இப்போதைய கிராம அதிகாரிகள் முறையைத் திருத்தியமைப்பது பற்றியும், ஜமாபந்தி முறையை நீடிக்கும் பிரச்சினை பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

கல்வி பற்றிய விவாதத்தின் போது, பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்ட உள்ளூர் வசதி ஆதாரங்களைத் திரட்டுவது குறித்தும், பள்ளிக் கட்டிடங்களுக்கான மானியங்களை உயர்த்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

குடும்பக் கட்டுப்பாடு திட்டப் பணிகளை இவ்வாண்டு தீவிரப்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மாவட்டங்களில் இதைச் செய்வதற்கான தங்கள் யோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

### மாவட்டங்களில் ஆட்சி மொழி

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதில் உற்சாகம் காட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதில் தங்களுக்குச் சங்கடம் எதும் இருக்கவில்லை என்று தெரிவித்தனர்.

### சிறு சேமிப்பு

சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு, மாவட்டங்களுக்கு அதிக இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சிறு சேமிப்பு நிறுவனத் துணைத் தலைவர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுடன் கலந்தாலோசித்து, ஒருங்கிணைப்பாகச் செயல்பட்டு, சிறு சேமிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்கும்படியும் நிதித் துறை செயலாளர் கேட்டுக் கொண்டார்.

### முதலமைச்சரின் உரை

விவாதங்கள் முடிவுற்றதும், மாண்பு மிகு முதலமைச்சர் உரை நிகழ்த்தினர். அவர் பேச்சின் சுருக்கம் வருமாறு :

"நிர்வாகம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி இங்கு வழங்கப்பட்ட கருத்துக்களும் யோசனைகளும் அரசுக்கு மிக்கப் பயனளிப்பவையாகும். முந்திய மாநாடு களில் உடனடி முடிவுகள் எதுவும் எடுக்கப்பட்டதில்லை என இங்கு ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது. இப்போது கூட, நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். அதிகாரிகளின் பல்வேறு கருத்துக்கள், யோசனைகளைக் கேட்டறிவதற்கான மாநாடுதான் இது. இங்கு நடைபெறும் விவாதங்களைக் கவனத்தில் இருத்தி, பின்னர் அரசு முடிவுகள் எடுக்கத் துணை புரியத்தக்க வகையில், முதிர்ந்த அனுபவம் பெற்ற அதிகாரிகள் தங்கள் அனுபவ வாயிலாக அறிந்த தகவல்களையும் விளக்கங்களை யும் தருவதே இயல்பு.

### நாம் சிலர்—நமது பொறுப்பு பெரிது

நாம்—அமைச்சர்களும், அதிகாரிகளும்—எண்ணிக்கை யில் ஒரு சிலர். நம்மிடம், நான்கு கோடி மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. நாம் ஆற்றவேண்டிய பொறுப்பு எத்துணை பெரிது என்பதை இது காட்டுகிறது. எனவே, நாம், நமது பொறுப்பினை யுணர்ந்து அரும்பாடுபடவும், மாநிலத் தின் அனைத்து மக்களது நலனை நமது இலட்சியமாகக் கொண்டு, அதற்கேற்ப முடிவுகள் எடுத்திடவும் வேண்டும்.

### வெற்றிக்குப் பாராட்டு

"மாவட்ட நிர்வாகத்தில் தமிழை ஆட்சிமொழியாகச் செயல்படுத்துவதில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வெளிப் படுத்திய உற்சாகமும், இதில் தங்களுக்குச் சங்கடம் எதுவும் இல்லை என்று உறுதியளித்ததும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அமைச்சர்களாகிய எங்களைவிட, அவர்கள் இதில் அதிக ஆர்வம் கொண்டிருப்பது எனக்கு நல்ல நம்பிக்கையைத் தருகிறது. எதிர்பார்க்கப்பட்ட காலத்தைவிட விரைவாகவே, மாவட்டங்களில் தமிழ் ஆட்சிமொழியாக ஆகிவிடும் என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது.

### கருத்து ஒற்றுமை

குறிப்பாக, வேளாண்மை, உணவு உற்பத்தித் துறைகள் சம்பந்தமாகவும், பொதுவாக வேறு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல், பெரும் ஒத்த தன்மையனவாய் இருந்ததைக் கண்ட எனக்கு, மன நிறைவு கலந்த வியப்பு ஏற்பட்டது. நமது மாநிலத்தில் நல்ல முன்னேற்றம் துரிதமாக ஏற்படும் என்ற நல்ல நம்பிக்கையைத் தரும் நல்ல அறிகுறி அது."

### நன்றியுரை

நன்றியுரை ஆற்றிய வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பெல்லியப்பா, மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய முதலமைச்சருக்கும், மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், மாநாட்டு நிகழ்ச்சி நிரலைத் தக்க முறையில் வகுத்துத் தந்த தலைமைச் செயலாளருக்கும், திருச்சியில் மாநாட்டு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்த மாவட்ட வருவாய் அதிகாரி திரு செல்வராஜ், அவரது அலுவலர்கள் ஆகியோருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சார்பில் நன்றி தெரிவித்தார்.

### சுற்றுலா

மாநாடு முடிவடைந்த பின், அதிகாரிகள் பலரும் திருச்சியை அடுத்துள்ள கல்லணை, திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் மின்சார கொதிகலன் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை முதலியவற்றைப் பார்வையிட்டனர். (படங்கள்—24-ம் பக்கம்)

---

# பதின்மூன்று நாடுகளைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் தமிழகம் வருகை

## சமுதாய நலத் திட்டம், குழந்தைகள் நல இணைப்புத் திட்டத்திற்குப் புகழ் மாலை

செங்கல்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டாரத் திற்கு வருகை தந்த பல நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கொண்ட குழுவினர் அங்கு நடைபெறும் கிராம வளர்ச் சித் திட்டங்களை குறிப்பாக, குழந்தைகள் நல இணைப்புத் திட்டத்தை (Integrated Child Welfare Scheme..) 2-6-1967-ல் நேரில் கண்டு ஆராய்ந்து பெரிதும் பாராட்டினர்.

தாய்லாந்து நாட்டிலே, பாங்காக் நகரில் பணியாற்றி வரும்–பொருளாதார வளர்ச்சி, திட்டமிடுதல் பற்றிய ஆசிய கழகத்திலுள்ள சுமார் 35 ஆராய்ச்சியாளர்கள் (Fellows of the Asian Institute of Economic Development and Planning, Bangkok Thailand) இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ந் தேதி தமிழக முத லமைச்சரையும், தலைமைச் செயலாளர் உள்பட அரசாங்கச் செயலாளர்களையும் கண்டு உரையாடினர்.

பூவிருந்தவல்லி அலுவலகத்தில் நடந்த வரவேற்பு ஒன்றில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு மதன்ராஜ் அவர்கள் கிராம மக்களின் தேவைகள், உள்ளக்கிடக்கை கள் ஆகியவற்றிற்கு முதலிடம் தந்து, திட்டங்கள் உரு வாக்கப்படுவதை விரிவாக எடுத்துரைத்தார்.

ஆராய்ச்சியாளர்கள் குழுவில் ஓர் உறுப்பினரும், தமிழ் நாட்டைச் சேர்ந்தவருமான திரு K. P. கீதா கிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். கிராமங்களுக்கு ஏற்றவாறு திட்டங்களைத் தீட்டுவதில் உள்ள அடிப்படை குறிக்கோளை விளக்கினர்.

குழந்தைகள் நல இணைப்புத் திட்டத்தில் காட்டி வரும் ஆர்வத்தைப் பாராட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வாயிலாக, குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ரூ. 100 நன்கொடை அளித்தனர். [படம் : 3-வது அட்டை]

## சிற்றூர்களில் செம்மையான காரியங்கள்

சிரணியினர், சிற்றூர்களில் தான் பல செம்மையான காரியங்களைச் செய்வார்கள் என்ற— கிராம மக்களுக்கு மகிழ்வூட்டும்— செய்தியினை, மாண்புமிகு முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

சிரணி துவக்க விழாவில் எல்லா அமைச்சர்களும் கலந்து கொள்ள இயலாவிட்டாலும், மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி, மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி ஆகிய இருவர் கலந்து கொண்டதன் பொருத்தத்தைப் பற்றி குறிப்பிட்ட முதலமைச்சர், "சிரணியினர், பல சிற்றூர்களில் தான் பலப்பல செம்மையான காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்கு எடுத்துக் காட்டாக இங்கு உள்ளாட்சி அமைச்சர் வந்திருக்கிறார். இன்னொருவர் பொதுப் பணி அமைச்சர். அவர் எப்போதும் அதிர்ஷ்டக்காரர். ஏற்கனவே 'பொதுப் பணி' யில் (பொது வாழ்வில்) இருந்து வந்த அவர், இன்றும் பொதுப் பணி அமைச்சராக இருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவின் ஆரம்பத்தில், திரு நீலநாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு சுப்பு-ஆறுமுகம் எழுதிய சிரணிப் பாடலை திரு சதாசிவம் உணர்ச்சியோடு பாடினார். மாண்பு மிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி, சிரணியின் பத்து கொள்கைகளை எடுத்துரைத்து, பின்னர் அவர் சிரணி உறுதிமொழியைப் படிக்க, சிரணித் தொண்டர்கள் உறுதி மொழி ஏற்றனர்.

## சிரணி துவக்க விழா

(அட்டைப்பட விளக்கம்)

# அரசுக்கு மக்கள் துணை நிற்பது அவசியம்

சென்னையில் சிரணியைத் துவக்கிவைத்து, மாண்புமிகு முதலமைச்சர் திரு அண்ணாதுரை நிகழ்த்திய உரையின் சுருக்கம்:

சிரணி அமைப்பு பற்றி சட்ட மன்றத்தில் அறிவித்த போது, இது கட்சி வளர்ச்சிக்காக அமைக்கப்படுகிறது எனச் சிலர் தவறாகப் புரிந்துகொண்டு வாதம் எழுப்பினர். அது தவறான கண்ணோட்டம் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அடிப்படை நோக்கம்

அரசு மேற்கொள்ளும் தூய, நல்ல திட்டங்களுக்குத் துணை நிற்பது, உதவுவது, ஒத்துழைப்பது நாட்டுக் குடிமக்கள் அனைவரது பொறுப்பு. ஆனால் எல்லா மக்களும் இதில் நேரடியாக ஈடுபட இயலாது. தொழில் தொல்லைகள், குடும்ப பாரம், இன்னும் பல ஆசாபாசங்கள் அதற்குக் குறுக்கே நிற்கும். எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் மக்கள் அனைவரும் நேரடியாக இக்கடமையைச் செய்வது கடினம். எனவே அதற்கென்று சிலராவது அவசியம். பொதுப் பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க இதயம் படைத்தவர்கள், தங்களது குடும்பக் காரியங்களை கவனித்தது போக மீதமுள்ள நேரத்தை, வெறும் பொழுது போக்குக் களியாட்டங்களில் வீணடிக்காமல், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும். பணம் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கவர் தம் ஆற்றலையும் அளித்து நாட்டுக்கு உதவுவது போல, மற்றவர்கள் தங்கள் நேரத்தில், உழைப்பில் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும் என்பதே சிரணியின் அடிப்படை நோக்கம்.

### நல்ல அறிகுறி

சிரணி பற்றி அறிவித்ததும், அதை யாரும் அலட்சியப் படுத்தவோ, அதில் அக்கறை காட்டாமல் இருக்கவோ முடியவில்லை. அதுபற்றி கவனித்து உடனே கருத்தும் தெரிவித்துள்ளனர். கருத்து தவறாக இருப்பினும், எல்லோர் கவனத்தை யும் ஈர்த்துள்ளது என்பதை அது காட்டுகிறது. "ஏதோ ஒரு சிரணியாம், அது எந்த அளவுக்கு வளருமோ, எப்படி எப்படிப் பயன்படுத்தப் படுமோ!" என்று பேசுகின்றனர். ஆக இது வளரத் தகுதியுடையது, வளரத் தான் போகிறது என்பதற்கு இதுவே நல்ல அறிகுறி. வளருவது நல்லதற்கே அன்றி, கெடுதலுக்கு அல்ல.

### வன்முறை அல்ல : தூய தொண்டு

சீனத்துச் செங்காவல் படையுடன் சீரணியை ஒப்பிட்டுப் பேசுவது தவறு. வன்முறை, குழப்பம் ஏற்படுத்துவது சீரணியின் எண்ணமல்ல. வன்முறை, ஒழுங்குபடுத்தப்பட்ட படைகளால் எப்போதும் ஏற்படுவது இல்லை. சீரணியின் நோக்கம் வன்முறை அல்ல ; தூய தொண்டாற்றவும், தோழமை வளர்க்கவுமே அது அமைக்கப்பட்டுள்ளது. சாதாரண, சராசரி மக்களானாலும் தங்களது ஆற்றலை, தூய தொண்டினை—நாட்டுவளத்தைக் பழம்பெரும் நாடு, நம் நாடு ; என்றாலும் ஏழ்மை இருளில் ஆழ்ந்துள்ளது. நம் நாட்டில் இயற்கை வளம் நிரம்ப இருக்கிறது. ஆனால் அந்த வளத்திற்கு உரிய செல்வ வளத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இங்கு இல்லை. நாடு வளம் பெற மக்கள் வாழ்வு செம்மையுற, சீர்பட தமிழக அரசு மட்டும் முயன்றால் போதாது.

### அண்ணாதுரை அல்ல: அரசுதான் முக்கியம்

இங்கு பாடப்பட்ட சீரணிப்பண்ணில், முதலமைச்சர் அண்ணாதுரை

## திருச்சியில் துவக்க விழா

முதலில் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட சீரணியின் அடுத்த கட்டமாக, திருச்சியில் செப்டம்பர் 18-ம் நாளன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீரணியைத் துவக்கிவைக்கிறார்.

திருச்சி துவக்க விழாவுக்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

# அதுவே சீரணி!

கூட்ட, மக்களின் வாட்டத்தைப் போக்க அளித்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் சீரணியில் சேர்ந்தால் போதுமெனக் கணக்கிட்டிருந்தோம். மாவட்டங்களிலிருந்து கிடைக்கின்ற தகவல்களைப் பார்த்தால் பலதரப்பட்டவர்களும்—வாலிபர்கள், மாணவர்கள், தாய்மார்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், கட்சிகளையே சேராதவர்கள், பல்வேறு வகுப்பினர், வகுப்புக்களே வேண்டாம் என்ற முற்போக்கு எண்ணம் கொண்டோர், இப்படி பல திறத்தவரும்—சீரணியில் பெருமளவு சேர முன்வந்திருக்கின்றனர்.

### தாங்கும் இதயம்: இலட்சிய உறுதி

சீரணியின் பத்துக் கொள்கைகளில் எந்தக் கொள்கைக்கும் யாரும் மறுப்புத் தெரிவிக்கமாட்டார்கள். ஏனெனில் அத்தனையும் நல்ல கொள்கைகளே. அவற்றைச் செயல்படுத்தும்போதுதான் சிக்கலும் சங்கடமும், சில வேளைகளில் சஞ்சலங்கூட வரலாம். எனவே இந்தப் பணியில் ஈடுபடுவோருக்கு, தொல்லைகளைத் தாங்கும் இதயமும், எடுத்த இலட்சியத்துக்கு ஏற்பப் பாடுபடும் உறுதியும் வேண்டும்.

ஆணைக்குக் கட்டுப்படுவோம் என்று பாடப்பட்டது. அதில் அண்ணாதுரை என்ற சொல்லை அகற்றி விட்டு, வெறும் 'முதலமைச்சர்' என்று இருக்கும்படிச் செய்யலாம். யார் முதல்வரானாலும், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அதன் நல்ல திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உதவ வேண்டும். அரசினால் மட்டும் எதுவும் செய்து விட முடியாது.

சர்க்கார் பற்றற்ற, சர்க்கார் நேரடித்தலையீட்டில் வராத, ஊதியம், பணம் உத்தியோக உயர்வு கோராத ஒருவித படைபலம், ஒவ்வொரு நாட்டுக்கும் நிச்சயம் தேவை.

### சீரணி பெயர் ஏன்?

இத்தகைய படைக்கு என்ன பெயர் வைப்பது என்று பல இரவுகள் சிந்தித்தேன்; பல பகல்கள் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தேன். நாட்டைச் சீர்படுத்த, சிக்கல்கள் நீக்கிச் செப்பனிட, சமுதாயத்தை—மக்கள் வாழ்வைச் சீரமைக்க ஓர் அணி தேவை என்று உணர்ந்தபோது, அத்தகைய சீரிய செயல்களைச் செய்யும் அணிக்குச் 'சீரணி' என்ற பெயர் பொருத்தமாயிருக்கும் என எனக்குத் தோன்றிற்று; மற்றவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்தனர்.

### மஞ்சள்: தங்க மனம், பச்சை: வளம் பெருக்கும் பணி

இங்கு தொண்டர்கள் அணிந்திருக்கும் சீரணி சின்னத்தில் பச்சை நிறமும் பொன்னிறமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. பச்சை வண்ணம்

## சீரணி உறுதி மொழி

பைந்தமிழ் நாடு பல்வளம் பெறவும், சமூகம் நல் ஏற்றம் எய்தவும், எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி காணவும் நல்ல ஆக்கப் பணிகள் ஆற்ற, நம் தமிழகத்தில் நிறுவப்பெற்றுள்ள சீரணியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ......................................எனும் நான், அதன் நோக்கத்தில் நம்பிக்கையும், கொள்கையில் பற்றும், செயலில் ஈடுபாடும் கொண்டு, உள்ளத் தூய்மையோடு, காய்தல், உவத்தல் அகற்றி, கைமாறு கருதாது, கட்டுப்பாட்டோடும் கண்ணியத்தோடும் கடமையாற்றுவேன் என்று மன நிறைவோடு உறுதி கூறுகிறேன்.

பசுமையை—வளத்தைக் காட்டுகிறது. பொன்னிறம் எங்களுக்குத் தங்கமான இதயம் உண்டு என்பதைக்காட்டுகிறது. இத்தகைய சின்னத்தை தொண்டர்கள் தங்கள் மார்பில் குத்திக் கொள்வது மட்டுமல்ல, இதயத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.

## நகரில் இரு பணிகள்

நாட்டுக்காகச் செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரை குறிப்பாக துப்புரவு பணியிலும், முதியோருக்குக் கல்வி அறிவூட்டுவதிலும் சீரணித் தொண்டர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

## மகனை பெற்ற எந்த மாதாவும்

நகர வீதிகளில், ஏழைகள் வாழும் பகுதிகளில், வீடுகளைச் சுற்றிலும் அசுத்தம் அகற்ற—அசுத்த மாக்கும் பழக்கத்தைப் போக்க—துப்புரவுப் பணி அவசியம். கையிலே ஒரு கூட்டுக் கோலுடன், குப்பையை வாரிப்போட்டுக் கொள்ள ஓலைச்சாதனம் ஒன்றையும் கையில் ஏந்தி, சீரணித் தொண்டர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்ற காட்சியைக் காணுகின்ற மக்கள், நிச்சயம் தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள். மகனைப் பெற்ற எந்த மாதாவும் மறுநாள் தெருவிலே குப்பையை கொட்ட மாட்டார்கள்.

குப்பை என்று நான் சொல்லும்போது, குழந்தைகளைத் தெரு வோரத்தில் விட்டுக் கழிக்கச் செய்யும் மலஜலத்தையும் சேர்த்தே சொல்கிறேன். 'அதை நாங்கள் சுத்தம் செய்வதா?' என்று நினைக்கக்கூடாது. அதை எடுக்கக் கூசுவோர், எதிரி நாட்டார் வீசும் குண்டை அப்புறப்படுத்தும் வீரனாக முடியாது. அருவருக்கத் தக்கவற்றையும் சகிப்பதுதான், அந்த அளவுக்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வதுதான் சிறப்பு.

## முதியோர் கல்வி—புதிய முறை

அடுத்தது முதியோர் கல்வி. சென்னையில் எழுத்தறிவு பெற்றவர்கள் நிரம்ப இருந்தாலும், ஏடு படிக்க இயலாத—உலகை அறியாத பலர் உள்ளனர் அவர்களுக்கு 'அ, ஆ' 'படம், பட்டம்' சொல்லித்தர வேண்டாம். அப்படிச் சொல்லித் தருவதானால், அவர்களில் பலர் அதைக் கற்கு முன் காலமாகிவிடக்கூடும். எனவே மாநகராட்சியின் அனுமதி பெற்று, அதன் பள்ளிகள் சிலவற்றில், இரவு நேரங்களில் அப்பகுதி முதியோரைக் கூட்டி, செய்தித்தாள், நல்ல நூல்களைப் படித்துக்காட்டி விளக்கினால், அவற்றைப் புரிந்துக்கொண்டு விரைவில் உலக அறிவு பெறுவர். முதியோர் கல்வியில் இம்முறையைக் கையாள வேண்டும். எழுத்தின் மூலமாக அல்லாமல், எண்ணத்தின் மூலம் அறிவு புகட்ட வேண்டும்.

## மக்கள் பாராட்டு அதுவே பரிசு

சீரணித் தொண்டர்கள் மகத்தான பணிகள் புரிய வாய்ப்பிருக்கிறது. சென்னை நகரிலே ஓடுகின்ற கூவத்தைச் சுத்தப்படுத்தி, உல்லாச படகுகள் செல்லத்தக்கதாக ஆக்க வேண்டும் என்று அமைச்சர் கருணாநிதி திட்டமிட்டிருக்கிறார். அதற்கென ஆட்கள் நியமிக்கப்படுவார்கள் என்றாலும், சீரணியினர் விரும்பினால் 'நாங்கள் 500 பேர் இப்பணியில் ஈடுபட விரும்புகிறோம்' என அதிகாரிகளுக்குத் தெரிவித்து, ஒருநாளை ஏற்பாடு செய்து கொண்டு பணி புரியலாம். அப்படி, நல்ல கட்டுடல் படைத்தவர்கள் வசதியோடு இருப்பவர்கள், எந்த பலனும் கேட்காதவர்கள், கண்ணியமான வாழ்க்கை நடத்துபவர்கள் ஒரு 500 பேர், 600 பேர் கூட்டமாகச் சென்று பாடுபட்டால் அந்தக் காட்சியைக் காணுகின்ற மக்கள், 'இவர்களல்லவா சீரணித் தொண்டர்கள்!' என்று வியந்து பாராட்டுவர். அதுதான் உங்களுக்குப் பரிசு. அந்த ஒரு பரிசைத் தவிர என்னிடமிருந்தோ, நாட்டு அரசிடமிருந்தோ வேறு பரிசை எதிர் பார்க்கக் கூடாது.

சென்னைப்புற நகர்களில், சுற்றுப்புற கிராமங்களில் உள்ள ஏரி, குளங்களைச் சீரமைக்கவும், சீரணி மெத்த பயன்படும்

அரசாங்க நிதியைக் கொண்டு, அதிகாரிகளைக் கொண்டு, மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. தொண்டர்கள், மக்களது நிரந்தர ஒத்துழைப்பும் முக்கியம். தொண்டாற்றும் எண்ணம் வளர வேண்டும். வளரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

சீரணி மிகுந்த வெற்றியினைப் பெறும் என்ற எனது இந்த நம்பிக்கை வீண்போகாத அளவுக்குப் பணியாற்றுவார்கள் என்பதால், சீரணியை மெத்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் துவக்கிவைக்கிறேன்

## முதல் பணி

சீரணி துவக்க விழாவில் நன்றியுரை ஆற்றிய சீரணி தனி அதிகாரி திரு பரமசாமி, சீரணியினர் ஏற்றுச் செய்யவிருக்கும் முதல் பணி பற்றி அறிவித்தார்.

"சென்னை புறநகர்ப் பகுதியான ஊரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஆறு வகுப்புகளுக்குக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. அதற்கான வேலைத் திட்டத்தைச் சீரணியின் முதல் பணியாக ஏற்றுச் செய்யவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று திரு பரமசாமி கூறினார்.

## சீரணி - பத்து

1. ஊதியம் பெறு ஓய்வு நேரப் பணி ஆற்றல்.
2. தன்னலங் கருதாப் பொதுப் பணி பேணல்.
3. தன் மதிப்பையும் தன்னம்பிக்கையும் வளர்த்தல்.
4. உழவும் தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல்.
5. கல்வியறிவும், பொது அறிவும் வளர வகைசெய்தல்.
6. பொதுநலம் காண துப்புரவு பணி மேற்கொள்ளல்.
7. தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல்.
8. அன்பு வழியாக சமூகக் கேடு களைதல்.
9. திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல்.
10. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல்.

" இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே,
இயந்திரங்கள் வகுத்திடுவீரே "
—பாரதியார்.

# கரும் பொன்னும் வெண் முத்தும்

திரு ரா. நாகபூஷணம்

'வளமான வாழ்வை மக்களுக்கு அமைத்துத்தர ஒரு நாட்டுக்குத் தேவைப்படுவது பசும்பொன் அல்ல, கரும் பொன்னே' என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். இரும்பும், எஃகுமே செல்வ நிலையில் ஏற்றங்காண, நல்ல அடித்தளத்தை உருவாக்க முடியும் என்பதை உணராதார் இல்லை. எந்த ஒரு தொழிலும், இரும்பையும், எஃகையுமே கொண்டு அமைகின்றது. உலக நாடுகளின் வளர்ச்சியின் வரலாற்றைப் பெரும் போக்காகப் படித்தால் கூட, அவைகளின் கனிவளமே செல்வ நிலையில் மேம்பாடு அடையவும், மற்றைய நாடு களின் மீது ஆதிக்கம் செலுத்துமளவுக்கு வலுப் பெறவும் வழி வகுத்துள்ளன எனபதை அறியலாம்.

எஃகு ஆலைகள் அமைக்கப்படுவதற்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை வருமாறு:

1. இரும்புக் கனிகள்
2. மலிவான எரிபொருள்
3. மின்சாரம்
4. தண்ணீர்

கல்கத்தாவிலுள்ள புகழ் பெற்ற கனிவள ஆராய்ச்சி ஆலோசகர்களான தாஸ்தூர் கம்பெனியாரை 1963-ல் மத்திய அரசு அழைத்து, 5 லட்சம் டன் எஃகை, நவீன முறையில் உற்பத்தி செய்ய, ஓர் ஆலை அமைக்க அறிக்கையொன்று தயாரித்துத் தரக் கேட்டனர். ஏராள மான என்ஜினியர்களை அமர்த்தி 19 மாதங்கள் விரிவான தொரு ஆராய்ச்சி நடத்தியும், அயல் நாடுகளில் பரிசோதனைகள் நடத்தி, 'சேலம் எஃகு ஆலையை நல்லமுறையில் லாபகரமாக நடத்த வசதிகள் உள்ளன' என்று ஓர் அறிக்கையை தயாரித்துத் தந்தது.

இரும்புக் கனிபொருள் கிடைக்கும் பகுதிக்கு அருகா மையில் உள்ள கஞ்சமலையில் எஃகு ஆலையை நிறுவ லாம். இந்த இடம் சேலத்திலிருந்து 8 மைல் தொலைவில் உள்ளது. இந்த ஆலைக்குப் பயன்படக்கூடிய இரும்புக் கனிபொருள் சேலம்–நெய்வேலி பகுதியில் 37 கோடி டனுக்கு மேல் உள்ளது. மேலும் எஃகு உற்பத் திக்குத் தேவையான சுண்ணாம்பு கல்லும், 'மாக்ன ஸைட்' என்கிற உலோகமும், அருகிலேயே கிடைக் கின்றன.

கஞ்சமலையில் கிடைக்கும் 12 கோடி டன் கனிப் பொருளில், அசல் இரும்பு 36 சதவிகிதம் உள்ளது, சங்கரி, நாமக்கல், திருச்செங்கோடு, பகுதிகளில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல், இரும்பு, எஃகு உற்பத்திக்கு ஏற்றவை. மற்றொரு முக்கிய மூலப் பொருளான 'மாக்னஸைட்' சேலத்துக்கு அருகில் உள்ள சுரங்கங்களிலிருந்தே கிடைக் கிறது.

'கரும் பொன்னும் வெண்முத்தும்' என்ற இக்கட்டுரை, சேலம் உருக்காலைத் திட்டம் பற்றியும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் பற்றியும் பல புள்ளி விவரங்களையும் இதர தகவல்களையும் தொகுத்துத் தருகிறது. இதுபோல் விளக்க—விவரக் கட்டுரைகளை, அவ்வப்போது வழங்கி வர, புள்ளிவிவரப் பேழை, என்ற இந்தப் புதிய பகுதி ஆரம்பமாகிறது.

—ஆசிரியர்.

**சேலம் உருக்காலை, தூத்துக்குடி துறைமுகத் திட்டம் பற்றிய செய்திகள்.**

முக்கியமாக அந்த ஆலைக்கு வேண்டிய 97 மெகோ வாட் மின்சாரத்தை குண்டா-மேட்டூர்-நெய்வேலி- இணைப்பிலிருந்து பெறுவது எளிது. மேலும், எ∴கை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளும், சென்னை, கோவை, திருச்சி நகரங்களுடன் ஆலைப்பகுதிக்கு ஏற்கெனவே நல்ல நெடுஞ்சாலை வசதியும் உள்ளது.

சேலம் எ∴கு ஆலை நிறுவ 95 கோடி ரூபாய் ஆகும். இதில், அயல் நாட்டில் இயந்திரங்கள் வாங்க அந்நிய செலாவணி ரூ. 38 கோடிதான் தேவைப்படும்.

இந்த எ∴கு ஆலை அமைக்கப்படுவதால் 5,000 பேருக்கு வேலை கிடைக்கும். மேலும், இதன் மூலம் உற்பத்தி யாகும் எ∴. கினல் உருவாகப்போகும் தொழில்கள் எத்தனை எத்தனையோ!

ரூர்கேலாவில் ஒரு டன் எ∴கு உற்பத்தியில் ஆண்டொன் றுக்கு முதலீட்டுச் செலவு ரூ. 2,745 ஆகிறது. சேலத்தில் ரூ. 2.130 மட்டுமே ஆகும். தொடர்ச்சியான வார்ப்பு முறை யால் சேலம் எ∴கு ஆலையில் உருக்கு எ∴கிலிருந்து பத்து சதவிகிதம் அதிகமான பொருளைஉற்பத்தி செய்ய இயலும்.

பிலாய் ஆலைக்கு ஆயிரம் மைல் தொலைவிலிருந்தும், மற்றும் ரூர்கேலா, துர்காபூர், தொழிற்சாலைகளுக்கு 500 மைல் தொலைவிலிருந்தும் மூலப் பொருள்கள் வரவேண்டியுள்ளன. ஆனல் சேலம் எ∴கு ஆலைக்கு, எந்த மூலப் பொருளும் நூறு மைலுக்கு அப்பாலிருந்து வரவேண்டியதே இல்லை.

ஏற்கெனவே, நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேலம் எ∴கு ஆலையைஅமைக்கும் நோக்கம் இருந்ததால், மத்திய அரசின் வேண்டுகோளின்படி சேலம் மாவட் டத்தில் 24,000 எக்கர் நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமென தமிழக அரசு ஆணை விடுத்துள்ளது.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு"
—தமிழ் முதுமொழி

எட்டாண்டுகளுக்கு முன்பு, தூத்துக்குடிக்கு வந்திருந்த அன்றைய பிரதம மந்திரி திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள், "தூத்துக்குடி துறைமுகத்தை ஆழ்கடல் துறை முகமாக அமைத்தே தீரவேண்டும்; இதில் விவாதத் திற்கே இடமில்லை" என்று அறிவித்தார்.

மூவாயிரம் மைல் கடற்கரையைக் கொண்ட நம் நாட்டில் மேலைக் கரையிலுள்ள பம்பாய் துறைமுகத்தி லிருந்து புறப்பட்டால் கீழ்க்கரையில் உள்ள சென்னைக்கோ, கல்கத்தாவுக்கோ கடலோரமாக நேராக இன்று செல்ல இயலாது. கொச்சியிலிருந்து புறப்படும் கப்பல் அண்டை யில் உள்ள சென்னைக்கு வரவேண்டுமானலுங்கூட, இலங்கையை வலம் வந்து, கொழும்புத் துறைமுகத்தில் தண்ணீரும் எண்ணெயும் கேட்டுப் பெற்று, நான்கு நாள் கூடுதலாகப் பயணம் செய்தே வர இயலும்.

இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டதொரு குழு இதுபற்றி பரிசீலனை செய்து, பதினைன்கு கோடி ரூபாய் செலவில், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை அங்கீ கரித்தது. மூன்றாவது திட்டகாலத்தில் துவக்கி, நான் காவது திட்டகாலத்திற்குள் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றுவதென முடிவெடுக் கப்பட்டது. இப்பொழுது துறைமுகம் உள்ள பகுதியில், கற்பாறைப் படிவம் இருப்பதால், அருகாமையில் உள்ள முயல் தீவுப் பகுதியில், துறைமுகத்தை அமைப்ப தெனவும், பெட்ரோலியம், எண்ணெய் இறக்குமதிக்கான துறையோடு சேர்த்து ஆறு துறைகளை உடனே அமைப்ப தெனவும் திட்டமிட்டு வேலை துவங்கப்பட்டது. ஆழ்கடல் துறைமுகத் திட்டத்துக்கு இறுதியாக செலவு ரூ. 24 கோடி ஆகுமென திட்டமிடப்பட்டிருந்தது.

மூன்றாவது திட்டகாலத்தில் தூத்துக்குடி துறைமுக வேலைக்கு, ஐந்து கோடி ஒதுக்கப்பட்டு பல வேலைகள் நடந்தன. துறைமுக அமைப்பு வேலைக்கு மறைந்த பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் அடிக்கல் நாட்டினர்கள். இதைத் தொடர்ந்து குடியிருப்பு, சாலைகள், பாலங்கள் அமைக்கு வேலையும் முடிந்து விட்டதெனலாம். வசதிகளைக் கொண்டு பல தொழிற் சாலைகள் தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்படுவதை எதிர் பார்த்து 5,000 எக்கர் நிலத்தை மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாளொன்றுக்கு 40 லட்சம் காலன் குடிநீர் வசதிக்கும் வேலை துவங்கி நடக் கின்றது. மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்ய 100 மெகாவாட் அனல் மின்சார நிலையமொன்றை நிறுவவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்தோடு சேதுசமுத்திரம் திட்டத்தையும் அமலாக்க, அரசு முடிவு செய்தது. இத்திட்டத்தைப் புரிந்துகொள்ள நில அமைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. இலங் கையும், தமிழகமும் ஒரு காலத்தில் தொடர்ச்சியான நிலப்பரப்பாக இருந்திருக்கக்கூடும். ஆனல் நாளா வட்டத்தில், கடல் நிலப்பரப்பைக் கரைத்ததால், வால் போன்ற நிலப்பரப்பு மட்டும் மிஞ்சி, ஒரு இடத்தில் வெட்டுப்பட்டு ராமேசுவரம் தீவையும், மறு இடத்தில் இலங்கைத் தீவையும் உண்டாக்கியதென்று ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகிறார்கள்.

எனவே கொந்தளிப்பில்லாத கடற் பகுதியில் மன்னார் குடாவையும், பாக் குடாவையும் இணைக்க ஒரு கால்வா யொன்று, பனமா கால்வாயைப் போன்று, கப்பல்கள் செல்ல அமைப்பது சேதுசமுத்திர திட்டத்தின் நோக்க மாகும். திட்டமிட்டபடி ரூ. 30 கோடி செலவில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால். மேலை நாடுகளிலிருந்து கிழக்கே செல்லும் கப்பல்கள் சுற்றி வளைத்துக் கொழும் புக்குச் சென்று, நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்யாமல், ஏடனிலிருந்து அல்லது பம்பாயிலிருந்து நேராகச் சென்றுவிட முடியும். இதனல் இவை தூத்துக்குடி துறைமுகத்தில் தங்கி புறப்படக்கூடும். இதன் காரணமாகவும் தூத்துக்குடியின் முக்கியத்துவம் பெருகும். ஒரு நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குச் சொந்த கடற்கரையை வைத்துக்கொண்டு பிற நாட்டுத் துறைமுகத்திற்குச் சென்று வரும் அவல நிலை இல்லாமல் நேராக வர இயலும்.

தேசியக் கண்கொண்டு பார்த்தாலும், தூத்துக்குடித் துறைமுகம் மிக முக்கியமென்பது விளங்கும். கீழ்க் கரையில், தென்கோடியில் உள்ள பெரிய துறைமுகம் தூத்துக்குடியேயாகும். எனவே நாட்டைப் பாதுகாக்கும் பணியிலும் தூத்துக்குடி முக்கிய பங்கை ஏற்க முடியும்.

படங்கள் நடுப்பக்கங்களில்

# ஊராட்சித் தலைவருக்கு 'உஸ்பெக்' அழைப்பு

ரஷ்யாவிலுள்ள உஸ்பெக்கிலிருந்து மூன்று விவசாயிகள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். அம் மூவரும் இராஜாஸ்தான் கிராமத்தையடைந்தவுடனேயே, அங்குள்ளவர்களனைவரும், விருந்தினர்களை மகிழ்வுடன் சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தனர்.

"நாங்கள் பார்த்த பண்ணைகள், கிராமங்களெல்லாம் எங்களுக்கு மகிழ்ச்சியையே அளித்தன. ஆனால் அவற்றையெல்லாம் விட அக்கிராம மக்களும், அவர்களின் பஞ்சாயத்து தலைவருமே எங்களைப் பெரிதும் கவர்ந்தனர்" என்று கூறினார், உஸ்பெக் விவசாயக் குழுவின் தலைவர்.

அவர்கள் சென்ற கிராமத்தின் பெயர் 'கெர்லி கதாசி" என்பதாகும். அதன் பஞ்சாயத்து தலைவர், திரு புரன்சிங். உஸ்பெக் குழுவின் தலைவர் திரு நிஷான் அலி அவஜோவ் என்ற 'லெனின் கூட்டுப் பண்ணையின் தலைவர். இப்பண்ணை உஸ்பெக்கில் 'யெனியூல்' என்ற இடத்திலிருக்கிறது. 'யெனியூல் கால்நடை" பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த திரு குச்கார் கிதிரோவ் என்பவரும், திருமதி பிக்ஷி ஜான் நிஷான்பயேவா என்ற ஒரு கூட்டு பண்ணை விவசாயியும் குழுவைச் சார்ந்த மற்ற இருவர். டெல்லி பல்கலைக் கழகத்தில் உருதுமொழி பயின்ற செல்வி மல்லோடா மக்சூடோவா என்பவர், மொழி பெயர்ப்பாளராக இவர்களுடன் வந்திருந்தார்.

### பார்த்தார், அழைத்தார்

ஐந்து ஆண்டுகளுக்கு முன், அவர்கள் இங்கே வரவேண்டுமென்று, திரு புரன்சிங் எண்ணினார். அது தற்செயலாக இப்போது நிறைவேறி விட்டது. திரு புரன்சிங் ஒரு ராஜஸ்தானி விவசாயி, கெர்லி கதாசி கிராமப் பஞ்சாயத்தின் தலைவர் அவர். அவர் 1961--62-ம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற விவசாயப் பொருட்காட்சியைக் காண ராஜஸ்தானிலிருந்து சென்ற குழுவிற்கு திரு புரன்சிங் தலைமை தாங்கினார். பொருட்காட்சியிலுள்ள ரஷ்ய கூடாரத்தைப் பார்வையிட்டபொழுது, அக்கூடாரம், அவரை மிகவும் கவர்ந்தது. "சில சோவியத் விவசாயிகளை என் கிராமத்திற்கு அழைக்க வேண்டுமென்று அக்கணமே எண்ணினேன். அருகிலிருந்த சோவியத் அதிகாரியிடம் திரும்பி, அப்பொழுதே நான் அழைப்பு விடுத்தேன். பாருங்கள்...... அவர்களும் இதோ இங்கே இருக்கின்றனர்" என்று கூறினார் திரு புரன்சிங்.

புரன்சிங்கின் அழைப்பை ரஷ்யாவிற்கு அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பின் அரசின் சம்மதத்துடன், 'கெர்லி சுதாசி' கிராமத்தை நிர்வகித்து வரும், பரக்பூர் மாவட்டத்தின் பயானு பஞ்சாயத்து அவ்விழைப்பினை அவர்களுக்கு அனுப்பியது. சோவியத் அரசும் அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டு, உஸ்பெகிலிருந்து முன் கூறிய மூன்று கூட்டுப் பண்ணையாளர்களை அனுப்பி வைத்தது.

### விரைவிலே வந்தனர்

"கெர்லி கதாசி கிராமத்திற்கு நாங்கள் இரவில் வந்து சேர்ந்தோம். எனினும், அங்குள்ள பெண்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு, எங்களை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். ராஜஸ்தானி மக்கள் எங்களைப் பெரிதும் விரும்பி நன்கு வரவேற்றுக் கூட்டமாகச் சூழ்ந்து கொண்டனர். அந்தக் கிராமத்தையும், விவசாயிகளின் வீடுகளையும் நாங்கள் கண்டோம். அவையனைத்தையும் நாங்கள் விரும்பினோம்" என்று செல்வி மக்சூடோவா கூறினார்.

அவர்கள் ராஜஸ்தானில், சுமார் 20 பஞ்சாயத்துக் கூட்டங்களில் கலந்து கொண்டதாக, திரு கிதிரோவ் கூறினார். அவர்கள் சரித்திர முக்கியத்துவமுள்ள இடங்களையும், நினைவுச் சின்னங்களையும், புள்ளினங்களின் புகலிடங்களையும், கிராமப் பண்ணைகளையும் சுற்றிப் பார்த்தனர், 'பாசி' பஞ்சாயத்து சமிதியால் நடத்தப்படும் கால்நடை பராமரிப்பு நிலையத்திலுள்ள கால்நடைகள் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. பரக்பூருக்குச் செல்லும் வழியில், அவர்கள் தோசா என்ற பஞ்சாயத்துச் சமிதியையும் பார்வையிட்டனர். ஏனைய இடங்களிடையே ஜகினு பஞ்சாயத்திற்கும் சென்றனர். அங்குள்ள கரும்பு, கோதுமைப் பயிர்களை அவர்கள் விரும்பிப் பார்த்தனர்.

ராஜஸ்தான் மக்களுக்கும், ராஜஸ்தான் அரசுக்கும்—சிறப்பாக பஞ்சாயத்து வளர்ச்சித் துறைக்கு—அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். "நாங்கள் தனியார் விவசாயிகளையும் சந்தித்தோம். இடைவிடாதுழைக்கும் உழவர்களும், விவசாயிகளும் தங்கள் நாடு முன்னேறவேண்டும் என்று விரும்புவதை நிரூபித்துக் காட்டி விட்டனர். எங்களுடன் ராஜஸ்தானி விவசாயிகள் சிலர் வரவேண்டுமென்று விரும்புகிறோம். அவர்கள் விரைவில் வருவார்களென்று நம்புகிறோம்." என்று திரு அவஜோவ் கூறினார். திரு புரன்சிங் மற்றும் கெர்லி கதாசி கிராமத்திலுள்ள அவருடைய நண்பர்கள் ஆகியோர் உஸ்பெக்கிற்கு வரும்படி யெனியூலிலுள்ள லெனின் கூட்டுப் பண்ணையிலிருந்து அழைப்பு வருமென்றும் அவர் கூறினார். "இவ்வாறு, இந்திய பஞ்சாயத்திற்கும், சோவியத் கூட்டுப் பண்ணைக்குமிடையே அழைப்பு பரிமாறிக் கொள்ளப்படும் நிகழ்ச்சி, இதுவே முதல் முறையாகும்" என்று திரு அவஜோவ் கூறி முடித்தார்.

மஹாராஷ்டிராவிலுள்ள நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ளது, 'பேல்' என்னும் ஒரு சிறிய கிராமம். அக்கிராமத்தின் மக்கள் தொகை 1,500. அக் கிராமம் சிறியதாயினும் உணவு உற்பத்தியில் அக்கிராம விவசாயிகள் செய்து காட்டிய அரும்பணிகள், நாட்டின் ஒவ்வோரிடத்திலும் அதுபற்றிப் பேசும்படியான தகுதியைப் பெற்று விட்டது. முன்பெல்லாம், நாசிக மாவட்ட விவசாயிகள், காய்கறி களையும், வர்த்தகப் பயிர்களையுமே தங்கள் நிலங்களில் பயிரிட்டு வந்தனர். உணவு உற்பத்தித் திட்டம் ஒன்று, அக்கிராமத்தில் சமீபத்திலே செயல்படுத்தப்பட்டு, நீர்ப்பாசன திட்டங்களும் மாற்றி யமைக்கப்பட்டதால் அவ்விவசாயிகள், இப்பொழுது உணவு உற்பத்தியில் நாட்டம் செலுத்தி வருகின்றனர்.

நாசிக் மாவட்டத்தில் பாயும் பெரிய நதிகளில் 'கிர்ணு' நதியும் ஒன்றாகும். அந்நதி, பேல் கிராமத்தை அரைவட்டமாகச் சுற்றி ஓடுகிறது. ஓர் இடத்தில் நதி ஆழமான குளமாக இருக்கிறது. இதுவரை, அக்குளம் நீரின்றி வற்றியது இல்லை. அங்குள்ள மக்களும், அந்நீரை, நீர்ப்பாசன வசதிக்குப் பயன்படுத்த இதுவரை எண்ணியதும் இல்லை. ஆனால் 1950-ம் ஆண்டில் மஹாராஷ்டிராவில் புகழ் பெற்ற தலைவராகிய திரு பௌசா ஹிரேயாவும், பேல் கிராமத்திலுள்ள முற்போக்கு விவசாயியான திரு காசிராம் அன்னாஜி பாடிலும்தான் அந்நீரை விவசாயத்துக்குப் பயன் படுத்திக் கொள்வது பற்றி சிந்தித் தார்கள்.

#### இறைவைப் பாசனச் சங்கம்

கிர்ணு நதியின் உதவியினால், 300 ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசனம் பெற முடியும் என்பது கண்டறியப் பட்டு, இறைவைப் பாசனச் சங்கம் ஒன்று நிறுவி அச்சங்கம் 1950-ல் பதிவு செய்யப்பட்டது.

அந்நதிக் கரையில், ஒரு 'பம்பு ஹவுஸ்' கட்டப்பட்டது. அதில் 'ஆயில் என்ஜின்'கள் மூன்று பொருத்தப்பட்டன. அவை ஒவ் வொன்றும் 27 குதிரை சக்தி யுடையன. அக்கரையில், 30 அடி நீளமும் 10 அடி அகலமும் உடைய பெரிய தொட்டி ஒன்று கட்டப்பட்டது. அத்தொட்டியிலிருந்து ஆற்று நீர் குழாய்கள் மூலமாக வெளியேற்றப்பட்டு, ஒரு நீர்த் தேக்கத்தில் சேர்த்து வைக்கப்பட்டது. 20,000 அடி நீளமுள்ள வாய்க் கால்கள் மூலம், அந்த நீர், 300 ஏக்கர் நிலத்தில் பாய்ச்சப் பெற்றது.

1953-ம் ஆண்டு, இத்திட்டத்தில் வேலை தொடங்கப்பெற்று, 1954-55-ல் முடிவு பெற்றது. அந்த ஆண்டிலேயே விவசாயிகள், நீர்ப் பாசனத்திற்குத் தேவையான நீரைப் பெற முடிந்தது. குளம் கட்டு வதற்கான பணிக்கு ரூ. 57,000-ம், ஆயில் என்ஜின்களுக்கு ரூ. 42,000 செலவாகியது. இறைவைப் பாசன சங்கத்தின் நேர்முக மேற்பார்வை யிலேயே, அப்பணி நிறைவேறியது. மகாராஷ்டிர அரசு, ரூ. 58,000 கடனாகவும், ரூ. 40,000 நிதி உதவியாகவும் அளித்தது. அச் சங்க உறுப்பினர்களும் தங்கள் மூலதனத்தை ரூ. 20,000 ஆக உயர்த்தினர்.

## செயலற்ற நிலைக்குப் பின்...

1960—61-ம் ஆண்டு வரை சங்கம் வெகுவாக முன்னேறி, அதன் பணியைச் செய்து வந்தது. தீவிர உணவு உற்பத்தித் திட்டத் தாலேயே இங்குள்ள விவசாயிகள் பெரும்பயன் அடைந்ததால் அவர் களெல்லோரும், திட்டத்தின்படி உணவுப் பயிர்களையே பயிரிட வேண்டும். ஆனால் அரசின் கடனை சீக்கிரத்திலேயே தீர்க்கும் பொருட்டு, அவர்கள் உணவுப் பயிர்களை விட்டு விட்டு வர்த்தகப் பயிர்களைப் பயிரிடத் தொடங்கினர். இதனால் அவர்கள் முன்னைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமான விகிதத்தில் கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு கடன் சுமை அதிகரிக்கவே, விவசாயிகள் ஒவ்வொருவராக பின் தங்கி, விவசாயம் செய்வதை நிறுத்தி விட்டனர். அதனால், 1961-62-ம் ஆண்டில் இறைவைப் பாசன சங்கத்திற்கு, நீர்ப்பாசன வேலைகள் இல்லாது போகவே, அச்சங்கம் இறுதியில் மூடப்பெற்றது.

#### நீர்ப்பாசனத் திட்டத்தின் வெற்றி

இச் செயலற்ற நிலை மூன்று ஆண்டுகளுக்கு நீடித்தது. 1965-ம் ஆண்டில் மகாராஷ்டிராவிலுள்ள 25 மாவட்டங்களில், 22 மாவட்டங்கள் பஞ்சத்தால் துன்புற்றன. மாநில அரசும், அம்மக்களும் அப்பஞ்சத்தை எதிர்த்துப் போராடத் தீர்மானித் தனர். பாசனக் கொள்கையை அரசு உடனே மாற்றி, உணவுப் பயிர்களைப் பயிரிடுபவர்களுக்கெல்லாம், இலவசமாக நீர்ப்பாசனம் செய்து தருவதாக ஆணையிட்டது. பேல் கிராமத்தில், இதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இறைவைப் பாசன சங்க உறுப்பினர்கள் இதனால் ஊக்கமடைந்து, அக்கிராமத்திலுள்ள 300 ஏக்கர் நிலத்திலும் கோதுமையைப் பயிரிட்டனர்.

36-ம் பக்கம் பார்க்க

## பாலைவனம் சோலைவனமாயிற்று!

**பத்மஸ்ரீ' விருது பெற்றவரின் சாதனை:**

**நாடே அவரைக் கௌரவித்தது. இந்தியக் குடியரசுத் தலைவரிடமிருந்து 'பத்மஸ்ரீ' விருது பெற்ற அவ் விவசாயினுடைய பெயர், எல்லா செய்தித்தாள்களிலும் இடம் பெற்று, நாடெங்கும் பரவியது. ராஜஸ்தானில் யாரும் அறியாமல் வாழ்ந்து வந்த சாந்திதன் என்னும் அவர், டில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில், 'பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற அவர், இந்தியத் தாயின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவராகி, நாட்டிற்கு இன்றியமையாத தொண்டு புரிந்துள்ளார்.**

அவர் 'பிலதா' என்னும் பஞ்சாயத்துச் சமிதியின் 'பரூண்டா' கிராமத்தைச் சேர்ந்தவர். பாலைவனமாக இருந்த அவரது கிராமம், புராணக் கதையால் மட்டுமே பெயர் பெற்றது. அவரால் பாலைவனம் சோலையாக மாறிவிட்டது. பாலைவன மட்டத்திலிருந்து 100 அடிக்குக் கீழே, தண்ணீர் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டதாக ஒரு செய்தியைப் படித்த அவருக்கு, பாலைவனப் பிரதேசத்தில் நீரை வெளிக்கொணர வேண்டுமென்ற ஆவல் மிகுதியாயிற்று.

"ஒரு கிணற்று நீர், மணமோ, நாற்றமோ இல்லாதிருந்தால், அக் கிணற்றில் வற்றாத நீர் இருக்கும்" என்று, தம் முன்னோர்கள் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருந்த திரு சாந்திதன், அக்கிணற்றினைச் சோதனையிட்டார். அவர் எதிர்பார்த்தபடி தண்ணீர் கிடைக்கப்பெறவே, 110 அடியிலிருந்து நீரைப் பெறுவதற்கு ஒரு நீரேற்றும் என்ஜினைப் பொருத்த எண்ணினார். அப்போது அது ஒரு பெரிய முயற்சி தான்.

கிணற்றின் சுற்றுச் சுவரில் 100 அடி ஆழத்தில் ஓர் அறை கட்டி, அங்கு 'ஆயில் என்ஜீனை'ப் பொருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதற்கென அவர் ஜோத்பூருக்குச் சென்று, 'ஒரு மெக்கானிக்'கைக் கண்டு, விவரங்களை எடுத்துக் கூறி, அவரை அழைத்து வந்தார். அந்த 'மெக்கானிக்'கின் உதவியால் இன்று 10 அல்லது 12 மணி நேரம்வரை, இடைவிடாமல் அக்கிணற்றிலிருந்து நீர் கொட்டிக் கொண்டிருக்கிறது.

### தைரியம் இழக்கவில்லை

இது கண்டு, திரு சாந்திதன் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தார். இதுவரை அவருடைய வேலையில் தைரியம் இழக்கச் செய்த ஏனைய விவசாயிகளும் கூட, இப்போது அவரைப் பின்பற்றினர். திரு சாந்திதன் தனியே நின்று 20 'பீகா' நிலத்தில் நீர்ப்பாசனம் செய்து, கோதுமை, கம்பு ஆகியவற்றைப் பயிரிட்டார்.

இவ்வாறு நீர் வசதி ஏற்பட்டவுடன், 1950-ம் ஆண்டும் 1954 முதல் 1967-ம் ஆண்டு வரையிலும், எதிர் பாராத அளவு விளைச்சல் பெருகியது. தரிசு நிலங்களும் பயிரிடப்பட்டன. தண்ணீர்ப் பஞ்சம் ஒழிந்தது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவே, வறுமையும் அவர்களை விட்டு நீங்கியது.

'டீசல் என்ஜின்'களுடன் பொருத்தப்பெற்ற குழாய்களின் எண்ணிக்கை அதிகமாகியது. 1962-ம் ஆண்டு, கிராமத்தில் மின் வசதி ஏற்பட்டது. 17 கிணறுகளில் 11 கிணறுகளிலிருந்து மின்சார என்ஜின்களால் நீர் இறைக்கப்படுகிறது. இவற்றினுதவியால் 7000 ஏக்கர் நிலங்கள், நீர்ப்பாசன வசதி பெற்றன. 165·5 டன் உரங்கள் பயன்படுத்தப்பட்டன. அருகிலிருந்த கிராமங்களிலிருந்து வந்த தொழிலாளருக்கு ரூ. 2·50 லட்சம் வரை சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. 1950-ம் ஆண்டு வரை, ரூ. 50,000 மட்டுமே வருமானம் பெற்று வந்த அக்கிராமம், இன்று ரூ. 25 லட்சம் வரை வருவாய் பெற்று உயர்வடைந்துள்ளது.

### ஆண்டு தவறாது பஞ்சம்

அதற்கு முன், கிராமத்தின் நிலை பயங்கரமானதாக இருந்தது. ஒவ்வோராண்டும், அவர்களது விருந்தாளியாகப் பஞ்சம் தவறாது வந்துவிடும். அந்நாட்களில், விவசாயிகளும் கால்நடைகளும், தங்கள்

உணவையும், புல்வெளியையும் தேடி, மால்வாவிலிருந்து பம்பாய்க்கு—என் டில்லிக்குக் கூடச்-செல்வதுண்டு. அம்மையினாலும், தொற்று நோய்களினாலும், அவ்விவசாயிகள் ஒவ்வோராண்டும் துன்புறுவர். வசதி உள்ளவர்கள், ஜோத்பூரிலிருந்து 60 மைல்களுக்கும் அப்பாலுள்ள இடங்களுக்குச் சென்று, சிகிச்சை பெறுவதுண்டு. ஆண்டு முழுவதும் ஒரு போகம்தான் பயிர் விளைந்தது. ஆனால் இப்பொழுதோ கிராமத்தின் நிலை வெகுவாக மாறிவிட்டது.

அக்கிராமத்தில் நெல், திராட்சை, கோதுமை, ஏனைய நவதானியங்கள் அனைத்தும் பயிரிடப்படுகின்றன. கிராமத்தின் மக்கள் தொகை 3,760. அதில் 573 பேர் நிலச் சொந்தக்காரர்களாவர். அந்நிலங்கள் அனைத்தும் 7000 பீகா நிலங்களாக ஒன்றுக்கப்பட்டுள்ளது. 7 மைல் நீளமுள்ள தரமான வாய்க்கால்கள் மூலமும், 25 மைல் நீளமுள்ள சாதாரண வாய்க்கால்கள் மூலமும், இவ்வயல்களுக்கு நீர்ப்பாசனம் நடைபெறுகிறது.

### இளைஞர்கள் ஆர்வம்

இக்கிராமத்திற்கு அரசு உதவியும் கிடைத்துள்ளது. 1950-ம் ஆண்டில் ராஜஸ்தான் மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சி துவங்கியது. பரூண்டா கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக திரு சாந்திதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிறு பாசனத் திட்டத்தின் கீழ், அக்கிராமத்திற்கு அரசு உதவி செய்தது. இதைப் பயன்படுத்தி, இளைஞர்கள் வாய்க்கால்கள் கட்டுவதற்கு முன் வந்தனர். பொறுக்கு விதைகளையும், உரங்களையும் அவர்கள் மொத்தமாக வாங்கினர். அவர்களுக்குத் தடையாக இருந்த தண்ணீர்ப் பஞ்சத்தையும் அவர்களே தீர்த்துக் கொண்டனர்.

அக்கிராம மக்களின் சாதனைகள், விவசாயத் துறையில் மட்டுமின்றி, இலக்கியத் துறையிலும் விரிவடைந்துள்ளது. அக்கிராமத்தைப் பற்றிய திரைப்படம் ஒன்று, மத்திய அரசு செய்தி, ஒலிபரப்புத் துறையால், தயாரிக்கப்பட்டு, நாடெங்கும் திரையிடப் பெற்றது.

அக்கிராம மக்களிடையே தனிப்பட்ட முறையில் சண்டையோ, பொருமையோ, சூழ்ச்சி மனப்பான்மையோ இல்லை. மக்களை அரித்து வரும் மூட நம்பிக்கைகள், அறியாமை, மற்றும் பல சமுதாயக் கொடுமைகளைப் பஞ்சாயத்து இளைஞர்கள் களைந்து வருகின்றனர்.

### மூடநம்பிக்கை தளர்ந்தது

பரூண்டா கிராமத்தில் ஒரு மருத்துவ விடுதியும் கட்டப்பட்டுள்ளது. அதைக் கட்டுவதற்கு ரூ. 35,000 நன்கொடையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரே சமயத்தில் 20 நோயாளிகள் தங்கி, சிகிச்சை பெற முடியும். 1955–56-க்கு முன், அக்கிராமத்தில் ஒரே ஒரு தண்ணீர்க் குழாயே இருந்தது. ஆனால் இப்பொழுதோ, 9,000 அடி நீளமுள்ள குழாய் இருப்பதால், குடிப்பதற்கோ, நீர்ப்பாசனத்திற்கோ தண்ணீர் பஞ்சமே இல்லை.

இவ்வாறு கிராமம் முன்னேறியதற்குக் காரணம், அக்கிராம இளைஞர்களுடைய ஒத்துழைப்பும், உறுதியான எண்ணமுமே ஆகும். "முன்னோர்கள் செய்ய இயலாதவற்றைப் பின் வந்தவர்கள் முன்னேற்ற இயலாது" என்னும் மூட நம்பிக்கையைக் களைந்து, முன்னோர்கள் விட்டுச் சென்ற நிலையைக் காட்டிலும், உயர்ந்த நிலையைப் பின்வரும் பரம்பரையும் ஏற்படுத்த முடியும் என்று, பரூண்டா கிராம விவசாயி திரு சாந்திதன் நிரூபித்து விட்டாரன்றோ!

### செயலற்ற நிலைக்குப்பின்......

34-ம் பக்கத் தொடர்ச்சி.

கோதுமைப் பயிருக்குப் பிறகு வீரிய ஒட்டுச் சோளம், வீரிய கம்பு போன்றவற்றைப் பயிரிட்டனர். இவற்றிற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், கிராம சேவக்குகள், வளர்ச்சி அதிகாரிடமிருந்து பெற்று, மகத்தான விளைச்சலைப் பெற்றனர்.

### ரூ.8 லட்சத்திற்கு மேல் வருமானம்.

ரூ. 8 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள 1900 குவிண்டால் ஒட்டுச் சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் பெற்ற வருமானத்தைக் கொண்டு, கூட்டுறவுச் சங்கத்தின் கடனைச் செலுத்திவிடத் அவ்விவசாயிகள் தீர்மானித்தனர், பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்களில் ரூ. 2 லட்சம் முதலீடு செய்யவும் எண்ணியுள்ளனர்.

உறுதியான, சுயமுயற்சியோடு உழைக்கும் விவசாயிகளால்தான், மகாராஷ்டிரம் புதிய சக்தியைப் பெற்றுள்ளது. மாநிலத்திற்கு தேவையான உணவுப் பொருட்களைத் தாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை மகாராஷ்டிரம், இவ்விவசாயிகளின் வாயிலாக நிறைவேற்றி வருகிறது.



Articles reproduced from "Panchayati Raj" on pages: 16, 17 & 33 to 36.
"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து எடுக்கப்பட்டவை : பக்கங்கள் : 16, 17, 33, 34, 35, 36.

"..எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராக, பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள். நாற்றங்கால் பயிர் பச்சைப் பசேலென்று பசுமையாக இருப்பதுமட்டுமல்ல, அதை நன்றாக வளர்த்து, விரிவான வயலில் முறையாக நட்டு, தக்கபடி பாதுகாக்கும்போதுதான் தரமான பயன் கிடைக்கும்" என்று முதலமைச்சர் மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், சென்னை மாநகராட்சிப் பள்ளிப்பிள்ளைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் விழாவில், உரை நிகழ்த்தியபோது கூறினார்.

# 1·44 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகங்கள்

சென்னை மாநகராட்சியின் சார்பில், இலவசப் பாடப் புத்தகம் வழங்கும் விழா ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி மாலை நேருஜி விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

நகர மேயர் திரு இரா. சம்பந்தம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திட்டத்தின் விவரங்களை விளக்கி ஆணையர் திரு அம்பாசங்கர் ஐ. ஏ. எஸ். அறிக்கை வாசித்தார்.

**பொங்கல் புது நாளில் ஆசிரியர் சீருடை**

தலைமை வகித்த தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் தமது தலைமையுரையில், "ஒரு நாட்டின் வளர்ச்சியென்பது. அந்த நாடு தனது அறிவை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தே ஏற்படுகிறது. அறிவு பெறுவதற்கான அடிப்படை, கல்வியே. மாநகராட்சிப் பள்ளிகளில் பெரும்பாலும் ஏழைகளே பயிலுகிறார்கள். ஏழைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடும் மாநகராட்சியின் சிறப்பான முயற்சிக்கு இந்த அரிய விழா, இதுவரை நடைபெறாத விழா, ஏழை மாணவர்களெல்லாம் மகிழ்ச்சி கொள்ளும் விழா, நல்லதொரு எடுத்துக்காட்டாகும். இதுபோன்று மாநகராட்சி மாணவர்களுக்கு சீருடையும் சீக்கிரமே வழங்க வேண்டும், ஆசிரியர்களும் சீருடை அணிய வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்தில் அவர்களுக்குரிய இடத்தைப் பெறமுடியும். அடுத்த பொங்கல் புதுநாளன்று ஆசிரியர்கள் தாங்களே சீருடை வாங்கிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்" என்றார்.

மாநகராட்சியின் வரலாற்றில் இடம் பெறத்தக்க சிறப்பான சீரிய முயற்சி—

மற்ற நகராட்சிகளும் மேற்கொள்ளத்தக்க நல்லதொரு திட்டத்தின் ஆரம்ப விழா.

மாநகராட்சியின் பராமரிப்பில் இன்று இருந்து வருவது 341 பள்ளிகள். இவற்றில் 155 உயர் துவக்கப் பள்ளிகள். இப் பள்ளிகளில் 1,61,840 குழந்தைகள் படிக்கின்றனர். ஆரம்பக் கல்விக்காகும் வருடாந்திரச் செலவு ரூ. 1,40,00,000.

இலவசப் புத்தகத் திட்டத்தினால் 1 முதல் 5 வகுப்புகளில் பயிலும் 1,44,879 பிள்ளைகள் பயனடைவர். இதற்குச் செலவு ரூ. 5,64,925.

இதே பிள்ளைகளுக்கு ரூ. 6.00 இலட்சம் செலவில் இலவச சீருடை வழங்கும் திட்டமும், மாநகராட்சியின் தீவிர கவனத்தில் இருந்து வருகிறது.

1925-ம் ஆண்டில் 500 பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தைக் கொண்டு வருவதில் இம்மாநகராட்சி முன்னோடியாக இருந்துள்ளது. இலவசமாக மதிய உணவு பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை, நாளும் வளர்ந்து, இன்று தினமும் 35,000 பிள்ளைகளுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகின்றது.

மேலும், கல்லூரியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு புத்தகம் வழங்குவது பற்றி அவர் குறிப்பிடும் பொழுது, "குஜராத் யூத் லீக்" என்னும் இளைஞர் கழகம்

'புத்தக 'பேங்க்' ஒன்றை தொடங்க இருக்கிறது. அது ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்களைக் கடனாகக் கொடுத்து, பின் திரும்ப பெற்றுக் கொள்கிறது. ஏழை மாணவர்களுக்கு இந்த வசதி மிகவும் பயன் தருவதாகும். இது நல்ல முயற்சி. இளைஞர் மன்றங்களும், 'லயன்ஸ் கிளப்'பினரும் இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

### இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் பணி

அடுத்துப் பேசிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு முத்துசாமி, தமது சிறப்புரையின்போது, ''சென்னை மாநகராட்சி, புதுமையான இந்த நிகழ்ச்சியைத் தொடங்குவதன் மூலமாக, இந்திய துணைக்கண்டத்துக்கு நல்லதொரு வழிகாட்டியாகிறது. இப்பணிக்கு மற்றவர்களும் மனமுவந்து உதவ வேண்டும். இத்திட்டம் முழுமையாக வளர்ச்சியடைந்து நாட்டிலுள்ள எல்லா பிள்ளைகளுக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்கும் நிலை ஏற்படவேண்டும். தொகை செலவழிப்பது பெரிதல்ல, தொக்கி நிற்கும் தத்துவமே பெரிதாகும்'' என்றார்.

பள்ளிகளின் நிதி நிலைகளைப் பெருக்குவது குறித்து, அவர் குறிப்பிடுகையில் ''குழந்தைகள் இல்லாது தத்தெடுத்து, தங்களது திரண்ட சொத்துக்களுக்கு வாரிசு ஏற்படுத்தும் செல்வந்தர்கள், ஒரு பள்ளிக் கூடத்தையே தத்தாக எடுத்துக் கொண்டால் நிறைய புண்ணியத்தைத் தேடிக்கொள்வார்கள். எல்லோருக்கும் கொடை உள்ளம் இருக்கிறது. கொடுப்பதற்குச் செல்வமும் இருக்கிறது. தியாக எண்ணம்—அறிவை வளர்க்கும் பணிக்குத் தங்களால் இயன்றதை செய்ய வேண்டுமென்ற எண்ணம் வளர வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

### மதிய உணவுக்குச் சேர்ந்த சாகுபடி

அடுத்து மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி சிறப்புரையாற்றினார்.

''சென்னை மாநகராட்சி மதிய உணவு தரும் திட்டத்தை முதன்முதலாக நிறைவேற்றிய பெருமையுடையது. இன்று மாநகராட்சியில் லட்சத்துக்கு மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளில் 35,000 பேர்தான் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் வருகிறார்கள். குறைந்த அளவு 50,000 பேர்களாவது அந்தத் திட்டத்தின்கீழ் வரவேண்டும். அதற்கு மாநகராட்சி மதிய உணவுக்காக தனது தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டத்தைத் தீட்டவேண்டும். இதற்கென மாநகராட்சியின் பொறுப்பில் உள்ள நிலத்தில் நெல் விளைவிக்கும் திட்டத்தை அமுல் நடத்தும் வழிவகை காணவேண்டும்'' என்று அவர் கேட்டுக்கொண்டார்.

### பள்ளிப் பிள்ளைகள—நாற்றங்கால் பயிர்போல

மாணவ மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்கிய பின் முதலமைச்சர் மாண்புமிகு திரு அண்ணாதுரை அவர்கள் தமது சிறப்புரையில் ''நமக்குக் கிடைக்காத நல்ல வாய்ப்பு நமது பிள்ளைகளுக்குக் கிடைத்திருக்கிறது என்று நாம் பெருமைப்பட வேண்டும். இந்த இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதில் இவ்வளவு தொகை செலவாகி இருக்கிறதே என்பதைக் கவனிப்பதைவிட, பள்ளிப் பிள்ளைகளின் கல்வியில் மாநகராட்சி எவ்வளவுதூரம் அக்கறை காட்டுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். கல்வி பெறத் துடிப்போருக்கு, அவர்கள் ஏழை என்பதால் கல்வி தடைப்படாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டியது, நல்லெண்ணம் உடையோரின் கடமையாகும். இந்த வழியைப் பின்பற்றி மற்ற நகராட்சிகளும், தங்கள் வசதிக்கேற்ப, ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் அளிக்க முன்வருவார்களென நம்புகிறேன்,'' என்று குறிப்பிட்டார்.

நமது வாழ்க்கையிலுள்ள துன்பங்களும் துயரங்களும், நலிவும், மெலிவும், நீக்கப்பட்ட எதிர்காலத்தை நான் குழந்தைகளின் உருவில் காண்கிறேன். இந்தப் பிள்ளைகளின் மூலம்தான் நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும். வயலுக்கு நாற்றங்கால் பயிரை வளர்ப்பார்கள். அது போல எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராக பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள். நாற்றங்கால் பயிர் பச்சைப் பசேலென்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல; அதை நன்றாக வளர்ந்து, விரிவான வயலில் முறையாக நட்டு—தக்கபடி பாதுகாக்கும்போதுதான் தரமான பயன் கிடைக்கும்'' என்றார் முதலமைச்சர்.

துணை மேயர் திரு கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

---

## மதிய உணவு தலைமைச் சமையற்கூடம்—உழவுப் பண்ணை

### முன்னோடித் திட்டத் துவக்க விழா

தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் மேற்கொள்ளத்தக்க முன்னோடி திட்டத்தை—பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சேக்காடு என்னும் கிராமத்தில் ஒரு தலைமை சமையற் கூடத்தை, அமெரிக்க 'கேர்' (Care) நிறுவனத்தினர் உருவாக்கி, 52 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3,000 மாணவர்களுக்கு நாள்தோறும் இரு மோட்டார் வாகனங்கள் மூலமாக மதிய உணவளிக்கும் திட்டத்தை—ஆகஸ்ட் 15 சுதந்திர நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை ஆரம்பித்து வைத்தார். இந்த சமையற் கூடத்தைச் சார்ந்த விவசாயப் பண்ணைக்கு 'கேர்' நிறுவனத்தினர் வழங்கிய ரூ. 60,000 பெறுமானமுள்ள புதுமுறை விவசாயக் கருவிகளை மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி ஏற்றுக்கொண்டார். மாண்பு மிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் விழாவுக்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி, மின் விளக்கேற்றினார். மாண்புமிகு அரிஜன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சென்னை டி. வி. எஸ்.—அஹமது நிறுவனத்தினர், சமையற் கூடத்திற்கென நன்கொடையாக வழங்கிய பாத்திரங்களைப் பெற்றுக் கொண்டார்.

ஆரம்பத்தில், இடை நிலைக் கல்வி நெறியாளர் திரு. எம். டி. பால், 'கேர்' நிறுவனத்தாரின் பயன் மிகுந்த பணிகளை எடுத்துச் சொன்னார். வட்டார எம். எல். ஏ. திரு டி. ராஜரத்தினம் அனைவரையும் வரவேற்றார். இவ்விழாவில், சென்னை, அமெரிக்க கான்சல் ஜெனரல் திரு டாக்டர் ராபர்ட் கால்டுவெல், புதுடில்லி 'கேர்' இயக்குநர் திரு ஜார்ஜ் டெய்லர் ஆகியோர் கலந்து கொண்டனர். சென்னை 'கேர்' நிறுவனத்தின் நிர்வாகி திரு பில் ஜான்ஸ்டன், வருகை தந்திருந்தோர் அனைவருக்கும் நன்றி கூறினர்.

(நிகழ்ச்சி மேல் விவரம் அடுத்த இதழில்)

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

## உள்ளாட்சி நிறுவனங்கள்—பெயர்ப்பலகைகளை தமிழில் எழுதிப் பொருத்துதல்—விளக்க உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Local Bodies—Display of name boards in Tamil—Instructions—Issued.

உள்ளாட்சி நிறுவனங்களின் அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சிகளால்நடத்தப்படும் நிறுவனங்களின் பெயர்களை அறிவிக்கும் பெயர்ப்பலகைகளில் ஒரு சீரான முறை இல்லையென்பது தெரிகிறது. இவற்றில் ஒருமித்த முறையை கையாளுவதற்காக, 1920-ம் ஆண்டு தமிழக மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள், நகரிய அலுவலகங்களின் பெயர்ப்பலகைகள் தமிழிலேயே அமையவேண்டியது பற்றியும், அவற்றிலெல்லாம் ஒருமித்த சொற்களே பின்பற்றப்பட வேண்டுமென்பது பற்றியும் அரசு பரிசீலனை செய்தது.

(2) அதற்கேற்ப. முனிசிபாலிடிகள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், டவுன்சிப்புகள் மற்றும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள இதர நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் தமிழில் மட்டுமே இருக்க வேண்டுமென்றும், அவற்றிற்காக கீழ்க்கண்ட சரியான தமிழ்ச் சொற்களே கையாளப்படவேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பிக்கிறது.

முனிசிபாலிடி—நகராட்சி.
முனிசிபல் கௌன்சில்—நகராட்சி மன்றம்.
பஞ்சாயத்து யூனியன்—ஊராட்சி ஒன்றியம்.
பஞ்சாயத்து யூனியன் கௌன்சில். } = ஊராட்சி ஒன்றியக் குழு.
பஞ்சாயத்து டவுன்—பேரூராட்சி.
டவுன் பஞ்சாயத்து—பேரூராட்சி மன்றம்.
பஞ்சாயத்து கிராமம்—ஊராட்சி.
கிராமப் பஞ்சாயத்து—ஊராட்சி மன்றம்.
டவுன்ஷிப்—நகரியம்
டவுன்ஷிப் கமிட்டி—நகரியக் குழு.

3. அதற்கேற்ப, நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகரியங்களின் அலுவலகங்கள் மற்றும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள இதர நிறுவனங்களில் தற்போது பொருத்தப் பெற்றுள்ள பெயர்ப் பலகைகளெல்லாம் நீக்கப்பட்டு, அவ்விடங்களில், மேற்கண்ட பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள, அவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொற்களைத் தாங்கிய பெயர்ப்பலகைகள் பொருத்தப்படுவதை கவனிக்குமாறு நகராட்சிகளின் ஆய்வாளர், கிராம வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உள்ளாட்சிகளுக்குச் சொந்தமான 'ஜீப்'களிலும் மற்றும் இதர வாகனங்களிலும் எழுதப்பெற்றுள்ள உள்ளாட்சிகளின் பெயர்கள்கூட, தமிழில் மாற்றப்படவேண்டும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 25—7—1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 1352)

---

## ஊத்துக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் என மாற்றுதல்—ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## Panchayat Union—Chingleput Development District—Uthukottai Block and Panchayat Union—Change of name as Ellapuram Panchayat Union—Orders—Issued.

ஊத்துக்கோட்டை வட்டாரத்தின் தலைமையிடம் பெரிய பாளையத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று பொதுத் (ஆர்.டி.பி.) துறையின் 1959-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 20-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 948-ல், அரசு ஆணை பிறப்பித்தது. பெரியபாளையத்திலேயே தலைமையிடம் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தும், அவ்வூராட்சி ஒன்றிய அலுவலகம், பெரியபாளையம் கிராமத்தை அடுத்த, எல்லாபுரம் கிராம எல்லைக்குள் அமைக்கப்பட்டது. அவ்வூராட்சி ஒன்றியக் குழுவின் பெயரை, "பெரிய பாளையம் ஊராட்சிக் குழு (இருப்பு) எல்லாபுரம்" என்று மாற்ற வேண்டும் என்று ஊத்துக்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழு யோசனை தெரிவித்துள்ளது. இது ஒரு மாதிரியாகத் தோன்றுவதால், இந்த ஊராட்சி ஒன்றியத்தை, பெரியபாளையம் ஊராட்சி ஒன்றியம் என அழைக்கலாமா என்பதை, அந்த ஊராட்சி ஒன்றியம், மாவட்ட வளர்ச்சி மன்றத்தை மறுபடியும் கலந்து

ஆலோசிக்குமாறு, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுககொள்ளப்பட்டார். ஊத்துக்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழுவும், வடக்கு செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சிக் குழுவும், ஊத்துக்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழுவின் பெயரை, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியமாக, மாற்றுவதற்கு, தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளதென, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அதற்கேற்ப, ஆணைகள் பிறப்பிக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(2) ஊத்துக்கோட்டை வட்டாரம் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயர், முறையே எல்லாபுரம் வட்டாரம், ஊராட்சி ஒன்றியம் என மாற்றப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1159-ன் சுருக்கம்.)

———(o)———

## ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றியங்களால் நிர்வகிக்கப்படும் பள்ளிகள், இதர நிறுவனங்களில் திருவள்ளுவரின் உருவப் படங்களை அமைத்தல்—பரிந்துரைக்கப்படுகிறது.

## Portraits—Panchayats and Panchayat Union Offices, Schools and other institutions run by Panchayat Unions—Installing of portraits of Thiruvalluvar —Commended.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், ஊராட்சிகளில் பணி புரியும் எல்லா அலுவலர்கள், மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு திருக்குறள் பற்றிய நல்லுணர்வை ஏற்படுத்துவதற்காக, எல்லா ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், ஊராட்சிஅலுவலகங்கள், மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நிர்வகிக்கப்பட்டுவரும் பள்ளிகள், மற்றும் இதர நிறுவனங்களில் திருவள்ளுவரின் அதிகாரப் பூர்வமான உருவப்படத்தை மாட்டி வைக்குமாறு அரசு பரிந்துரைக்கிறது. இதற்கேற்றவாறு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) இதற்காகும் செலவை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் பொது நிதிகளிலிருந்து எடுத்துக் கொண்டு, அச்செலவை, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 139 (4) (iii)-ன் கீழ் எதிர் பாராத செலவாக கருதிக் கொள்ளவேண்டும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1193-ன் சுருக்கம்.)

—o—

## கிராமத் தொழில்கள் திட்டம்—நான்குநேரி, ஓமலூர், ஸ்ரீபெரும்புதூர் கிராமத் தொழில்கள் திட்ட செயற் குழுக்கள்—பதவிக்காலம் - முந்தைய உத்தரவுகள் - மாற்றப்படுகின்றன.

## Rural Industries Project—Project Committe for Rural Industries-Nanguneri, Omalur and Sriperumbudur—Term of office—Previous Orders—Modified.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1129-ல் (இவ்வாணையின் தமிழாக்கம் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் "கிராம நலம்" இதழ், பகுதி 2-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது), நியமிக்கப்பட்ட, நான்குநேரி ஓமலூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களிலுள்ள கிராமத் தொழில்கள் திட்டங்களுக்குரிய திட்டச் செயற்குழுக்களின் பதவிக் காலம் 31—8—1967-க்குள் (31—8—1967-ம் சேர்த்து) முடிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 43775-ன் சுருக்கம்.)

## மகளிர் நலத்துறை—குழந்தைகள் நலம்—"பால்வாடிகள்" பெயர் 'குழந்தைகள் காப்பக'மாக மாற்றுதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## Women's Welfare Department—Child Welfare Balwadis—Nomenclature change to 'Kuzhanthaigal Kappagam'—Ordered.

"பால்வாடிகள்" என்னும் பெயர் "குழந்தைகள் காப்பக"மாக மாற்றப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

2. அந்த நிலையங்களுடன் சம்பந்தமான அலுவலகக் கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்திலும், அந் நிலையங்களின் பெயர்ப் பலகைகளிலும் இந்தத் திருத்தப்பட்ட பெயரே கையாளப்பட வேண்டும்.

மகளிர் நலத்துறை இயக்குநர், இது சம்பந்தமாகத் தொடர்புள்ளவர்களுக்கெல்லாம் விளக்க உத்தரவுகளை அனுப்ப வேண்டும்.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1–5–1967-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1032-ன் சுருக்கம்).

---

## சமுதாய அபிவிருத்தித் திட்டம்—கிராமத் தொழில்கள், கிராம கலைகள், கைவினைத் தொழில்கள், தொழில்கள்—மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயத்தால் நடத்தப்படும் தொழில் பிரிவுகளை மாற்றுதல்—சொத்துக்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றுதல் பற்றி—விளக்க உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Community Development Programme—Village Industries—Rural arts, Crafts and Industries—Transfer of Industrial units run departmentally by the State Khadi and Village Industries Board under the Rural Arts, Crafts and Iudustries Programme—Assets—Transfer to Panchayat Unions—Instructions—Issued.

கிராமக் கலைகள், கைவினைத் தொழில்கள், தொழில்கள் திட்டத்தின் கீழ் (Rural Arts, Crafts and Industries) அனுமதிக்கப்பட்டு, மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயத்தினால் நடத்தப்படும் தொழிற் பிரிவுகளின் இயந்திரங்களையும், கருவிகளையும், ஊராட்சி ஒன்றியங்கள், விரும்பிக் குறிப்பாகக் கேட்டால், அவற்றை இலவசமாக சம்பந்தப்பட்ட ஒன்றியங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 30–5–1962-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1250-ன் ஏழாவது பத்தியில் உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பிரிவுகளைக் கொண்ட கட்டிடங்கள், மூலப் பொருட்கள், முடிக்கப் பெற்ற பொருட்கள் ஆகியவற்றை மாற்றுவதற்கு இந்த ஆணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப் படவில்லை.

2. மாநிலக் கதர், கிராமத்தொழில் ஆயம், கீழ்க்கண்டவற்றைத் தெளிவு படுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளது:

(அ) சம்பந்தப்பட்ட பிரிவுகளை உள்ளடக்கிய கட்டிடங்களை, ஊராட்சி ஒன்றியங்களுக்கு இலவசமாக மாற்றப்பட வேண்டுமா என்றும்—

(ஆ) அந்தப் பிரிவுகளில் கிடைக்கும் மூலப் பொருட்கள், முடிக்கப் பெற்ற பொருட்களை "நடைமுறைச் செலவு மூலதனக் கடனுக்காக" (Working capital) கருதி, அக் கடனைத் தவணைகளில் திரும்பப்பெற வேண்டுமா என்றும்;

(இ) மானியங்களைப் பெறும் நிறுவனங்களைப் பற்றி, நிதித் துறையின் 30-12-1960-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1494-லும், நிதித்துறையின் 28-3-1962-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 336-லும் கோரியுள்ளவாறு, ஊராட்சி ஒன்றியங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமா என்றும் தெளிவு படுத்தும்படி மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயம் கேட்டுக் கொண்டுள்ளது.

3. கவனமாகப் பரிசீலனை செய்த பின்—

(அ) அரசு மானியத்தை, ஆயம் அல்லது தொழில் வணிகத் துறை இயக்குநர் மூலமாகப் பெற்று, அவற்றால் பொருத்தப்பட்ட, மின் விசிறி, விளக்கு போன்ற கருவிகளுடன் (Fittings and Fixtures)சேர்ந்து, இந்தப் பிரிவுகளை உள்ளடக்கிய கட்டிடங்களையும்—அவற்றிற்கான நடைமுறை விதிகளை அனுசரித்த பிறகு—சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயம், இலவசமாக மாற்றவேண்டும். அரசு மானியத்தைக் கொண்டு, பொருத்தப்பட்ட மின் விசிறி,விளக்கு போன்ற பொருட்கள், வாடகை கட்டிடங்களிலிருந்தாலும், அவற்றையும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்ற வேண்டும் என்றும்—

(ஆ) கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1-7-1964-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1378-ல் குறிப்பிட்டுள்ளபடி, பிரிவுகளிலுள்ள மூலப் பொருட்களையும், முடிக்கப் பெற்ற பொருட்களையும், நடை முறைச்செலவு மூலதனக் கடனாகக் கருதினால், அவற்றை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்ற வேண்டும் என்றும்—

(இ) மேற் கூறப்பட்ட சொத்துக்களை மாற்றுவது என்பது இந்த ஆணையின் நான்காவது பத்தியிலுள்ள

நிபந்தனைகளுக்கு மேலும் உட்பட்டிருக்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பிக்கிறது.

4. சொத்துக்களை மாற்றும்போது கீழ்க்கண்டவை பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது:

(அ) தற்போது இயங்கி வரும் பிரிவுகளை ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் விரும்பினால், அவற்றிற்கு அந்தப் பிரிவுகளை மாற்ற வேண்டும். வேலை செய்யாத அல்லது மூடப்பட்ட பிரிவுகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றுவது கூடாது.

மூடப்பட்ட அல்லது வேலை செய்யாத பிரிவுகளின் சொத்துக்களை விற்று, கடனைத் தீர்த்து விட்டு, அவற்றின் வரவுகளை மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயம், அரசாங்கக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

ஆ (i) மூலப் பொருட்கள் அல்லது முடிக்கப் பெற்ற பொருட்களின் விலை குறைவாலும், அழிவாலும் ஏற்படக்கூடிய நஷ்டங்களை கணக்கில் கொள்வதற்கு ஏற்ற வகையில், அவைபற்றி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தனியே பட்டியல் ஒன்றைத் தயார் செய்து, அதை ஆமோதிக்கும் வகையில், மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி, அதில் கையொப்பமிட வேண்டும்.

குறிப்பு.—ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதிகளிலிருந்து, மூலப் பொருள், முடிக்கப்பெற்ற பொருட்கள் வாங்கப்பெற்றால், அவை சாமான் பட்டியலில் இடம் பெறத் தேவையில்லை.

(ii) சாமான் பட்டியலின் நகல்களை, ஆணையாளரும், மாவட்டக் கதர், கிராமத் தொழில் அதிகாரியும், தங்களுக்கென வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் பிற்காலத்தில் பொருட்களின் அளவு பற்றியோ, அழிந்து போன அல்லது காணுமைற்போன பொருட்கள் பற்றியோ விவாதம் ஏற்பட வாய்ப்பு இராது.

குறிப்பு.—மாவட்டக் கதர், கிராம தொழில்கள் ஆயம், இம் மாற்றத்தை மேற்பார்வையிட்டு, சொத்துக்கள், கடன்களின் மாற்றல் தொடர்புள்ள விபரங்களுக்குப் பொறுப்பு ஆகின்றது.

(iii) மூலப் பொருட்களையும், முடிக்கப் பெற்ற பொருட்களையும் மாற்றும் பொழுது, அவை உதவித் தொகையிலிருந்து வாங்கப் பெற்றனவா அல்லது "நடைமுறைச் செலவு மூலதனக் கடனி"லிருந்து (working capital loan) பெறப் பட்டனவா என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் தனித் தனியே கணக்கு எழுதி வைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களால் அங்கீகரிக்கப்பட்டு, விடுவிக்கப் பட்ட "நடைமுறைச் செலவு மூலதனக் கடனு"டன் அவற்றைத் திருப்பி அனுப்பும் பணம் கலந்து விடாமலிருக்க இவ்வாறு செய்ய வேண்டும்.

(iv) மாற்றப்பட்ட பிரிவுகளிலிருந்து திரும்பப்பெறும் "நடைமுறைச் செலவு மூலதனக் கடன்" தொகையைக் கதர் ஆயம் மூலம், அரசுக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்ட பிரிவுகளிலுள்ள இயந்திரங்கள், கருவிகளின் தற்போதைய நிலையையும், உபரிப் பாகங்களையும் கொண்ட பட்டியலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயமும், மாவட்டக் கதர் கிராமத் தொழில் அதிகாரியும் அச்சாமான் பட்டியலின் நகல்களை வைத்துக் கொள்ள வேண்டும். பொருட்களை மாற்றும் பணி முழுவதும், மாவட்டக் கதர், கிராமத் தொழில் அதிகாரியின் நேரடி மேற்பார்வையின்கீழ் நடைபெற வேண்டும். ஏதேனும் இயந்திரம் அல்லது கருவி பயனில்லாது போகுமானால், அதுபற்றி ஒரு குறிப்பெடுத்து, மாநிலக் கதர், கிராமத் தொழில் ஆயம், அதைக் கண்டனம் செய்யவோ, பைசல் செய்யவோ வேண்டும்.

5. இந்த ஆணையில் அடங்கியுள்ளவற்றை எல்லா ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் கவனத்திற்கும் கொண்டு வரும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இவ்வாணையில் அடங்கியுள்ளவற்றோடு, தகுந்த விளக்க உத்தரவுகளையும், மாவட்டக் கதர், கிராமத் தொழில் அதிகாரிகள், மற்றும் கதர், கிராமத் தொழில்கள் இயக்குநர் ஆகியோர் கவனத்துக்குக் கொண்டுவரும்படி, மாநிலக் கதர், கிராமத் தொழில்கள் ஆயம் செயலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

* * * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 26-5-1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 1011-ன் சுருக்கம்.)

———

## சமுதாய வளர்ச்சித் திட்டம்—நிதி, திட்ட சாதனைகள்—பருவ அறிக்கை நிர்ணயித்தல்—உத்தரவுகள் மாற்றப்பட்டு, விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Financial and Physical achievements—Prescription of a periodical—Revised—Insturctions—Issued.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 18-11-1965 தேதியிட்ட அரசு ஆணை எண் 2459-ல் (இவ்வாணையின் தமிழாக்கத்தை 1966-ம் ஆண்டு மார்ச்சு மாத 'கிராம நலம்', பகுதி II-ல் காண்க). அரசு சில பருவ அறிக்கைகளை நிர்ணயித்து, அதற்கேற்ப படிவங்களையும் வரையறுத்தது. அப்படிவத்தில் நிதி, திட்ட சாதனைகள் (financial and physical achievements) பற்றிய அடிப்படை தகவல்களுடன், மூன்றுவது

ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், நிறை வேற்றப்பட்ட வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் கொண்ட தகவல்களையும், மேற்கண்ட ஆணை யினுள்ள 'அமைந்த படிவத்தில், (pro forma) குறிப்பிட்டு, அவற்றை கிராம வளர்ச்சி இயக்கு நருக்கு அனுப்பிவைக்க வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உத் தேசிக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல் காரணமாக காலாண்டு முன்னேற்ற அறிக்கையிலுள்ள அட்டவணையை, திருத்தியமைக்க வேண்டிய அவ சியம் ஏற்பட்டுள்ளது என்பதை, கிராம வளர்ச்சி இயக்குநர், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். எனவே, இதை ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப, நிதி, திட்ட சாதனைகளைப் பற்றி தெரி விப்பதற்காக, அட்டவணைகளைத் திருத்தியமைத்து, அவ்வாறு திருத் தியமைக்கப்பட்ட புதிய படிவங்களை, அரசிற்கு அனுப்பியுள்ளார். திருத்தப்பட்ட அமைந்த படி வத்தில், புதிய காலாண்டு அறிக்கையை, 31-12-1966 உடன் முடிவடையும் காலாண்டிலிருந்து செயல்படுத்தலாம் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(2) முன்புள்ள படிவங்களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களைத் தொகுக்கும்போது, அவையனைத்தும் திருத்தியமைக்கப் படவேண்டுமென்றும், மேலும் பல தகவல்களைச் சேகரிப்பதற்கு அப்படிவங்களில் வழிவகைகள் செய்ய வேண்டுமென்றும் தாம் உணர்வதாக, கிராம வளர்ச்சி நெறியாளர் கூறியுள்ளார். எனவே, அந்த அமைந்த படிவங்களை, அதற்கேற்றவாறு மாற்றியமைத்த துடன், கால தாமதத்தை தவிர்ப் பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதம் 31-ம் தேதி யன்றுள்ள அடிப்படைத் தகவல் களை, ஒவ்வொரு ஆண்டும் அனுப்ப வேண்டுமென்று எல்லா ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்களுக்கு, கிராம வளர்ச்சி இயக்குநர் விளக்க உத்தரவுகள் பிறப்பித்துள்ளார். இது சம்பந்தமாக தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று, அவர், அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(3) இந்நிலையில், கிராமவளர்ச்சி இயக்குநரின் சிபாரிசுகளை அரசு ஏற்று கொண்டு, அதற்கேற்ப, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 18-11-1965 தேதியிட்ட அரசு ஆணை எண் 2459-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு களை தள்ளிவைக்கும் வகையில், இவ்வாணையின் இணைப்பு I-ல் உள்ள திருத்தப்பட்ட படிவத்தில், ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் கள், காலாண்டு அறிக்கைகளை, சென்னை 9-ல் உள்ள, கிராம வளர்ச்சி நெறியாளருக்கு அனுப்ப வேண்டுமென்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது. அறிக்கையின் நகல் ஒன்றை, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதே சமயத்தில், அனுப்பவேண்டும். பருவ அறிக்கை கள் சமர்ப்பிப்பதற்காக, நிர்ண யிக்கப்பட்டுள்ள கால வரம்புகள், தவறுது பின்பற்றப்படவேண்டும்.

| காலம். | சமர்ப்பிக்க வேண்டிய இறுதி தேதி. |
|---|---|
| 1 | 2 |
| டிசம்பர் 31-ம் தேதி யுடன் முடிவுறும் காலாண்டு. | அடுத்த ஆண்டு ஜனவரி 31-ம் தேதி. |
| மார்ச்சு 31-ம் தேதி யுடன் முடிவுறும் காலாண்டு. | ஏப்ரல் 30-ம் தேதி. |
| ஜூன் 30-ம் தேதி யுடன் முடிவுறும் காலாண்டு. | ஜூலை 31-ம் தேதி. |
| செப்டம்பர் 30-ம் தேதியுடன் முடி வுறும் காலாண்டு. | அக்டோபர் 31-ம் தேதி. |

(4) அடிப்படை தகவல்களை சேக ரிப்பது சம்பந்தமாக, கிராம வளர்ச்சி நெறியாளர் ஏற்கெனவே பிறப்பித்த விளக்க உத்தரவுகள் கொண்ட குறிப்பாணை எண் 155422/எஸ்5/66, தேதி 5-10-1966-க்கு ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்களின் கவனம் ஈர்க்கப் படுகிறது. அதில் கூறியுள்ளபடி ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதம் 31-ம் தேதியன்றுள்ள அடிப்படையின் மீது, இவ்வாணை யின் இணைப்பு II-ல் உள்ள திருத்தப்பட்ட படிவத்தில், அடிப் படைத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அவை, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்கு முன்பு, கிராம வளர்ச்சி நெறி யாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

(5) கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 18-11-1965 தேதியிட்ட அரசு ஆணை எண் 2459-ல் ஏற்கெனவே கூறியுள்ளபடி, ஒவ் வொரு காலாண்டும், முதலமைச்ச ரின் தலைமையில் கூடும் மாநில வளர்ச்சிக் குழுவில், இத்தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது; மேலும் இந்திய அரசின் திட்டக் குழுவிற்கு மாநில அரசு அனுப்பும் அறிக்கைகளுக்கும் கூட, இத் தகவல்கள் அடிப்படையாக அமை கின்றன. திட்டங்களை மதிப்பிடு வதற்குமட்டுமின்றி, கொள்கைகளை உருவாக்குவதற்கும் கூட, இத் தகவல்கள் பயன்படுத்தப்படும். எனவே, இக்காலாண்டு அறிக்கை களை காலம் தவறுது, ஒழுங்காக சமர்ப்பிக்கும் விஷயத்திற்கு, அரசு அதிக முக்கியத்துவம் அளிக் கிறது. இந்த அறிக்கைகள் சரி யாகவும், கவனமாகவும் தயாரிக்கப் படவேண்டிய அவசியத்தையும், அப்போதுதான் அதில் உள்ள தகவல் கள் முடிவு பெற்றதாகவும், அதிகாரப் பூர்வமானதாகவும், சரியான தாகவும் இருக்கும் என்பதையும் வலியுறுத்திக் கூற அரசு விரும்பு கிறது. இப்பருவ அறிக்கையை அனுப்பிய பிறகு, கூடும் ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில், இவ்வறிக்கையின் நகல் ஒன்றை, உடனே ஊராட்சி ஒன்றிய ஆணை யாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

* * *

(இவ்வாணையும், இணைப்புகளும் 17 பக்கங்கள் கொண்டது. அவை அச்சடிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் மேலும் விவரங்களைக் காண்க.)

**(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 22-12-1966 தேதியிட்ட அரசு ஆணை எண் 2919-ன் சுருக்கம்.)**

வருங்காலச் சேமிப்பு நிதி—உள்ளாட்சிகளால் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்படும் வருங்கால சேமிப்பு நிதியை முதலீடு செய்யும் முறையில் மாறுதல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Provident Fund—Provident Fund established and maintained by Local Authorities—Method of investment—Change in procedure—Orders issued.

சென்னை மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி மன்றம், (Town Panchayat) அரசு இடைநிலை பள்ளிகள் (மாவட்டக் கழகப் பள்ளிகள்) போன்ற உள்ளாட்சிகளில் பணி புரிபவர்கள், தற்பொழுது, வருங்காலச் சேமிப்பு நிதிப் பயன்களை அடைவதற்குரியவராவர். அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சந்தாக்களும், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவற்றால் அளிக்கப்படும் நன்கொடைத் தொகைகளும், அனுமதிக்கப்பட்ட ஈட்டுப் பத்திரங்கள் (Securities) ஏதாவது ஒன்றில் இப்போது முதலீடு செய்யப்படுகின்றன. முதலீடு செய்யப்பட்டுள்ள வருங்காலச் சேமிப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டிக்கு ஏற்ப, வருங்காலச் சேமிப்பு நிதி சந்தாதாரர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வட்டியளிக்கப்படுகிறது. பல்வேறு உள்ளாட்சிகளும் தங்கள் வருங்காலச் சேமிப்பு நிதித் தொகையை பல்வேறு ஈட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வதால், ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனத்துக்குரிய வருங்கால சேமிப்பு நிதியின் வட்டி விகிதமும் மாறுகிறது. வருங்காலச் சேமிப்பு நிதித் தொகையை உள்ளாட்சி அதிகாரிகள் வட்டி கொடுக்கும் ஈட்டுப் பத்திரங்களில் உடனடியாக முதலீடு செய்யத் தவறினால் அதிலிருந்து கிடைக்கும் வட்டி குறைந்துவிடுவதுடன் அதற்கேற்ப சந்தாதாரர்களுக்கு அளிக்கப்படும் வட்டி விகிதமும் குறைந்துவிடுகிறது.

2. வருங்காலச் சேமிப்பு நிதியை, உள்ளாட்சி நிறுவனங்கள் தற்போது முதலீடு செய்யும் முறையை மாற்றி அந்நிதி கருவூலத்தில் வைப்புத் தொகையாக் (Treasury Deposit) குவதன் மூலம் அந்நிதியைப் பயன்தரும் முறையில் மாற்றக் கூடுமா என்பது பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருந்தது. மாநில அரசின் பொதுக் கணக்கில், அந்த வருங்காலச் சேமிப்பு நிதி வைக்கப்பட்டால் அதற்கு, அரசின் வருங்காலப் பொதுச் சேமிப்பு பொது நிதிக்கு கிடைக்கும்வட்டி விகிதத்தைப் போன்ற ஒரு குறிப்பிட்ட வட்டி விகிதம் எல்லா உள்ளாட்சி மன்றங்களுக்கும் கிடைக்க வாய்ப்பு ஏற்படலாம். எல்லாவற்றையும் அரசு கவனமாகப் பரிசீலனை செய்த பிறகு, சென்னை மாநகராட்சி நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், அரசு இடைநிலைப் பள்ளிகள் (மாவட்டக் கழக பள்ளிகள்) ஆகியவற்றில் பணிபுரிடவர்களில் சம்பளத்திலிருந்து வருங்காலச் சேமிப்பு நிதிக்காக கழிக்கப்பட்ட தொகையுடன் உள்ளாட்சிகளால் (சென்னை மாநகராட்சியைத் தவிர) அளிக்கப்படும் நன்கொடைத் தொகையையும் சேர்த்து, அவை மாநில அரசிடம் 'T. Deposits and Advances-Part I. Deposits Bearing Interest-(B) "Other Deposits Accounts Other Deposits, Provident Fund Deposits of Corporation, Municipal, Panchayat Unions and other Local Board Employees". என்ற கணக்குத் தலைப்பில் கருவூலத்தில் வைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது. இந்த வருங்காலச் சேமிப்பு நிதி வைப்புகளைக் கணக்கிடுவதற்கு, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 235-ல் கூடுதல் வருங்காலச் சேமிப்பு நிதிக்காக வரையறுக்கப்பட்டுள்ள கணக்கு முறைகளை, தக்க மாற்றங்களோடு பின்பற்ற வேண்டும்.

* * * *

6. இவ்வுத்தரவுகள் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் அதாவது ஜூன் மாத ஊதியம் ஜூலை மாதம் முதல் தேதி அளிக்கப்படுவதிலிருந்து அமுலுக்கு வரும்.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 533-ன் சுருக்கம்)

---

### இந்த இதழில்


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | விடுதலை நாளில் முதலமைச்சர் சிறப்புரை | 2 |
| 2. | கோட்டையில் தமிழ் முழக்கம் .. | 10 |
| 3. | மாவட்ட ஆட்சியாளர் மாநாடு .. .. | 25 |
| 4. | சீரணி துவக்க விழா .. .. .. | 28 |


### அடுத்த இதழில்...

1. சீரணியின் துப்புரவுப் பணி.
2. மதிய உணவு தலைமைச் சமையற்கூடத் திட்டம்.
3. ஆசிரியர் தினம்.
4. நகர்ப்புறங்களுக்கும் படி அரிசி


வெளியிடுபவர் :
திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.


ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.




1, 3 : 'பொருளாதார வளர்ச்சி, திட்டமிடுதல்' பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆசிய நாட்டு அலுவலர்கள் 35 பேர் அண்மையில் சென்னை வந்திருந்தபோது 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியன்று கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து உரையாடினர். (விவரம் 27-ம் பக்கம்) இக்குழுவினர் பூவிருந்தவல்லி வட்டாரத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தையும் பார்வையிட்டனர்.

2 : சென்னை மாதவரததை அடுத்த குமரப்பபுரத்தில் பனை வெல்லத் தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்கு 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியில், மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி, அடிக்கல் நாட்டினர். விழாவுக்கு, சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு எஸ். மாதவன் தலைமை வகித்தார். (பனை ஓலைப் பொருள்களை அமைச்சர்கள் பார்வையிடுகின்றனர்.)






# "தீ விபத்தால் வாடும் மக்களுக்கு உற்ற உறவினராய் உதவுவோம்"

REGD. NO. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1967







''செந்தணல் அணுகாச் செம்மை மிகு குடில்களைக் கட்டிக் கொடுக்க, அரசு தீர்மானித்துள்ளது .... .

முதற்படியாக ஒரு கோடி ரூபாய் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது''

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து (வானொலிப்பேச்சு)